
# நினைவே இல்லையா நித்யா



இந்துமதி




# நினைவே இல்லையா நித்யா?

## இந்துமதி

## 1

"உங்களுக்கு நினைவில்லை...?"

"இல்லை."

"நீங்கள் யார் என்பது புரியவில்லை..?"

"புரியவில்லை."

"பெயர்கூட ஞாபகத்திற்கு வரவில்லை...?"

"வரவில்லை."

"இப்போது எங்கே இருக்கிறீர்கள் என்று தெரிய வில்லை...?"

"தெரிகிறது."

"எங்கே?"

"நர்ஸிங் ஹோமில்."

"எந்த நர்ஸிங் ஹோம்?"

"அது தெரியவில்லை."

"எந்த ஊர் என்று தெரிகிறது?"

"ம்...மெட்ராஸ்."

"என்னைத் தெரிகிறது?"

"தெரிகிறது."

"நான் யார்?"

"டாக்டர்."

இதெல்லாம் மட்டும் எப்படித் தெரிந்தது என்று கேட்க வாயெடுத்து சட்டென்று நிறுத்திக் கொண்டான்

ராம்குமார். இது என்ன கேள்வி என்று தோன்றியது. பார்த்த உடனே இதெல்லாம் புரிகிறபோது என்ன கேள்வி...

மெல்ல நிமிர்ந்து அவளது முகத்தைப் பார்த்தான். நல்ல முகம், வெள்ளை வெளேரென்று நிறம். நீளநீளமாய் அழகான கண்கள். இயல்பான சிவப்பின் சின்ன உதடுகள். நர்ஸ் பின்னிவிட்ட இரட்டைப் பின்னல்கள். கட்டிலை நிறைக்கிற உயரம்...

இந்த அழகும், உயரமும், உடம்பும்தான் அண்ணாவை அடித்துப் போட்டுவிட்டது. வேலை கிடைத்துப் போனவனை அங்கேயே நிறுத்திக் கொண்டது. ஒரு வரிக் கடிதத்தில் தன் கல்யாணத்தை முடித்துக் கொள்ள வைத்தது.

'எனக்குக் கல்யாணமாகி விட்டது. இனிமேல் என்னை அங்கே எதிர்பார்க்க வேண்டாம்

கணேஷ்குமார்.'

அதோடு கணேஷின் தொடர்பு விட்டுப் போயிற்று. அவன் வீட்டிற்கு வரக் கூடாது, அவனுக்குக் கடிதம் எழுதக் கூடாது என்று அப்பா பிடிவாதமாக இருந்தார். சாகிற வரை தன் சாவைப் பற்றி அவனுக்குத் தெரியப் படுத்தக் கூடாது, அவன் கொள்ளி போடக் கூடாது என்பதுவரை வைராக்கியமாக இருந்தார். ஆனாலும் அப்பா செத்துப் போனதை அவன் தந்தியடித்து தெரியப்படுத்தினான். அதற்கும் கணேஷ் வரவில்லை.

அதன் பின் மெதுவாய் ஒரு நான்கு வரிக் கடிதம் வந்தது. பின் பத்து வரிக் கடிதம், அப்புறம் ஒரு பக்கக் கடிதம், கடைசியாக நாலைந்து பக்கங்கள்...

ராம்குமார், ஒரு இரண்டாயிரம் பணம் வேண்டும். உடனே...

ராம், உடனடியாக ஐயாயிரம் அனுப்பு, ராம்.

ரொம்ப அவசரம். பத்தாயிரம் அனுப்பு. ப்ளீஸ்...

எத்தனை ப்ளீஸ்கள், கெஞ்சல்கள், அம்மாவிற்கு எதையும் சொல்லாமல் அனுப்பின பணங்கள்...

எல்லாம் இவளுக்காகத்தான். இவளால்தான். இப்போது ஒன்றும் தெரியாத மாதிரி, கணேஷைத் தெரியாத

மாதிரி—அவன் செத்துப் போன விவரம் தெரியாத மாதிரி. 'யு...யு...' அவள் உதட்டைக் கடித்துக் கொண்டான். உனக்கா தெரியாது. நீ யார் என்பது புரியாது. என்ன வேஷம் இது...? எதற்காக இதெல்லாம்? பணத்திற்காக? வெறும் பணத்திற்காக மட்டுமா? அதற்காகத் தானே இங்கு வருவதாகக் கடிதம் எழுதினாய், அதுவும் அம்மாவிற்கு எழுதினாய். பணிவாய், அன்பாய்—மாமாவைத் தான் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. ஆனால் உங்களுடனாவது உங்களுக்கு உதவியாகக் கடைசிவரை இருந்து...

அம்மா அதை நம்பி—சந்தோஷப் பட்டு உன்னை வரச் சொல்லி—கணேஷிற்காக அழுது—அவனையும் உன்னையும் சேர்த்துப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை என்று சொல்லிச் சொல்லி மாய்ந்து போய்...

ஹெறல் வித் யு. அங்கிருந்து எந்த நோக்கத்தில் கிளம்பினாய், இந்த விமான விபத்தில் எல்லாம் மறந்து போன மாதிரி நடிக்கிறாயே... இது எந்த நோக்கத்திற்காக...?

"டாக்டர், ப்ளீஸ் டெல் மி. நான் யார்? என் பெயர் என்ன? எதற்காக இங்கு வந்தேன்? எனக்கு என்ன ஆயிற்று? ப்ளீஸ் டெல் மி எவ்ரிதிங்."

எல்லாவற்றையும் சொல்லிவிட வேண்டும் என்று மனசு பரபரத்ததைச் சட்டென்று அடக்கிக் கொண்டான். தான் ஒரு டாக்டர், அவள் தன்னுடைய நோயாளி என்பது நினைவுக்கு வந்தது. காலையில்தான் இவள் தலையில் போடப்பட்ட தையல் பிரித்திருக்கிறது. இவள் ஓரளவு தெளிவடைந்திருக்கிறாள். கொஞ்சம் மெதுவாகப் பேச ஆரம்பித்திருக்கிறாள். அதற்குள் இவள் மனசைக் கஷ்டப் படுத்துகிற பேச்சாகப் பேசக் கூடாது. மற்ற நோயாளிகளைக் கவனிக்கிற அதே கவனமும், பொறுப்பும், உற்சாகமும், கனிவும் இவளிடமும் இருக்க வேண்டும்.

அவள் மறுபடியும் அதையே அழகான ஆங்கிலத்தில் கேட்டாள். சுத்தமான அந்த ஆங்கிலத்திலிருந்து அவள் நிறையப் படித்தவளாக இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான். கூடவே எத்தனை படித்து என்ன என்றும் தோன்றிற்று.

"ப்ளீஸ், எத்தனை கசப்பானதாக இருந்தாலும்

உண்மையைச் சொல்லுங்கள் டாக்டர். நான் எப்படி இங்கு வந்தேன்?''

'ஏர் க்ராஷ். நீங்கள் வந்த விமானம் இங்கே மெட்ருலைக்குப் பக்கத்தில் விபத்துக்குள்ளாகி தலையிலும் உடம்பிலும் மட்டும் அடிபட்டு நீங்கள் உயிர் பிழைத்தீர்கள். நான் ட்ரீட்மெண்ட்டிற்காக இங்கு என் நர்ஸிங் ஹோமித்துக் கொண்டு வந்தேன்.''

'விமான விபத்தா? நான் எதற்காக விமானத்தில் வந்தேன்...' எங்கு போக எங்கிருந்து வந்தேன். நான் யார்? என் பெயர் என்ன? எனக்கு ஒன்றும் புரியவில்லை டாக்டர். எதுவும் தெரியவில்லை.''

அவள் முகத்தை மூடிக் கொண்டு அழ ஆரம்பித்ததும் அவன் நிதானமாக அவளை அதட்டினான். எழுந்து உட்காரப் போனவளைப் படுக்க வைத்தான்.

''நீங்கள் இப்படி உடம்பையும் மனசையும் அலட்டிக் கொள்ளக் கூடாது மிஸஸ் கணேஷ் குமார்.''

''மிஸஸ் கணேஷ்குமார்!''—அவள் கண்கலங்க அவனைப் பார்த்தாள். ''ஹூ...மீ...? நானு.. மிஸஸ் கணேஷ் குமாரா? கல்யாணமானவளா?''

''எஸ்.''

அவள் தன் நெற்றி சின்னச் சிணுங்கலாய்ச் சிணுங்க அரை விநாடி யோசித்தாள். பின் அவனை வெற்றுப் பார்வையாய்ப் பார்த்தாள்.

''அப்படியானால் அவர் எங்கே டாக்டர்?''

''ஹி ஈஸ் நோ மோர். கணேஷ் குமார் உயிரோடு இல்லை.''

''என்ன!''

அவன் அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டு பேசாமல் நின்றான்.

''நிஜமாகவா டாக்டர்!''

''உங்களிடம் நான் பொய் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.''

அந்தப் பதிலில் அடிபட்டுப் போனவளாகத் தெரிந்தாள். மீண்டும் அவனை நிமிர்ந்து பார்த்தபோது கண்களில்

ஒரு பயம் தெரிந்தது. வாழ்க்கையைப் பற்றின பயம்.

''அவர்...அவர் இந்த விமான விபத்தில்..?''

''இல்லை... இரண்டு மாதங்களுக்கு முன்பே போய் விட்டார்.''

''இரண்டு மாதங்களுக்கு முன்பா? எப்படி டாக்டர்?''

''யு டோண்ட் நோ...?''

''தெரியலையே டாக்டர். எதுவும் நினைவில்லையே. எனக்குக் கல்யாணமான விஷயமே நீங்கள் சொல்லித்தானே தெரிகிறது. என் முகம் கூட எனக்குத் தெரியவில்லை. நான் யார்? கறுப்பா, சிவப்பா? என் பெயர் என்ன? மிஸஸ் கணேஷ்குமார் என்பதைத் தவிர மற்ற விவரங்கள் என்ன? சொல்ல முடியுமா டாக்டர்?''

''ஐயம் ஸாரி,'' என்றான் அவன். ''கணேஷ்தான் எனக்குத் தெரிந்தவனே தவிர, நீங்கள் இல்லை.''

''சரி. அவரைத் தெரியும் என்றால் எப்படி? நீங்கள் அவருடைய நண்பரா?''

''இல்லை.''

''அவரும் ஒரு டாக்டரா?''

''நோ...''

''அப்படியானால்...''

''ஹி வாஸ் மை ப்ரதர். கணேஷ் என்னுடைய அண்ணா.''

''என்ன!?''

''எஸ்.''

''அவர் உங்களுடைய அண்ணா என்கிறீர்கள். அவரைக் கல்யாணம் பண்ணிக் கொண்ட என்னைப் பற்றி ஒன்றும் தெரியாது என்றும் சொல்கிறீர்கள். ஹௌ ஈஸ் தட்? இது எப்படி சாத்தியம்—''

''எப்படி என்றால் அப்படித்தான். கல்யாணம் பண்ணிக்கொண்டு எனக்குக் கல்யாணமாகி விட்டது என்று ஒரு வரிக் கடிதம் எழுதினால் என்ன தெரிந்து கொள்ள முடியும்? உங்களுடைய பெயரைத் தவிர...''

''பெயர் தெரியுமா? என்ன டாக்டர்? வாட்ஸ் மை நேம்?''

"நித்யா."

"நி—த்—யா."

அவள் ஒவ்வொரு எழுத்தாய் சொல்லிப் பார்த்துக் கொண்டாள். பெயர் பிடித்த சந்தோஷம் முகத்தில் தெரிந்தது. அதைப் பார்க்காமல் எழுந்து போனான் அவன்.

## 2

அவன் போனபின் அவள் வெகு நேரம் யோசித்தாள். கணேஷ்குமாரின் முகத்தைத் தன் நினைவில் தேடினாள். பிடிபடாமல் போயிற்று. அதற்குப் பதிலாக ராம்குமாரின் முகம் வந்தது. அந்த கம்பீரமான உருவம் நெஞ்சைத் தொட்டது. உடனே தன் முகத்தைப் பார்த்துக் கொள்ள வேண்டும் போல் இருந்தது. ஒரு கண்ணாடி இருந்தால் பார்த்துக்கொண்டு விடலாம்.

எப்படி இருக்கும் என் முகம்...? ராம்குமாரின் முன் எப்படி இருந்தேன்...?

ராம்குமார் மாதிரித்தானே கணேஷ்குமாரும் இருந்திருக்க வேண்டும். அதே உயரமாய், கம்பீரமாய், அழகாய், வெள்ளை வெளேரென்று...

எவ்வளவு தேடியும் அவளுக்கு ஞாபகம் வரவில்லை. ஒரு விவரம், ஒரு இடம், ஒரு சம்பவம், ஒரு மனிதர், இல்லை ஒன்றுகூட நினைவில்லை. நினைத்து நினைத்துக் களைத்துப் போயிற்று. மெதுவாகக் கண்களை மூடினபோது மெல்ல நழுவிக் கொண்டு போய் உறக்கிற்று.

அப்படியே தூங்கிப் போனாள் அவள்.

மறுநாள் காலையில் அறை அறையாகத் தன் விஸிட்டிங்கை முடித்துக் கொண்டு கடைசியாக அவளிடம் வந்தான் ராம்குமார்.

"எப்படி இருக்கிறீர்கள்...?" என்று விசாரித்

தான். அவளைப் பரிசோதித்துப் பார்த்தான். பின் நர்ஸைக் கூப்பிட்டு ஏதோ கேட்டான். மறுபடியும் அவளிடம் திரும்பி, "யு ஹேவ் கம் டு நார்மல். உங்களை இன்று டிஸ்சார்ஜ் செய்யலாம் என்று பார்க்கிறேன்." என்றான்.

"என்னையா? இன்று...?"—அவள் சற்றுப் பயத் தோடு பார்த்தாள். நர்ஸிங் ஹோமில் இருக்கும்வரை காலத்தைப் பற்றின பயங்கள் இல்லை. மருட்சி இல்லை. ஆனால் இப்போது...?

எங்கே போக முடியும்.? யார் நிழலில் ஒதுங்க முடியும்? கையில் பணமில்லாமல் அடுத்த வேளை சாப் பாட்டிற்கு வழியில்லாமல் தங்குவதற்கு இடமில்லாமல்... அவள் வந்த ஏர்லைன்ஸ் நிறுவனம் விபத்திற்கு நஷ்ட ஈடு தரலாம். அது எவ்வளவு என்று தெரியவில்லை. எப்போது கிடைக்கும் என்பதும் புரியவில்லை. அப்படியே கிடைத்தாலும் தனியாய், யாருமில்லாமல், எந்த விதப் பிடிப்புமில்லாமல் எப்படி வாழ முடியும்? எத்தனை நாள் அந்த மாதிரி இருக்க முடியும்?

"என்ன யோசிக்கிறீர்கள்?"

அவன் குரலில் அவள் கலைந்து நிமிர்ந்தாள்.

"என்ன கேட்டீர்கள்?..."

"என்ன யோசனை என்று கேட்டேன்?"

"ஒன்றுமில்லை. டிஸ்சார்ஜ் பண்ணினால் எங்கே போவது..., எப்படி இருப்பது என்று—"

"தெரிந்ததா...?"

"எது?"

"எங்கே போவது என்று..."

அவள் பதில் சொல்லவில்லை. தலைகுனிந்து போயிற்று. 'இவன் ஏன் இப்படிச் சிரித்துக் கொண்டே நெருப்பாகக் கொட்டுகிறான்?' என்று நினைத்துக் கொண் டாள். கோபப்படாமல் நிதானமாய்ப் பேசினாலும் அந்த வார்த்தைகளின் தீட்சண்யத்தில் தெரிந்த வெறுப்பும் வேதனையும்...ஏன் இப்படி? இத்தனை கோபத்திற்கு நான் என்ன செய்தேன்...? '

"இந்தக் கடிதத்தை முதலில் படியுங்கள்."

அவள் அந்த வெளிர் நீல நிற காகிதத்தை வாங்கிப் படித்தாள். பின் மடித்துக் கையில் வைத்துக் கொண்டாள்.

''படித்தீர்களா?''

''ம்...''

''என்ன எழுதி இருக்கிறது...''

''எழுதவில்லை. டைப் பண்ணப்பட்டிருக்கிறது.''

''விஷயம் என்ன?''

''நேற்று நீங்கள் சொன்ன அதே மாதிரி...''

''என்ன சொன்னேன்?''

''வந்து உங்களுடன் தங்கியிருக்க அனுமதி கேட்டு எழுதினதாக...''

''யாருக்கு எழுதினது புரிகிறதா.....?''

''ம். மிஸஸ் சாரதா சுப்ரமணியனுக்கு.''

''யார் அது... சாரதா சுப்பிரமணியன்?''

''உங்கள் அம்மாவாக—''

''அம்மாவாக இல்லை. அம்மாதான். அவளுக்கு நீங்கள் எழுதின கடிதம்தான். கடைசியில் போட்டிருக்கிற கையெழுத்து உங்களுடையதுதானே?''

''தெரியலே.''

''தெரியலேயா...சரி. போகட்டும். அம்மா இப்போது உங்களை வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வரச் சொன்னாள். உடம்பு சரியாக இருந்திருந்தால் தானே வந்திருப்பாள். சரியில்லாததால்தான் வரவில்லை.''

''என்ன உடம்பு அவர்களுக்கு?''

''அவளால் நடக்க முடியாது. நடந்து ரொம்ப வருஷமாகிவிட்டது. அது மட்டுமில்லை, ஷி ஈஸ் எ ஹார்ட் பேஷண்ட். பி.பி. பேஷண்ட். அதிர்ச்சியான விஷயங்களைத் தாங்குகிற சக்தி இல்லாதவள்.''

அவள் அதைக் கேட்டு மௌனமாக இருந்தாள். அவன் மேலே பேசிக்கொண்டு போனான்.

''உடம்பில்தான் சக்தி இல்லையே தவிர மனசு விசாலமானது. ரொம்ப நல்ல மனசு. அதனால்தான் உங்களை வரச் சொல்லிக் கடிதம் போட்டிருக்கிறாள். தினமும் விசாரிக்கிறாள். இப்போதும் நேராக வீட்டிற்கு வரும்படி சொல்லியனுப்பி இருக்கிறாள்.''

நெகிழ்ந்து போனாள் அவள்.

''அவர்களுக்கு .... அந்த அன்பிற்கு .... நான் எப்படி...''

''இல்லை, உங்களைப் பற்றின எந்த விஷயமும் அம்மாவிற்குத் தெரியாது. நான் சொன்னதில்லை. கணேஷ் எழுதின கடிதங்களைக் காட்டினதில்லை. உங்களைப் பற்றின விவரம் தெரியாததால்தான் உங்களை வரச் சொல்கிறாள். தெரிந்தால் சொல்லியிருக்க மாட்டாள். இப்படி உங்களுக்காக உருகிப் போக மாட்டாள்.''

''என்னைப் பற்றின விஷயம் என்று சொல்கிறீர்களே... அது என்ன என்று எனக்கே தெரியவில்லையே.''

''உண்மையிலேயே தெரியாமற்போனால் சொல்லலாம். தெரியாத மாதிரி நடிப்பவர்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியமில்லை.''

''நடிக்கிறேனா...நானா...? எதற்காக நடிக்க வேண்டும்?''

''அதுதானே எனக்கும் புரியவில்லை!'' என்று ஒரு பார்வை பார்த்தான் அவன். உள்ளுக்குள் சுருண்டு போனாள் அவள். ஏன் இப்படி நெருப்பாகக் கொட்டுகிறான் இவன். அதற்கு நான் செய்த தப்புத்தான் என்ன? கணேஷ் என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டதா? யார் அந்த கணேஷ்? ஏன் வீட்டிற்குச் சொல்லாமல் என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும்? நான் யார்? எப்படிப் பட்டவள்? என்னுடைய அம்மா அப்பா யார்? மை குட்நெஸ்...இதையெல்லாம் எப்படிக் கண்டு பிடிக்கப் போகிறேன்? யார் உதவியுடன் கண்டு பிடிக்கப் போகிறேன். கண்டு பிடிக்க முடியுமா, முடியாதா?

''சரி, நான் இன்னும் பத்து நிமிஷத்தில் வருகிறேன். தயாராக இருங்கள். போகலாம்.''

ராம்குமார் அறையை விட்டுப் போனதும் அவள் மெதுவாக எழுந்து உட்கார்ந்தாள். ஒரு வினாடி தலைசுற்றி அறை இருண்டது. சட்டென்று கட்டிலின் விளிம்பைப் பிடித்துக் கொண்டாள். ஒரு நிமிஷத்திற்குப் பின்னால் நிதானமாயிற்று. அந்த இருட்டு கண்ணை விட்டுப் போயிற்று. ஒரு டம்ளர் தண்ணீர் குடித்துவிட்டு மீண்டும் அந்தக் கடிதத்தைப் பிரித்தாள்.

நல்ல ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அழகான கடிதம். மனசைத் தொடுகிற வார்த்தைகள். பணிவாய், கொஞ்

சம் கெஞ்சுகிற மாதிரிகூட இருந்தது. இப்படிப்பட்ட கடிதத்தை எழுதினவள் எந்தத் தப்பும் பண்ணியிருக்க முடியாது என்று தோன்றியது. பின் ஏன் ராம்குமார் அப்படிப் பேச வேண்டும்? அத்தனை தூரம் வெறுக்க வேண்டும்?

அவன் அந்த மாதிரி பேசுகிறுன் என்றுல் அதில் நிச்சயமாய் ஏதோ இருக்க வேண்டும். எதுவும் இல்லாமல் அவன் அப்படிப் பேசுகிறவன் இல்லை. தன் அண்ணுவைக் கல்யாணம் பண்ணிக் கொண்டவள்—தங்களிடமிருந்து பிரித்தவள்— யார் என்றே தெரியாதவள்— இதெல்லாம் காரணமில்லை, இதையெல்லாம் காரணமாக்குகிறவனும் அவன் இல்லை. இதற்கெல்லாம் அப்பாற்பட்டதாக வல்லமையானதாக ஒரு காரணம் இருக்க வேண்டும். என்ன அது?

ஷூ சத்தம் கேட்டது. அந்த இரண்டு நாட்களில் ராம்குமாரின் ஷூ சத்தம் கூட அவளுக்குப் பழகிப் போயிருந்தது. சட்டென்று எழுந்து நின்றுள் அவள். அவன் வெள்ளைக் கோட்டும், ஸ்டெதஸ்கோப்பும் இல்லாமல் சாதாரணமாக வந்து நின்றுன். முகத்தில் பழைய சிரிப்பு தெரிந்தது.

"போகலாமா?" என்று கேட்டு நர்ஸைக் கூப்பிட்டான். அவளைக் கைத்தாங்கலாகப் பிடித்துக் கொள்ளச் சொன்ன போது—

"நோ, நோ. ஐ கேன் மானேஜ்." என்று அவளாக நடந்தாள். அவனும் கூட வந்தான். ஏறுவதற்கு வசதியாகப் போர்டிகோவில் காரை நிறுத்தியிருந்தான். முன் பக்கக் கதவைத் திறந்து விட்டான். பின் நர்ஸிடம் ஏதோ சொல்லிக் கொண்டே காரைக் கிளப்பினுன்.

"நீங்கள் இப்போதுதான் முதல் தடவையாக மெட்ருஸ் வருகிறீர்களா?"

"ஆமாம்."

அவன் சரேலென்று திரும்பி அவளைக் கூர்மையாகப் பார்த்தான். அந்தப் பார்வையின் தீட்சண்யத்தைப் புரிந்து கொள்ள முடியாமல் தலைகுனிந்தாள் அவள்.

"மெட்ருஸ் பிடித்திருக்கிறதா?"

"ம்..."

"உங்கள் ஊர் இதைவிட அழகாக இருக்குமா?"

"எந்த ஊர்?"

"உங்களுடைய சொந்த ஊர் எது?"

"தெரியலை."

"தெரியலையாமே? ரொம்ப வேடிக்கையாக இருக்கிறது."

"எது வேடிக்கையாக இருக்கிறது?"

"உங்கள் ஞாபகம் கூட உங்கள் சௌகரியப்படி வருவது."

"என் சௌகரியப்படியா?"

"ம்... மனிதர்கள், இடங்கள், சம்பவங்கள் மறந்த அளவிற்குப் பேச்சும், எழுத்தும் மறக்கவில்லை. கண் விழித்ததுமே சரளமாகப் பேச ஆரம்பித்தீர்கள். கடிதத்தைத் தடுமாறாமல் படித்தீர்கள். இப்போது முதல் தடவையாய் இங்கு வருவதாகச் சொன்னீர்கள். என்ன இதெல்லாம்?"

"தெரியலை. எனக்கே தெரியலை."

"சரி, இது தெரியாவிட்டால் போகட்டும். ஒன்று மட்டும் தெரிந்தால் போதும்."

"என்ன?"

"அம்மா மனசைக் கஷ்டப் படுத்தாமல்—குடும்பத்தின் பெயருக்கு எந்தக் கெட்டப் பெயரும் வராமல் நடந்து கொண்டால் போதும்."

"நான் ஏன் உங்கள் அம்மாவைக் கஷ்டப்படுத்தப் போகிறேன்...?"

"ஏன் கணவனைக் கஷ்டப்படுத்தினீர்கள்? அவனைத் தற்கொலை பண்ணிக் கொள்கிற அளவிற்கு விரட்டினீர்கள்?"

"தற்கொலையா! என்ன சொல்கிறீர்கள்? என்னாலா? நான் விரட்டினேனா?"

"அதுதான் சொன்னேனே, மறதிகூட உங்களுக்கு இஷ்டப்பட்டபோது—இஷ்டப்பட்ட மாதிரி வருகிறது என்று."

அதன் பின் அவள் எதுவும் கேட்கவில்லை. அந்தப் பதிலில் அடிவாங்கின மாதிரி பேசாமல் இருந்தாள். அவன் தன்னை நம்பவில்லை என்று புரிந்து கொண்டாள். யோசித்துப் பார்த்தபோது தப்பு அவனிடம் இல்லை என்று தெரிந்தது.

படிப்பது மறக்கவில்லை. பேசுவது மறக்கவில்லை. மற்ற எல்லாம் மறந்து போய் விட்டது என்றால் எப்படி நம்ப முடியும்? ஆனால் அவன் டாக்டர். அவன் இதை நம்பித்தான் ஆக வேண்டும். அவனுக்கு இது புரிய வேண்டும். அவனுக்கே புரியவில்லை என்றால் எப்படி? நிஜமாகவே இது மறதிதானா? எப்படி மறந்து போக முடியும்? ஒரு விஷயம் நினைவுக்கு வந்து மறு விஷயம் மறந்து போய்...

"முதல் தடவையாய் மெட்ராஸ் வருகிறீர்களா?"

"ஆமாம்."

எப்படித் தெரிந்தது முதல் தடவை என்று? எப்படிச் சொல்லத் தோன்றியது?

"உங்களுக்கு ஒன்று சொல்லலாமா?" என்று அவன் ஆரம்பித்ததும் அவள் அடங்கின குரலில், "சொல்லுங்கள்," என்றாள்.

"எங்கள் வீட்டில் ஒரு மாசமோ, இரண்டு மாசமோ நீங்கள் விரும்புகிறவரை தாராளமாகத் தங்கலாம். அதுவரை அம்மாவிற்குப் பிடித்த மாதிரி நடந்து கொள்ள வேண்டும். அந்த மனசு நோகாமல் அன்பாக ஆதரவாக, பிடிக்காமற்போனாலும் அதை வெளிக்காட்டாமல்.. முக்கியமாய் உங்களைப் பற்றின எதையும் அம்மாவிடம் சொல்ல வேண்டும். நீங்கள் யார், எப்படிப்பட்டவர் என்பதெல்லாம்—"

"அதெல்லாம் எனக்கே தெரியாதபோது என்னால் எப்படிச் சொல்ல முடியும். நீங்கள்தான் கணேஷ்குமார் என்று சொல்லியிருந்தால் கூட நான் நம்பித் தான் இருப்பேன்."

அவன் சரேலென்று வண்டியை பிரேக் போட்டு நிறுத்தி அவளைக் கூர்மையாகப் பார்த்தான்.

"நல்ல வேளையாய் கணேஷ்குமாரின் துரதிருஷ்டம் எனக்கு ஏற்படவில்லை. எப்போதும் ஏற்படாது."

அந்த முகத்தின் கோபமும், வெறுப்பும், வார்த்தைகள் வந்த வேகமும்—

ராம்குமார், நீங்கள் ஏன் என்னை இப்படி வெறுக்கிறீர்கள்? அந்த வெறுப்பைப் புரிந்து கொண்டும் என்னால் உங்களை வெறுக்க முடியவில்லையே. இது என்ன?

"அண்ட் ஒன் மோர் ரிக்வெஸ்ட். பணத்திற்

காகத்தான் நீங்கள் வந்திருக்கிறீர்கள். சொத்தில் கணேஷின் பாகத்தைப் பிரித்துக் கொண்டு போக வேண்டும் என்று நீங்கள் நினைத்தால் அதை நான் தடுக்கப் போவதில்லை. பட், அதெல்லாம் நாட் பிஃபோர் மை மதர்ஸ் டெத். எத்தனை வருஷமானாலும் அம்மாவிற்கப்புறம்தான் பிரிவினை எல்லாம். அதுவரை கொஞ்சம் பொறுமையாய், பழைய மாதிரி குணங்கள் எல்லாம் வராமல், நல்லவளாய்—''

''ஏன் இப்படியெல்லாம் பேசுகிறீர்கள். பழைய மாதிரி—பழைய மாதிரி என்கிறீர்களே வாட் டு யு மீன் பை தட்...?''

''யு நோ வாட் ஐ மீன்...''

''நோ. ஐ டோண்ட் நோ எனிதிங். நீங்கள் சொல்வதைக் கேட்டால் பயமாக இருக்கிறது. ஸோ—ஐ டோண்ட் வாண்ட் டு நோ...''

உதட்டில் புன்சிரிப்பாக ஓட ஒரு பெரிய பங்களாவின் அரை வட்டப் புல்தரையைக் கடந்து போர்ட்டிகோ வாசலில் நிறுத்திக் கீழே இறங்கினான் அவன்.

## 3

அவளும் இறங்கினாள். கூடவே உள்ளே வந்தாள். அவன் காட்டின சோபாவில் உட்கார்ந்து கொண்டாள். அவன் மின்சார விசிறியைச் சுழலவிட்டு—

''ரிலாக்ஸ் யுவர்ஸெல்ஃப். நான் போய் அம்மாவிடம் பார்க்க வரலாமா என்று கேட்டுக் கொண்டு வருகிறேன்,'' என்று உள்ளே போனான்.

ரிலாக்ஸ்! இத்தனை விஷயங்களைச் சொல்லி விட்டு, நெஞ்சில் நெருப்பைக் கொட்டிவிட்டு அது பற்றி எரிகிற போது இளைப்பாறச் சொன்னால் எப்படி? அந்த நெருப்பிலா? அது தகிக்கிற தகிப்பிலா...?

அது மட்டுமில்லை. அவன் கூடத்தான் தகிக்கி

ருன். அந்தப் பார்வை, பேச்சு எல்லாமே தகிக்கிறது. இவனோடு இதே வீட்டில் எப்படி இருக்க முடியும்? அவன் திரும்பி வருவதற்குள் எழுந்து போய் விட்டால் என்ன? எங்கே போவது? எப்படிப் போக முடியும்? முடிந்தாலும் அப்படிப் போவதில் என்ன பெருமை இருக்க முடியும்?

அவன் தன்னைப் பற்றி ஏதோ தவருக நினைத்துக் கொண்டிருக்கிருன். அல்லது அப்படி நினைக்கும்படி ஏதோ தவறு நடந்திருக்கிறது. அதற்குத்தான் காரணமாக இருந் திருக்க முடியாது. நிச்சயமாக முடியாது. இது மட்டும் தெரிகிறது. ஆழமாய் அழுத்தமாய் தெரிகிறது. என்ன சொன்னுன் அவன்?

'கணேஷ்குமார் தற்கொலை பண்ணிக் கொள்கிற அளவிற்கு அவனை விரட்டினீர்கள்.'

நானில்லை. நிச்சயமாய் அது நானில்லை. என்னுல் அப்படியெல்லாம் செய்யவே முடியாது. இது எனக்கு என் உள் மனத்திற்குப் புரிகிறது. அது உங்களுக்குப் புரிய வேண்டாமா ராம்குமார். நான் புரிய வைக்க வேண்டாமா? அதுவரை நான் போகப் போவதில்லை. உங்களை விட்டு, இந்த வீட்டை விட்டு .நோ. நான் போக மாட்—

"போகலாமா?" என்று கேட்டுக் கொண்டே படியிறங்கி வந்தான் அவன். சட்டென்று நினைவிற்கு வந்தவனுக, "ஏதாவது சாப்பிடுகிறீர்களா?" என்று கேட்டான்.

"வேண்டாம்," என்று தலையாட்டினுள் அவள்.

"காப்பி? ஹார்லிக்ஸ்? ஏதாவது சாப்பிடுங்கள். இல்லாவிட்டால் களைப்பாக இருக்கும்."

"நோ. ஐ'ம் நாட் டயர்ட். வேண்டாம்."

"சரி. வாருங்கள்."

மாடிக்கு அழைத்துக் கொண்டு போனுன். அந்த வீட்டில் தெரிந்த பணத்தின் பளபளப்பு அவளுக்குப் புதுசாக இல்லை. அவளை பிரமிக்க வைக்கவில்லை. இதெல்லாம் எனக்குப் பழக்கம்தான் என்கிற மாதிரி இயல்பானதாக இருந்தது. இது ஏன் என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள். பதில் மட்டும் கிடைக்கவில்லை.

"இதுதான் அம்மாவின் அறை," என்று அவன் ஓர் ஏர்கண்டிஷண்ட் அறையைத் திறந்தான். "வாருங்கள்," என்று முன்னுல் போனுன்.

அவன் உள்ளே நுழைந்து அவனுடைய அம்மா வைப் பார்த்ததும் சட்டென்று நின்ருள்.

சாரதாமணி தேவி முகம் மாதிரி எத்தனை சாந்த மான முகம். இந்த முகம் இத்தனை பிரியத்தைக் கொட்டு கிறது என்ருல் அதில் என்ன ஆச்சரியம் இருக்க முடியும்?

முகம் மட்டுமில்லை. குரல்கூட நெஞ்சை வரு டிற்று. வாம்மா என்ற ஒரே வார்த்தை அவளுக்கு ஒரு தெம்பை, தைரியத்தை, மன உறுதியைத் தந்தது.

''இப்போ உடம்பு எப்படிம்மா இருக்கு?''

''பரவாயில்லை,'' என்ருள்

''கல்லக் கட்டைப் பிரிச்சாயிற்ரு?''

''ம்.''

''வேறு எங்காவது அடிபட்டதாம்மா...?''

''இல்லை என்றே நினைக்கிறேன். எங்கேயும் காயம் எதுவுமில்லை.''

''நல்ல வேளையாய் உயிர் தப்பிஞயேம்மா. கண்ணைத்தான் பார்க்க முடியவில்லை. இல்லாவிட்டால் உன் னைக் கூடப் பார்க்க முடியாமற் போயிருக்குமேம்மா.. அந்த அதிர்ஷ்டம் கூடக் கிடைச்சிருக்காதேம்மா...''

''அதிர்ஷ்டமா? அதை நான்தான் சொல்ல ணும். நீங்கள் சொல்கிறீர்களே?''

''யார் சொன்னுல் என்ன? நின்றுகொண்டே பேசறியேம்மா. உட்கார்ந்துக்கோ. ராம், நீயும் உட் காருப்பா...''

இரண்டு பேரும் உட்கார்ந்து கொண்டார்கள். ராம்குமாரின் அம்மா மெதுவாக அவள் கையைப் பற்றி ஞள். அவளை முழுசாய் ஒரு பார்வை பார்த்தாள்.

''என் பிள்ளை தப்பா ஒண்ணும் மயங்கிடலே. நீ எவ்வளவு அழகாக இருக்கேம்மா. அவனுக்கு அது கொடுத்து வைக்கலியே...'' என்று கண்கலங்கிஞள். பின், ''உன் பேர் என்ன சொன்னே?'' என்று கேட்டாள்.

''நித்யா.''

''நித்யா. நல்ல பெயர்தான். ஆனுல் இப்படி இந்தச் சின்ன வயசிலே வாடிப் போய் நிக்கறியேன்னு நினைச் சால் மனசு தாங்கலே. என் பிள்ளை உன்னைக் கல்யாணம் பண் ணிக்காமல் இருந்திருந்தால் நீ இந்த நிலைமைக்கு ஆளாகி யிருக்க மாட்டியேம்மா... ஆனுல் அவனுக்கு மட்டும் எப்படித் தெரிந்திருக்க முடியும் தனக்கு அல்ப ஆயிசுன்னு?''

''அம்மா!'' என்று அதட்டினன் ராம்குமார். ''வேண்டாம்மா. பழசெல்லாம் இப்போது எதற்கு. பாவம் இவர்கள் மறந்து விட்டதை நீ எதற்காக நினைவு படுத்துகிருய்...?''

''மறப்பதா...? எதைடா மறக்க முடியும்? கணேசையா...? இத்தனை வருஷமாயிற்று. என்னுலேயே முடியலே. இவள் எப்படிடா மறப்பாள்?''

அவன் சட்டென்று திரும்பி அவளைப் பார்த்தான். அவள் யாரையும் பார்க்க முடியாமல் தலையைக் குனிந்து கொண்டாள்.

''ராம், நீ இவளுக்குப் பழைய ஞாபகமே இல்லை என்று சொல்லலை? அதை மறந்துவிட்டு நான் ஏதோ பேசுகிறேன் பார். இதோ பாரும்மா நித்யா. அப்படி மறந்து போனதும் நல்லதுதான் என்று நினைச்சுக்கோ. நீ சின்னப் பொண்ணு. ராம்குமாரைவிட வயசுல சின்னவளாகத்தான் இருப்பாய். இந்த வயசுல பழசை நினைச்சு உள்ளுக்குள்ளேயே கருகிப் போகாதது நல்லதுதான். இதுகூட நல்லதற்குத் தான்....''

''என்னம்மா சொல்றே, நீ?'' என்று தன் கோபத்தை அடக்கிக் கொண்டே கேட்டான் ராம்குமார்.

''என்னடா...?''

''நீ பாட்டுக்கு ஏதேதோ பேசினல் என்ன அர்த்தம்?''

''நல்ல அர்த்தம்தான். இத்தனை சின்ன வயசில் போனவனையே நினைச்சு இவளும் போய்விட முடியுமா என்ன? நித்யா, இதோ பாரும்மா. இதை கணேஷுடைய வீடாக நீ நினைச்சுக்க வேண்டாம். அப்படி நினைச்சு தங்க வேண்டாம். இதை உன் வீடாக நினைச்சுக்கோ. இங்கே நீ எதற்கும் பயப்பட வேண்டாம். தயங்க வேண்டாம். என்ன புரிகிறதா...?''

''அம்மா...'' என்று அந்தக் கையைப் பற்றிக் கொண்டு பேச முடியாமல் நின்ருள் நித்யா. குரல் அடைத்து வார்த்தைகள் வராமல் தயங்கின.

''போம்மா. நீ ஒன்றும் சொல்ல வேண்டாம். போய் ஏதாவது சாப்பிட்டு விட்டுக் கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கோ...''

அவள் அதே தயக்கத்தோடு ராம்குமாரைப் பார்த்தாள்.

''அழைத்துக் கொண்டு போ ராம். கணேஷின்

ருமையே இவனுக்கும் ஒழித்து விடச் சொல்லியிருக்கேன். புது மனிதர்கள் என்று தயங்கப் போகிறான். கொஞ்சம் கவனித்துக் கொள் ராம்..."

அவன் தலையாட்டிவிட்டு வெளியில் வந்தான். படியிறங்கும்போது, "அம்மாவைப் பற்றி நான் சொன்னதெல்லாம் இப்போது புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்," என்றான்.

அவன் மௌனமாக வந்தான்.

"கூடவே நான் சொன்ன மற்ற விஷயங்களும் புரிந்தால் சரி. அந்த மனசிற்குக் கெடுதலாக எதுவும் நினைக்காமல் இருந்தால்—"

அவன் சட்டென்று நின்றான். நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்தான். இப்போது பார்வை தயங்கவில்லை. குரலில் நடுக்கமில்லை.

"டாக்டர் ப்ளீஸ். இனிமேல் இப்படி பேசுவதைக் கொஞ்சம் குறைத்துக் கொள்வீர்களா? ஐ ப்ராமிஸ் ஐ வோண்ட் டு எனி ஹார்ம் டு யுவர் மதர். ஐம் நாட் ஆஃப் தட் டைப்."

"வெல், வேறு எந்த மாதிரி டைப் என்று நான் தெரிந்து கொள்ளலாமா?"

"வேறு எப்படிப்பட்டவனாக இருந்தாலும் சரி. நிச்சயமாய் நீங்கள் சொன்ன மாதிரி நினைக்கிற டைப் இல்லை."

"ஓ. கே. இல்லை என்பதை நிரூபித்துக் காட்டுங்கள் பார்க்கலாம்."

"நிச்சயமாய். அதை நிரூபிக்காமல் நான் இங்கிருந்து போவதாக இல்லை."

"குட் லக்," என்று புன்சிரிப்பாகச் சிரித்துக் கொண்டே அவன் ஓர் அறையைத் திறந்தான்.

"இது கணேஷின் அறை," என்று சொல்லிக் கொண்டே மேஜையின் மீதிருந்த புகைப்படத்தைக் காட்டினான்.

"லுக். அந்த போட்டோவைப் பாருங்கள். ஏதாவது நினைவுக்கு வருகிறதா சொல்லுங்கள்."

அவன் மேஜையின் அருகில் போய் புகைப்படத்தைப் பார்த்தான். ராம்குமாருக்குச் சற்று வித்தியாசமானவனாய். நீள முகமாய், சிரிக்கிற கண்களாய், ஒரு சின்னப் பையத்தனத்துடன்.

இல்லை. இந்த முகம் உருவம் அவனுக்குள் எந்தச்

சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. இந்த மாதிரி குறுகுறுப்பாகப் பார்க்கிற பார்வை, விஷமத்தனமாகச் சிரிக்கிற சிரிப்பு, இந்தக் குழந்தைத்தனம்...

நிச்சயமாய் அவளால் இவைகளை விரும்பி இருக்க முடியாது. அவள் இவற்றால் ஈர்க்கப்பட்டிருக்க முடியாது. அவளுக்குப் பிடித்தது—அவள் கவரப்படுவதெல்லாம் கம்பீர மான ஒரு உருவத்தால்—கண்ணியமான பார்வையால். தெளிவான நல்ல சிரிப்பால்— ராம்குமாருடைய சிரிப்பு மாதிரி. அவனுடைய பார்வை மாதிரி. அந்த மாதிரி கம் பீரமான உருவத்—

என்ன இது? இது என்ன நினைப்பு? ஏன் இந்த மாதிரியெல்லாம் நினைக்க வேண்டும்?

அவள் சட்டென்று தன்னை உதறிவிட்டுக் கொண் டாள். உடம்பைச் சிலிர்த்துக்கொண்டாள். அதைப் பார்த்த அவன்—

''டு யு ரிமெம்பர் ஸம்திங்?'' என்று கேட் டான்.

''நோ.''

''இது யார் என்று தெரியவில்லை?''

''இல்லை.''

''உங்கள் கணவரைப் புரியவில்லை.''

''நோ. ஹி ஈஸ் நாட் மை ஹஸ்பெண்ட். இது என் கணவர் இல்லை.''

''வாட் டு யு மீன்? ஹௌ டு யு ஸே ஸோ?''

''அப்படியெல்லாம் கேட்டால் எனக்குச் சொல்லத் தெரியவில்லை. எப்படிச் சொல்வது என்றும் புரியவில்லை. ஒன்று மட்டும்தான் என்னால் சொல்ல முடிகிறது. நிச்சய மாய் இந்த மாதிரி ஒரு மனிதரை என்னால் விரும்பியிருக்க முடியாது. கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்க முடியாது.''

''இந்த மாதிரி என்றால் எந்த மாதிரி. ஒரு போட்டோவிலிருந்து இந்த மாதிரி என்பதை எப்படிப் புரிந்து கொண்டீர்கள்?''

''முகத்தில் தெரிகிற இந்த குழந்தைத் தனத்தை, அடித்துப் போட்டு விடுகிற மாதிரி பார்க்கிற பார்வையை, அசட்டுத்தனமாய்ப் பலவீனமாய்ச் சிரிக்கிற சிரிப்பை.''

''இதெல்லாம் வெறும் போட்டோவிலிருந்து நீங்கள் ஊகித்த விஷயங்களா?''

''ஆமாம்.''

''இப்படிப்பட்ட மனிதரை நீங்கள் விரும்பி

யிருக்க மாட்டீர்களா?''

''மாட்டேன்.''

''அந்த மனிதருக்கு இருக்கிற பணத்தைத் தெரிந்து கொண்ட பின்னுலுமா?''

அதிர்ந்து போய் அவனைப் பார்த்தாள் அவள். அவன் முகம் இறுகிக் கிடந்தது.

''லுக் நித்யா,'' என்று முதல் தடவையாய் பெயர் சொல்லிக் கூப்பிட்டான். பின் ஒருமையில் பேச ஆரம்பித்தான்.

''ஸ்டாப் ஆல் திஸ் நான்ஸென்ஸ். நீ ஒரு நல்ல நடிகை என்பதை நான் நர்ஸிங் ஹோமிலேயே புரிந்து கொண்டேன். உன் நடிப்பில் நீ மற்றவர்களை நம்ப வைக்கலாம். அம்மாவை உன் பக்கம் இழுத்துக்கொள்ளலாம். ஆனல் நான் ஏமாறமாட்டேன். பிகாஸ் ஐ நோ யு. மற்றவர்களுக்கு உன்னைப் பற்றித் தெரியாது. ஆனல் எனக்குத் தெரியும். நிறையவே தெரியும். கணேஷ் பக்கமாக எழுதி இருக்கிருன். ஸோ—என்னிடம் நடிப்பதை விட்டு விடு. முகம் கழுவி உடைமாற்றிக் கொண்டு வா. சாப்பிடப் போகலாம். என்ன?''

அவன் அறைக் கதவை மூடிக் கொண்டு வேகமாகப் போனதும் மூடின கதவையே பார்த்துக் கொண்டு நின்ருள் அவள். பின் அந்தப் புகைப் படத்தைப் பார்த்தாள்.

இவஞ அல்லது இவரா? மனசை எந்த விதத்திலும் நெருங்க முடியாத இந்த உருவத்திற்கா நான் மனைவி?

நம்ப முடியாமல்—நம்பாமலும் இருக்க முடியாமல் அந்த புகைப் படத்தைக் கவிழ்த்து வைத்துவிட்டுக் குளியல் அறைக்குப் போனுள். முகத்தைக் கழுவிக் கொண்டு வந்து முதல் தடவையாய் டிரெஸ்ஸிங் டேபிளின் கண்ணுடியில் பார்த்தபோது—

மை குட்னஸ்! இது நானு? இவ்வளவு அழகா! ராம்குமார், இந்த முகத்தைப் பார்த்தா இதையெல்லாம் சொல்கிறீர்கள். எப்படி முடிகிறது உங்களால்?

முகத்தைத் துடைத்துத் தலையை லேசாக வாரிப் பொட்டு வைக்கப் போன போது சற்றுத் தயங்கினுள். உடனே கணேஷ்குமாரின் புகைப்படம் மனசுக்குள் வந்து போயிற்று. நோ...என்று தனக்குத்தானே மறந்து சிவப்புச் சின்ன வட்டமாய் நெற்றியில் பதித்துக் கொண்டு திரும்பினபோது கை லேசாக நடுங்கியது.

உடை மாற்ற நினைத்தபோதுதான் தனக்கு

மாற்றுப் புடவை இல்லை என்பது ஞாபகத்திற்கு வந்தது. அதற்குக் கூட ராம்குமாரிடம்தான் போய் நிற்க வேண்டும் என்று நினைத்தபோது கஷ்டமாக இருந்தது. ஆனால் வேறு வழி இல்லை. ஒரு வேலை கிடைத்து அல்லது சர்லைன்ஸ் நஷ்டஈட்டுப் பணம் கிடைத்தால் திருப்பிக் கொடுத்துவிட வேண்டியதுதான்.

அறைக் கதவைத் திறந்து சாப்பாட்டு அறைக்குப் போனபோது ராம்குமார் மேஜைக்கு எதிரில் உட்கார்ந்து கொண்டிருந்தான். அவளைப் பார்த்ததும் நிமிர்ந்தான்.

பளிச்சிட்ட அந்த வெள்ளை முகமும் நெற்றியின் சின்னச் சிவப்புப் பொட்டும்.

நித்யா...நித்யா... என்ன அழகு இவள்... இவளா? கணேஷ், நீ கடிதங்களில் எழுதினதெல்லாம் இவளா, இந்த முகமா...?

சட்டென்று உதட்டைக் கடித்துக் கொண்டு அவன் தலைகுனிந்தபோது அவள் எதிரில் வந்து உட்கார்ந்தாள். மெலிதான குரலில்,

"ராம்குமார்..." என்றாள்.

அவன் நிமிர்ந்து பார்த்தான்.

"நான்...நான்... உங்கள் அண்ணாவின் மனைவி என்பது...ஐ மீன் அதை நான் நம்புகிறவரை அதாவது அதுதான் நிஜம் என்பது என் மனசுக்குத் தெரிகிற வரை நான் பொட்டு வைத்துக் கொள்ளலாமா? பொட்டு மட்டும்தான்..."

"நித்யா..."

"ப்ளீஸ். வில் யு அலவ் மீ டு ஹேவ்...?"

"என்ன நித்யா இது... இதற்கு என்னுடைய அனுமதி எதற்கு? உனக்குப் பிடித்ததை நீ செய்யலாம் என்று அம்மாவே அனுமதி கொடுத்த பின்பு என்னை ஏன் கேட்கிறாய்?"

"இல்லை. எனக்குப் பிடித்தது உங்களுக்குப் பிடிக்க வேண்டுமே என்றுதான்."

"எனக்கும் பிடிக்க வேண்டும் என்று ஏன் நினைக்கிறாய். ஐயம் ஸாரி, நினைக்கிறீர்கள்?"

"ப்ளீஸ் என்னை வா, போ, என்றே கூப்பிடுங்களேன். உங்களுக்கு என்ன வயசாகிறது?"

"இருபத்தெட்டு."

"ஐயம் ஒன்லி ட்வெண்ட்டிஃபோர். எனக்கு இருபத்தி நாலுதானே. உங்களைவிடச் சின்னவள்தானே நீ.

வா—போ— என்று ஒருமையில் கூப்பிடக்கூடாதா?”

“என்ன! உனக்கு வயசு இருபத்திநாலா?”

“—ஆமாம்.”

“நன்றாக நினைவிருக்கிறதா?”

“ஓ எஸ்.”

“இது மட்டும் எப்படி நினைவுக்கு வந்தது?”

“தெரி—தெரியலே. நிஜமாகவே தெரியலே. ஒய் டோண்ட் யு பிலீவ் மி. ப்ளீஸ் ராம். என்னை நம்புங்கள் ராம். ஐயம் நாட் ஆக்டிங். நான் நடிக்கவில்லை. அட்லீஸ்ட் உங்கள் முன் உங்களிடம் நடிக்கவில்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.” அவள் மேஜையில் முகத்தைக் கவிழ்த்துக் கொண்டாள். அழுகையில் உடம்பு லேசாகக் குலுங்கியது.

அவன் எழுந்து அருகில் வந்தான். மெலிசான குரலில், “நித்யா,” என்று கூப்பிட்டான். அவள் தலை நிமிராமல் அழுதுகொண்டே இருந்தாள்.

“ப்ளீஸ் நித்யா. இந்த அழுகையைக் கொஞ்சம் நிறுத்தேன்.”

“நீங்கள் என்னை நம்புகிறீர்களா ராம்குமார்...?” அவள் நீர் நிரம்பிய கண்களோடு அவனைப் பார்த்துக் கேட்டபோது—

அவனுக்குச் சட்டென்று அந்தக் கண்ணீரைத் துடைத்து அவளைச் சேர்த்துத் தன்னோடு அணைத்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது. ‘நோ டியர், நோ.. நான் உன்னை நம்புகிறேன். மனப்பூர்த்தியாய். நீ சொல்வதை அப்படியே நம்புகிறேன்,” என்று சொல்லத் தோன்றியது. ஆனால்—நடுங்குகிற குரலில்.

“ஐ வில் ட்ரை...” என்றான்.

## 4

அதன் பின் இரண்டு பேரும் மௌனமாகச் சாப்பிட ஆரம்பித்தார்கள். சிறிது நேரம் அமைதியாகப் போயிற்று. பின் ராம்குமாரே பேச ஆரம்பித்தான்.

“எங்கள் வீட்டு சாப்பாடு உங்களுக்குப் பிடிக்

கும் என்று நினைக்கிறேன். ராமகிருஷ்ணன் ஒரு நல்ல சமையற்காரன்.''

''மறுபடியும் நீங்களா?'' என்று புன்சிரிப்பாய் அவனைப் பார்த்தாள் அவள்.

''ஐயம் சாரி. நீ—''

''சாப்பாடு மட்டுமில்லே. எனக்கு இந்த வீடே பிடித்திருக்கிறது. முக்கியமாய் உங்கள் அம்மா—அந்த அன்பையும் பிரியத்தையும் என்னால் மறக்கவே முடியாது. பார்த்த முதல் நிமிஷத்திலேயே இப்படி மனசால் ஒட்டிக் கொள்ள அவர்களால் எப்படி முடிகிறது என்று ஆச்சரிய மாக இருக்கிறது...''

''இஸிட்! யு நோ ஒய்? அம்மாவிற்குக் கணேஷ் மீது பிரியம் அதிகம். ஷி லவ்ட் ஹிம் ஸோ மச், இன் ஸ்பைட் ஆஃப் ஆல் ஹிஸ் வீக்நெஸ்.''

அவள் பேசாமல் இருந்தாள். கணேஷைப் பற்றின பேச்சு வரும் போதெல்லாம் அவள் அமைதியாகி விடுவதை கவனித்தான் அவன். அதனால் வேண்டுமென்று அவனைப் பற்றியே பேச ஆரம்பித்தான்.

''கணேஷோடு நீ எப்படி இருந்தாய்? வேர் யு ஹேப்பி வித் ஹிம்...''

அவள் பதில் சொல்லாமல் நிமிர்ந்து அவன் முகத்தை, கண்களை ஆழமாகப் பார்த்தாள்.

அந்தப் பார்வையில் அவன் சற்று சங்கடப் பட்டுப் போனான். ஆனாலும் விடாமல் மறுபடியும் அதையே கேட்டான்.

''சொல்லு நித்யா. அவனோடு உன் வாழ்க்கை எப்படி இருந்தது...?''

அவள் யோசித்தாள். அவனை அவன் வழியி லேயே போய் மடக்க நினைத்தாள். இனிமேலும் அவனிடம் எதையும் மறுப்பதில் அர்த்தமில்லை என்று தோன்றியது. மெதுவாய்ப் பேசிப் பேசி கணேஷைப் பற்றின விவரங் களைத் தெரிந்து கொண்டால் அதிலிருந்து தன்னைப் பற்றிய விவரமும் தெரியக் கூடும்.

''ஆல்ரைட். நான் எவ்வளவு மறுத்தும் நீங்கள் என்னை கணேஷின் மனைவி என்றே நினைக்கிற போது என் னால் என்ன செய்ய முடியும். மௌனமாய் ஒப்புக் கொள் வதைத் தவிர.''

அவனுக்கு அந்த பதிலின் அமைதி சட்டென்று கோபத்தை ஏற்படுத்தியது.

"நீ ஒப்புக் கொள்ளாது போனாலும் உண்மை உண்மைதான்..."

"ஐ அக்ரி."

"எப்படி இந்த மாதிரி உன்னால் நிதானமாய் அமைதியாக இருக்கிற மாதிரி நடிக்க முடிகிறது? உள்ளுக்குள் அத்தனை விஷத்தையும் வைத்துக் கொண்டு வெளியில் சிரிக்க முடிகிறது?"

நடிப்பு! மறுபடியும் நடிப்புதானா...? அவள் கீழ் உதட்டை அழுத்திக் கடித்துக் கொண்டாள். அவனை நிமிர்ந்து பார்த்தபோது கண் கலங்கிக் கிடந்தது.

"நீங்கள் ஏன் இப்படி என்னை வெறுக்கிறீர்கள்?"

"நீ கணேஷைக் கல்யாணம் பண்ணிக் கொண்டதால்..."

"கல்யாணம் பண்ணிக் கொண்டதற்காக மட்டுமா...?"

"அதற்காக மட்டுமில்லை. கணேஷை எந்த நல்ல பெண்ணாலும் விரும்பியிருக்க முடியாது. அவனைக் கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்க முடியாது. அப்படியே பண்ணிக் கொண்டாலும் அவனைத் திருத்தி நல்ல வழிக்குக் கொண்டு வராமல் இருந்திருக்க முடியாது. ஆனால் நீ... அவனை திருத்த முயற்சிக்காதது மட்டுமில்லை. அவனோடு சேர்ந்து சீட்டு விளையாடி, குடித்து, சிகரெட் பிடித்து, கிளப்பிற்கு போய், எல்லோரோடும் டான்ஸ் ஆடி, நிறைய வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வந்து—"

"நோ..." என்று கத்தினாள் அவள். "நெவர். அந்த மாதிரியெல்லாம் நான் இருந்திருக்க மாட்டேன். நிச்சயமாய் அதெல்லாம் நானில்லை..."

"நீதான். அவனைக் கெடுத்ததே நீதான். அவன் போனது கூட உன்னால்தான்."

அதைக் கேட்டு அவள் உடைந்து போனாள்.

"இல்லை. இப்படியெல்லாம் என்னால் இருந்திருக்கவே முடியாது. இதையெல்லாம் என்னால் கற்பனை பண்ணிப் பார்க்கக் கூட முடியவில்லை."

"உன்னால் முடியாமற் போகலாம். ஆனால் என்னிடம் இதற்கெல்லாம் ஆதாரம் இருக்கிறது. கணேஷின் கடிதங்கள் இருக்கின்றன. வேண்டுமானாலும் நீயும் அவைகளைப் படிக்கலாம்...."

"வேண்டாம். நான் எதையும் படிக்க வேண்

டாம். எந்த நிரூபணமும் எனக்குத் தேவையில்லை. நான் அப்படிப்பட்டவள் என்றே வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் இப்போது மாறி இருக்கக் கூடாதா... திருந்திருக்கக் கூடாதா. அதை ஏன் நம்பமாட்டேன் என்கிறீர்கள்...?''

''திருந்துவதா! நீயா... கணேஷ் கெஞ்சிக் கேட்டு, கோபமாய் சொல்லி, சண்டைபோட்டுப் பார்த்தும் திருந்தாத நீ இப்போது திருந்தியிருக்கிறேன் என்று சொன்னால் அதை எப்படி நம்ப முடியும்? திருந்தியதாய்ச் சொன்னால் அது பணத்திற்காகத்தான்— அம்மாவிடம் நல்ல பெயர் வாங்கி சொத்தைப் பிரித்துக் கொண்டு போவதற்காகத்தான் என்பது புரியாது என்று நினைக்கிறாய் ..?''

அவள் சட்டென்று கண்களைத் துடைத்துக்கொண்டு நிமிர்ந்தாள். முகம் தெளிவாய் இருந்தது. குரல் கணீரென்று வந்தது.

''பணம்...பணம்...ஹெல் வித் யுவர் மனி. எனக்கு எந்தப் பணமும் வேண்டாம். பணத்தை நான் வெறுக்கிறேன். பணம் மட்டுமில்லை. உங்களை—இந்த வீட்டை—ஸோ, லெட் மீ கோ, மிஸ்டர் ராம்குமார். இனிமேலும் இங்கு இருப்பது எனக்கு சாத்தியப்படாது என்று நினைக்கிறேன்.''

அதைக் கேட்டு அவன் அதிர்ச்சியோடு அவளைப் பார்த்தான்.

''என்ன பார்க்கிறீர்கள்? ஐ ஹேவ் ஹேட் எனஃப். உங்களிடமிருந்து நிறைய கேட்டுக் கொண்டாகி விட்டது. இனிமேலும் கேட்டுக் கொள்ள என் மனசில் இடமில்லை.''

''ஐயம் ஸாரி. இனிமேல் நான் இப்படிப் பேசவில்லை.''

''பேசாமல் போகலாம். ஆனால் மனசில் ஆழமாய்ப் பதிந்து போனதை என்ன செய்ய முடியும். எப்படி மாற்ற முடியும்?''

அரை விநாடி பேசாமல் இருந்தான் அவன். பின், ''நித்யா...வரும்போது நீ என்ன சொன்னாய். அப்படிப்பட்டவள் இல்லை என்று நிரூபிக்காமல் இந்த வீட்டை விட்டுப் போவதில்லை என்றுதானே? இப்போது ஏன் போகிறேன் என்கிறாய்? நிரூபிக்க முடியாது என்பதாலா...? நீ தோற்றுப் போய் விடுவாய் என்பதைப் புரிந்து கொண்டதாலா...?''

''இல்லை. உங்களின் நெருப்பான பேச்சைத் தாங்கிக் கொள்கிற சக்தி இல்லாததால்...

னுக்குள் எரிய முடியாததால்.''

''ஓ. கே. பர்கெட் இட். இனிமேல் நான் அப்படிப் பேசவில்லை. இப்படி உன்னை இங்கே தங்கும்படி கெஞ்சிக் கேட்பது அம்மாவிற்காக. அவளுக்கு உன்னைப் பிடித்துப் போன காரணத்திற்காக...''

அவள் மௌனமாய் பதில் சொல்லாமல் யோசித்தாள்.

''என்ன யோசனை. நான்தான் இனிமேல் உன்னைக் கஷ்டப்படுத்துகிற எந்தப் பேச்சையும் பேசமாட்டேன் என்கிறேனே...''

''ப்ராமிஸ்...?''

''ஐ ப்ராமிஸ்.''

நீட்டின அவள் கையில் தன் கையை வைத்த போது அந்தக் கை ரோஸ் நிறத்தில் மெத்தென்று இருப்பதைக் கவனித்தான். நீளநீளமாய் அழகான விரல்கள். சித்திரம் வரைகிற கை மாதிரி. வீணை வாசிக்கிற வகை மாதிரி... என்ன அழகு... அந்தக் கையை விட மனமில்லாமல் அரை விநாடி பற்றிக் கொண்டே இருந்தான். பின் சரெலென்று விட்டுவிட்டு நகர்ந்தான்.

அவன் போவதையே பார்த்துக் கொண்டு நின்ற நித்யா பின் மறுபடியும் மாடிக்குப் போனாள். அவனுடைய அம்மாவின் அறைக்கு போய், ''சாப்பிட்டீர்களா...?'' என்று கேட்டாள்.

''ஆச்சு. நீ சாப்பிட்டாயாம்மா?''

''ம்...''

''சாப்பாடு பிடித்ததா...?''

''ம்...''

''ஏன் என்னவோ மாதிரி இருக்கிறாய். ராம்குமார் ஏதாவது சொன்னானா...?''

''இல்லையே...''

''பொய் சொல்லாதேம்மா. அவன் ஏதாவது சொல்லியிருப்பான். அவனுக்கு மனசில் எதுவும் நிற்காது. கணேஷ் எங்களிடமெல்லாம் சொல்லாமல் கல்யாணம் பண்ணிக் கொண்ட வருத்தம் அவனை விட்டு இன்னும் போகவில்லை...''

அவள் ஒன்றும் சொல்லாமல் மௌனமாக உட்கார்ந்திருந்தாள்.

''ராம்குமார் ரொம்ப ஆழமானவன். அமைதியானவன் நித்யா. ஆனால் கணேஷ் அப்படி இல்லை. சிரிக்

காமல் அவனால் பேசமுடியாது. விளையாடாமல் இருக்க முடியாது. அந்தப் பேச்சும், சிரிப்பும், கலகலப்பும்... அவனுக்குப் பின்னால் இந்த வீடே நிசப்தமாகிவிட்டது நித்யா. அமைதியாகிவிட்டது.'' அதற்கும் அவள் பேசாமல் இருக்கவே சாரதாவே பேசிக் கொண்டு போனாள்.

''உன்னைப் பார்த்தால் கணேஷ்குமாருக்கு எதிர்மாறான குணமுடையவளாகத் தெரிகிறது. கிட்டத்தட்ட நீயும் ராம்குமாரும் ஒரே மாதிரி இருப்பீர்கள் போல் இருக்கிறது. இத்தனை நிதானமாய், அமைதியாய் இருக்கிற உனக்கு எப்படிம்மா அந்த ஆர்ப்பாட்டமும், கலகலப்பும் பிடித்தது...?''

சட்டென்று அதிகம் களைத்துப் போனாள் அவள். கணேஷ்...கணேஷ்...! வேறு எதுவும் பேசமாட்டார்களா...? ஒரே நாளில் இத்தனை பேச்சுக்களா? இத்தனை அதிர்ச்சியா? தாங்க முடியாது போல் இருக்கிறதே...

அந்த முகச் சலிப்பைப் பார்த்துச் சட்டென்று நிறுத்திக் கொண்டாள் சாரதா.

''நான் அப்போதே இனிமேல் அந்தப் பேச்சை எடுக்க மாட்டேன்னு சொல்லலே? தவறிப் போய் வந்து விட்டது. நாம் வேறு ஏதாவது பேசலாம்மா...உம்...?''

அதைக் கேட்டு லேசாகச் சிரித்தாள் அவள். அந்தச் சிரிப்பைப் பார்த்ததும் சாரதாவின் முகமும் பளிச்சிட்டது.

''வீட்டைச் சுற்றிப் பார்த்தாயாம்மா...?'' என்று கேட்டாள்.

''இல்லே,'' என்று நித்யா தலையாட்டினதும், ''ராம்குமார் சுற்றிக் காட்டலையா...!'' என்று மறுபடியும் கேட்டாள்.

''இல்லேம்மா. அவர் அவசரமாகக் கிளம்பிப் போய் விட்டார்.''

''என்ன பிள்ளை அவன். எதற்காக இப்படி அலைகிறானோ தெரியலே...'' என்று முணுமுணுத்துக் கொண்டாள். பின் ''பிரகாஷ் வந்து விட்டானாம்மா..?'' என்று கேட்டாள்.

''பிரகாஷா. இல்லையே.. நான் பார்க்கலையே..?''

''அப்படியானால் இன்னும் வரலே போலிருக்கு. அவன் என்னுடைய அண்ணா பிள்ளை. இங்கே தங்கி டாக்டருக்குப் படிக்கிறான். கடைசி வருஷம்.''

''அப்படியா....?''

''வரட்டும். அவனையும் அறிமுகப் படுத்தி வைக்கிறேன்...'' என்றவள், ''போய்மா. போய், கொஞ்ச நேரம் தூங்கு. பதினைந்து நாளாக ஆஸ்பத்திரியில் இருந்து விட்டு இன்றுதான் வந்திருக்கிறாய். உடம்பை அலட்டிக் கொள்ளாதேம்மா...'' என்றாள்.

அவளும் களைப்பாக உணரவே சட்டென்று எழுந்து கொண்டாள்.

''உங்களுக்கு ஏதாவது வேண்டுமாம்மா...?'' என்று கேட்டாள்.

''வேண்டாம். என்னை கவனிக்துக் கொள்ள வேலைக்காரி இருக்கிறாள். நீ அனாவசியமாய்ச் சிரமப்படாதே...''

''இதில் என்ன சிரமம். எந்த வேலையும் செய்யாமல் எப்படி இருக்க முடியும்?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டதும் சாரதா சற்று யோசித்தாள். பின், ''உனக்கு இங்கே பொழுது போகவேண்டுமென்றால் ராம்குமார் கிட்டே சொல்லி நர்ஸிங்ஹோமில் ஏதாவது வேலை தரச் சொல்கிறேன், செய்கிறாயாம்மா...?''

ஒரு விநாடி அவள் முகம் பளிச்சிட்டுப் பின் சட்டென்று வாடியது.

''நர்ஸிங் ஹோமிலா? என்ன வேலை கிடைக்கும் எனக்கு...?''

''நீ என்னம்மா படித்திருக்கிறாய்...?''

படிப்பு...என்ன படித்திருக்கிறோம். பி.ஏ? இல்லாவிட்டால் எம். ஏ? எதுவரை படித்திருக்கிறோம்?

அந்த நினைவில் அதிர்ந்து போனாள் அவள். இது கூட நினைவில்லாமல் எப்படி எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள முடியும்? எங்கே வேலைக்குப் போக முடியும்? யார் வேலை கொடுப்பார்கள்?

என்ன படித்திருக்கிறீர்கள்...?
தெரியலை.
சர்டிஃபிகேட்டுகள் உண்டா?
இல்லை.
டைப்ரைட்டிங் தெரியுமா?
ஷார்ட் ஹாண்ட் தெரியுமா?
டெலிபோன் ஆபரேட் பண்ண முடியுமா?
தெரியாது.
தெரியாது.
தெரியாது.
இந்த பதிலுக்கு—இந்த மறதிக்கு எங்கே வேலை

கிடைக்க முடியும்...?

"என்னம்மா பதிலே இல்லே...?"

"ம்...என்ன கேட்டீர்கள்...?"

"உன் படிப்பு என்னன்னு—"

தெரியலேயம்மா. படிப்பு மட்டும்தானு, நான் யார், என்னுடைய அம்மா அப்பா யார், அவர்கள் எங்கே இருக்கிறார்கள், எப்படி எனக்குக் கல்யாணமாயிற்று, எதுவும் தெரியலேயம்மா. இதெல்லாம் தெரியாதபோது எதிர் காலத்தை நினைத்தால் பயமாக இருக்கிறதும்மா. என்ன செய்வது என்று புரியாமல் போகிறது. எத்தனை நாள் இங்கே தங்குவது. இந்த இடத்தை விட்டால் எங்கு போவது. தனியாக எப்படி வாழ்வது.. எதுவும் புரியலி யேம்மா...

முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு அவள் உடம்பு குலுங்க ஆரம்பித்ததும் கதறிப் போனுள் சாரதா.

"என்னம்மா இது..." சாரதா அவள் முகத்தை நிமிர்த்தினுள். "நீ எங்கேம்மா போகணும். யார் உன்னைப் போக விடப் போகிறார்கள். எதற்காக இப்படி அழுகிறாய். எழுந்திரம்மா. எதற்கும் கவலைப்படாதே. எதுவானுலும் நான் உன்னோடு இருப்பேன். தைரியமாக இரு. ராம்குமாரி டம் நானே இதைப் பற்றிப் பேசுகிறேன். போம்மா. போய்க் கவலைப்படாமல் தூங்கு.."

அறைக்குத் திரும்பின நித்யாவிற்குத் தூக்கம் வரவில்லை. எதிர்காலத்தைப் பற்றின பயம் அவளை மருட்டிற்று. ராம்குமாரின் பேச்சுக்கள் ஒவ்வொன்ருக நினைவுக்கு வந்தன. கண் சட்டென்று கலங்கியது. மற்ற எல்லாவற்றையும் விட அவன் தன்னைத் தப்பாக நினைத்துக் கொண்டிருப்பதுதான் அவளை இன்னும் வருத்தியது. அவனது மனசில் தான் உயர மான ஓர் இடத்தைப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்தாள்.

உயரம் இருக்கட்டும். முதலில் அந்த மனத்தில் அவளுக்கு ஓர் இடம் கிடைக்குமா...?

சட்டென்று அவன் கையைப் பற்றி அழுத்தினது ஞாபகத்திற்கு வந்தது. அந்த ஸ்பரிசத்தில் அவன் மனம் புரிந்து போனதாக நினைத்தாள் அவள்.

# 5

தூங்கி எழுந்து மணி பார்த்தாள் நித்யா. ஐந்து பத்தாகி இருந்தது. அறைக்குள் லேசான மஞ்சள் வெய்யிலாக அடித்தது. முகத்தை மட்டும் அலம்பித் துடைத்துக் கொண்டு வெளியில் வந்தபோது சாப்பாட்டு அறையிலிருந்து சிரிக்கிற சத்தம் கேட்டது. செல்லமாகச் சிரிக்கிற சிணுங்கல் சிரிப்பு. ஒரு பெண்ணின் சிரிப்பு. யாராக இருக்கும் என்று யோசித்துக்கொண்டே போனபோது ராம்குமாரின் எதிரில் சல்வார் கம்மீஸோடு ஒரு பெண் உட்கார்ந்து கொண்டிருந்தாள். பாப் பண்ணின தலை. பளபளவென்று மின்னுகிற முகம். லிப்ஸ்டிக் பூசின உதடுகள். அறை முழுதும் லேசான அமெரிக்க ஸெண்ட்டின் வாசனை.

அந்தப் பெண் அவளை ஒரு விநாடி தீர்க்கமாகப் பார்த்தாள். பின்—

"இவள்தான் நித்யாவா, ராம்?" என்று கேட்டாள்.

காப்பிக் கோப்பையைக் கீழே வைத்துவிட்டு, மெதுவாக நிமிர்ந்தான் அவன்.

"வா, நித்யா..." என்றான். "மீட் மிஸ் மீனா. மை கஸின்."

நித்யா மெதுவான குரலில் 'ஹலோ' சொன்னாள். பின் அவர்களுக்கு எதிரில் போய் உட்கார்ந்து கொண்டாள். அவளுக்கும் காப்பி வந்தது. அந்தத் தூக்கத்திற்குப் பின் சூடான அந்த காப்பி இதமாக இருந்தது. குடித்து முடிக்கிறவரை யாரும் பேசவில்லை. அவள் கோப்பையைக் கீழே வைத்ததும் மீனா லேசான சிரிப்போடு சொன்னாள். "இந்த வீட்டில் 'காப்பி நன்றாக இருக்கும் என்று தெரியும்.' ஆனால் இவ்வளவு நன்றாக இருக்கும் என்று இப்போதுதான் புரிந்தது."

தான் ஒரே மூச்சில் குடித்து முடித்ததைத்தான் இப்படிச் சொல்கிறாள் என்று புரிந்து கொண்டாள் நித்யா. சட்டென்று முகம் சிவந்து போயிற்று. மெதுவாகத் தலையைக் குனிந்து கொண்டாள்.

அதைக் கவனிக்காத மாதிரி சரேலென்று எழுந்தாள் மீனா.

''போகலாமா ராம்...?''

''நித்யாவும் வருகிருளா கேட்போமே...?'' என்று அவள் முகத்தைப் பார்த்தான் அவன்.

''எங்கே?''

''சினிமாவிற்கு.''

''நான் எதற்கு. நீங்கள் போய்விட்டு வாருங்களேன்...''

''நாங்கள்தான் போகிறோமே.. நீயும் கூட வா என்றுதானே கேட்கிறேன்.''

''அவள்தான் வரமாட்டேன் என்கிருளே... எதற்காக வற்புறுத்துகிறீர்கள் ராம்....''

''இரு மீனு. இங்கே தனியாக என்ன பண்ணப் போகிருள் அவள்...''

''அம்மாவோடு பேசிக் கொண்டிருப்பாள். இல்லா விட்டால் கணேஷைப் பற்றி நினைத்துக் கொண்டிருப்பாள். அதுவும் இல்லை என்றுல் மறந்து போன நினைவுகளை ஞாப கப் படுத்திப் பார்ப்பாள். அவள் தனிமையை எதற்காகக் கலைக்கப் பார்க்கிறீர்கள்...?''

''கொஞ்சம் பேசாமல் இரேன் மீனு. நான் கேட் டுப் பார்க்கிறேனே...''

''இல்லை— ராம். நீங்கள் போய் விட்டு வாருங்கள். இப்போது நான் சினிமா பார்க்கிற மனநிலையில் இல்லை.''

''அதனுல்தான் கூப்பிடுகிறேன் நித்யா. வெளி யில் வந்தால் மனசு சற்றுச் சரியாகும்.''

அவனுக்காக அதற்கு மேல் அங்கு காத்துக் கொண்டு நிற்கப் பிடிக்காமல் வெளியில் போனுள் மீனு. போகும்போது, ''நான் காருக்குப் போகிறேன். வந்தால் அழைத்துக் கொண்டு வாருங்கள்...'' என்று சொல்லிவிட் டுப் போனுள். அந்த நடையில் சரேலென்று திரும்பின திரும்பலில் அவள் கோபம் பளிச்சிட்டது.

அதைக் கவனிக்காத மாதிரி அவன் நித்யாவின் அருகில் வந்தான். மென்மையாய் அவளைப் பார்த்தான். பின்—

''அழுதாயா நித்யா...?'' என்று கேட்டான். அவள் இல்லை என்று தலையாட்டினுள். அவன் மெதுவாய் அவள் முகத்தை நிமிர்த்தினுன். அந்தக் கண்களையே ஆழமாகப் பார்த்துக் கொண்டு கேட்டான்.

''பொய் சொல்லாதே நித்யா. பின் ஏன் உன் கண் இப்படிச் சிவந்து போயிருக்கிறது?''

அந்தக் குரல், முகம், பார்வை, பேச்சின் மென்மை... இவன் பழைய ராம்குமார் இல்லை. தன்னை வெறுக்கிற ராம்குமார் இல்லை. புது ராம்குமார். தனக்காக—தன் அழுகைக்காகக் கஷ்டப்படுகிற ராம்குமார்.

'ராம்...ராம்...' என்று அவன் மார்பில் முகத்தைப் பதித்துக் கொள்ள வேண்டும். சாரதாவிடம் அழுத மாதிரி அழ வேண்டும். 'என் எதிர்காலம் என்ன ராம்? டு யு லவ் மீ ராம்...? இனிமேல் என்னை வெறுக்க மாட்டீர்களே...தப்பாக நினைக்க மாட்டீர்களே.. பணத்திற்காகத்தான் நான் இங்கு வந்திருப்பதாகப் பேச மாட்டீர்களே... முக்கியமாய்...முக்கியமாய் நான் கணேஷ்குமாரின் மனைவி என்று சொல்ல மாட்டீர்களே...!'

எல்லாவற்றையும் கேட்க நினைத்து எதையும் கேட்காமல் மௌனமாக இருந்து அவன் முகத்தை கண்களைப் பார்த்துக் கொண்டு நின்று—ஒரு நிமிஷம் இரண்டு நிமிஷம் என்று அப்படியே போய்ப் பின் அறை வாசலில் கேட்ட மீனுவின் குரலில் கலைந்து விலகித் தலை குனிந்து நின்று...

"என்ன ராம்.... இங்கேயே எனக்குச் சினிமா காட்டி விடுகிறீர்களா? டிக்கெட் வாங்குகிற செலவும் தியேட்டர்வரை போகிற அலைச்சலும் மிச்சம் என்று நினைக்கிறீர்களா...?" மீனு கேட்டாள்.

"டோண்ட் பி ஸ்டுப்பிட். வா போகலாம்," என்று சரேலென்று வெளியில் போனான் அவன்.

அவன் போனதும் மீனு நித்யாவை நிட்சண்யமாகப் பார்த்தாள்.

"நீ எதற்காக இங்கு வந்தாய்...?" என்று கேட்டாள்.

நித்யாவிடமிருந்து பதில் இல்லை.

"கணேஷின் வாழ்க்கையைப் பாழாக்கினது போதாதா...? உன்னால் அவர் தற்கொலை பண்ணிக் கொண்டது போதாதா. இப்போது ராமும் தற்கொலை பண்ணிக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறாயா? ஹௌ டேர் யு பிஹேவ் லைக் தட்...ம்..?"

அதற்கும் அவள் மௌனமாகத்தான் இருந்தாள்.

"லுக் ஹியர் நித்யா. உனக்குத் தேவை பணம் தானே? வாங்கிக் கொண்டு போ. எவ்வளவு வேண்டுமானாலும் வாங்கிக் கொள். சீக்கிரம் இந்த இடத்தை விட்டுக்

ளம்பு. நீ ராம்குமாரோடு பழகுவதை, அவரையும் பாழாக்கப் பார்ப்பதை என்னால் அனுமதிக்க முடியாது. புரிகிறதா....?''

அதற்கும் வெறும் மௌனம் மட்டுமே பதிலாகக் கிடைத்ததும் அவள் பார்வை இன்னும் பளபளத்தது.

''எல்லாவற்றிற்கும் பேசாமல் நின்றால் என்ன அர்த்தம். போகிறேன் என்று அர்த்தமா....? மாட்டேன் என்று அர்த்தமா....?''

''யாரைப் போகச் சொல்கிறாய் மீனு....?''

புதிதாய்க் கேட்ட அந்தக் குரலில் திரும்பிப் பார்த்தாள் அவள். பிரகாஷ் நின்று கொண்டிருந்தான். கையில் பெரிதாய் இரண்டு புத்தகங்களும்—ஸ்டெதஸ்கோப்பும் இருந்தன. முகம் புன்சிரிப்பாகச் சிரித்துக் கொண்டிருந்தது.

''ம்...யாரையும் இல்லை...'' என்று முணுமுணுத்துக் கொண்டே போனாள் மீனு.

அவள் போவதையே அரை விநாடி பார்த்துக் கொண்டு நின்று பின் நித்யாவின் பக்கம் திரும்பினான் பிரகாஷ்.

''ஐயம் பிரகாஷ்,'' என்று அறிமுகப் படுத்திக் கொண்டான்.

''நான்...நான் நித்யா...''—அவள் குரல் தடுமாறியது.

''தெரியும். நீங்கள் வரப் போவதாகக் கடிதம் எழுதினது. உங்கள் விமானம் விபத்துக்குள்ளானது. அப்புறம் ராம் உங்களைத் தன் நர்ஸிங் ஹோமிற்குக் கொண்டு வந்தது எல்லாம் தெரியும். நான் கூட அங்கு வந்து உங்களை இரண்டு தரம் பார்த்தேன். அப்போது உங்களுக்கு எந்த நினைவும் இல்லை. இப்போது எப்படி இருக்கிறீர்கள்..?''

''ஐயம் ஆல் ரைட். உடம்பிற்கு ஒன்றும் இல்லை...''

''உடம்பிற்கு ஒன்றும் இல்லாமற் போனால் மட்டும் போதாது. மனசிற்கும் ஒன்றும் இருக்கக் கூடாது.'' சொல்லிவிட்டு மென்மையாய்ச் சிரித்தான் அவன். அவள் அதைக் கேட்டு பேசாமல் இருந்தாள். அவன் சிறிது தயங்கி அந்த முகத்தையே பார்த்தபடி மெதுவாகப் பேசினான். ''மீனு உங்கள் மனசு கஷ்டப்படுகிற விதத்தில் ஏதாவது பேசினாளா...? அப்படிப் பேசி இருந்தால் தயவு செய்து அதைப் பெரிதாய் எடுத்துக் கொள்ளாதீர்கள். மீனு

வாழ்க்கையில் அதிகம் கஷ்டப்படாதவள். எந்த அனுபவமும் இல்லாதவள். எல்லாமே அவளுக்கு சுலபம்தான். லைஃப் இஸ் வெரி ஈஸி ஃபர் ஸம் பீப்பள். அதில் மீனுவும் ஒருத்தி. அதனால் உங்கள் கஷ்டம் புரியாமல்—மனசு புரியாமல் அவள் ஏதும் பேசி இருக்கலாம். வில் யு ப்ளீஸ் பர்கெட் இட் மிஸஸ் கணேஷ்குமார்...''

மறுபடியும் மிஸஸ் கணேஷ் குமார்! அதிலிருந்து தன்னால் இனிமேல் மீளவே முடியாதோ என்று தோன்றியது. ஒரு வேளை அவள் நிஜமாகவே கணேஷின் மனைவிதானோ..?

''என்ன யோசிக்கிறீர்கள் மிஸஸ் கணேஷ் குமார்...''

''ப்ளீஸ், ஒய் டோண்ட் யு மேக் இட் நித்யா?''

அதைக் கேட்டு அரைவினாடி அவளையே பார்த்தான். பின் சின்னச் சிரிப்பாய் சிரித்து— ''ஓ. கே. நித்யா. உங்களை அது கஷ்டப்படுத்துமானால் நான் அப்படிக் கூப்பிட வில்லை,'' என்றான். பின்—''ஹௌ அபௌட் எ கப் ஆஃப் காப்பி..?'' என்று கேட்டான்.

''நான் இப்போதுதான் சாப்பிட்டேன்.''

''பரவாயில்லை. எனக்குக் கம்பெனி கொடுங்களேன்...''

அதை மறுக்க முடியாமல் அவள் அவனுடன் இன்னொரு கப் காப்பி சாப்பிட்டாள். அவன் தன் கல்லூரி, மாணவர்கள், புஸ்தகங்கள், சினிமா என்று நிறைய பேசினான். எல்லாம் பொதுவான பேச்சாகத்தான் இருந்தது. எதுவும் அவளைப் பற்றின கேள்வியாக இல்லை.

''நீங்கள் யாருடைய புத்தகங்கள் எல்லாம் படிப்பீர்கள் நித்யா....?''

''ம்...ஆல்பர்ட் காமு, காஃப்கா, ஜே. கே. ஹக்ஸ்லி...''

''மை குட்நெஸ். எல்லாம் ஒரே ஸீரியஸ் ரீடிங்காக இருக்கிறதே...லைட் ரீடிங் எதுவும் கிடையாதா...?''

''நோ மிஸ்டர் ப்ரகாஷ். ஐ'ம் பை நேச்சர் வெரி ஸீரியஸ் பர்ஸன்...''

''ஐ ஸீ... இருக்கலாம். ஆனால் எல்லாவற்றையும் கனமாக எடுத்துக் கொள்ளக் கூடாது நித்யா. சில விஷயங்களை லைட்டாக எடுத்துக் கொள்ளத் தெரிய வேண்டும். வாய்விட்டு சிரிக்கத் தெரிய வேண்டும். அந்தச் சிரிப்பு மட்டும் நமக்குள் வந்து விட்டால் பின் எல்லாவற்றிற்கும் சிரிக்கத் தோன்றும்...''

"நீங்கள் சொல்கிற மாதிரி அப்படி சிரிப்பது சுலபமில்லை மிஸ்டர் ப்ரகாஷ்..."

"சுலபமில்லைதான். ஆனால் பழகிப் போய் விட்டால் எல்லாம் சுலபமாகிவிடும் நித்யா.."

"யோசித்துப் பார்த்தபோது அது உண்மை என்றே பட்டது. எப்படிப் பேசுகிறான் இவன் என்ற ஆச்சரியமும் வந்தது. ஜன்னல் கதவைத் திறந்து வைத்தாற் போல் மனசுக்குள் சிலுசிலுத்தது.

அவன் நாற்காலியைத் தள்ளிக் கொண்டு எழுந்தான். கைக் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே, "வரட்டுமா..? எட்டு மணிக்கு நண்பன் ஒருவனைப் பார்க்கப் போக வேண்டும்," என்றான்.

அறை வாசலுக்குப் போய் சட்டென்று நின்றான்.

"உங்களிடம் நான் ஒன்று சொல்லலாமா..?" என்று தயங்கினான்.

"சொல்லுங்கள்."

"இப்போது உங்களுக்குப் பிடிக்கிற புஸ்தகங்கள் எல்லாம் நினைவுக்கு வந்த மாதிரி மற்ற விஷயங்களும் ஞாபகத்திற்கு வரக் கூடும். முயற்சி பண்ணுங்கள்." சொல்லிவிட்டுச் சிரித்துக் கொண்டே போனான் அவன். அவளைச் சந்தேகிக்கிற சிரிப்பாக இது இல்லை. கோபம் வெறுப்பு எதுவும் இல்லை. ரணத்தைப் பஞ்சால் ஒற்றுகிற இதமாய், நிதானமாய்....

எப்படிப் பேசிவிட்டுப் போனான்..!

எழுந்து ஹாலுக்கு வந்து கடிகாரத்தைப் பார்த்த போது மணி எட்டாகி இருந்தது. அந்தப் பெரிய வீட்டில் தனியாய் வேலை எதுவுமில்லாமல் சுற்றி வருவது கஷ்டமாகத் தெரிந்தது. எத்தனை நாளைக்கு இந்தச் சுற்றல் என்ற கேள்வி எழுந்து அவளை சலிப்படையச் செய்தது. டீபாய் மீது கிடந்த இல்லஸ்ட்ரேடட் வீக்லியை எடுத்துக் கொண்டு லானிற்குப் போனாள். டூம் விளக்கின் அடியில் கூடை நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து பத்திரிகையைப் புரட்ட ஆரம்பித்தாள்...

# 6

அரை மணி நேரம் படித்திருப்பாள். அதற்குள் வேலைக்காரி வந்து சாரதா கூப்பிடுவதாகச் சொல்லவும் எழுந்து போனாள். அவள் போனபோது சாரதா சாப்பிட்டுக் கைகழுவிக் கொண்டிருந்தாள். கையை நாப்கினால் துடைத்துக் கொண்டே, "வாம்மா..." என்றாள். "நீ சாப்பிட்டாயாம்மா...?"

இல்லை என்ற பதில் வந்ததும், "ஏம்மா, ராம் இன்னும் வரலை..?" என்று அவளைப் பார்த்தாள்.

"இல்லை."

"நர்ஸிங் ஹோமிலிருந்தே வரலையா...?"

"நர்ஸிங் ஹோமிலிருந்து வந்து சினிமாவிற்குப் போயிருக்கிறார்."

"சினிமாவிற்கா..! ராமா..! யாரோடு போயிருக்கிறானம்மா..?"

"மீனுவோடு..."

"மீனுவா...வந்திருந்தாளா என்ன? என்னைப் பார்க்க வரவே இல்லையே.."

"______"

"அவள் மட்டும் வந்தாளா, இல்லை அவளுடைய அப்பாவும் வந்திருந்தாரா...?"

"அவள் மட்டும் தனியாகத்தான் வந்திருந்தாள்."

"அப்படியா...? ராம் அவளோடு சினிமாவிற்குப் போயிருப்பது ஆச்சரியமான விஷயம்தான்..."

"ஏம்மா, போகமாட்டார்களா என்ன?"

"ஊஹூம். அந்தப் பெண் கெஞ்சிக் கெஞ்சி கூப்பிடும். இவன் இன்றைக்கு அல்ஸர் ஆபரேஷன், ஹெர்னியா ஆபரேஷன் என்று ஏதாவது சாக்கு சொல்வான்..."

"___"

"அந்தப் பெண்ணுடைய அப்பாவும் மூன்று நான்கு தடவை வந்து கல்யாணத்தைப் பற்றி அவனிடமே கேட்டு விட்டுப் போய் விட்டார். இவன் சரி சொன்னால் தானே மேலே எதுவும் செய்ய முடியும்.."

"அவர் மீனுவிடம் நன்றாகத்தானே பழகுகிறார்..."

"பழகுகிறான், பேசுகிறான். கல்யாணம் என்றால் மட்டும் சிரித்து விட்டு ஒதுங்குகிறான்."

"அப்படியா...?" என்று அவள் மெலிசாய்ப் பெருமூச்சு விட்டாள்.

"ஏம்மா, சினிமாவிற்கு நீ போகலே? உன்னை அவர்கள் கூப்பிடலே...?"

"கூப்பிட்டார்கள். நான்தான் போகலே."

அதன் பின் சிறிது நேரம் பொதுவாகப் பேசினாள். புஸ்தகம் ஒன்றைப் படித்துக் காட்டச் சொன்னாள். பாதி படித்துக் கொண்டிருந்த போதே தூங்கிப் போய் விட்டாள்.

புத்தகத்தை மூடி வைத்து விட்டு சத்தப்படுத்தாமல் வெளியில் வந்தாள் நித்யா. வராந்தாவில் போய் நின்று வானத்தைப் பார்த்தாள். பார்க்கப் பார்க்க வானம் அழகாகத் தெரிந்தது. நட்சத்திரங்கள் பேசுவதாகப் பட்டது. மினுங்கி மினுங்கி ஒவ்வொன்றும் எத்தனை பேச்சுக்கள்.

பார்த்துக் கொண்டு நின்றபோது கேட் திறக்கப் படுகிற சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தாள். ராம் குமாரின் கார் உள்ளே வந்து கொண்டிருந்தது. அவன் இறங்கித் தன் அறைக்குப் போய் உடை மாற்றிக் கொண்டு வெளியில் வந்தபோது அவள் படியிறங்கி வந்தாள்.

"சாப்பிட்டாயிற்றா நித்யா...?"

"இல்லை..."

"இன்னுமா சாப்பிடவில்லை. மணி பத்தாகப் போகிறதே. வா சாப்பிடலாம்..."

அவள் அவனுக்கு முன்னால் உட்கார்ந்து தட்டில் வெறுமையாய் அளைந்து கொண்டிருந்தாள். அதைப் பார்த்த அவன் சாப்பிடுவதை நிறுத்திவிட்டுக் கேட்டான்.

"ஏன் நித்யா...சாப்பிடலே...?"

"பசிக்கலே."

"ஏன் பசிக்கலே...?"

"—"

"நிஜமாகவே பசி இல்லையா...? இல்லாவிட்டால் கோபமா...?"

"கோபமா...? எனக்கா...? நான் யார் மீது கோபப்பட முடியும் சொல்லுங்கள்?"

"ஏன். என் மீது, மீனு மீது..."

"இல்லே. யார் மீதும் கோபமில்லே. கோபப்படக் காரணமும் இல்லே."

"இருப்பதால்தானே கேட்டேன். ஏன் நித்யா, மீனு உன் மனசைக் கஷ்டப்படுத்துகிற மாதிரி ஏதாவது கேட்டாளா...?"

"இல்லையே... எதுவும் கேட்கவில்லையே.."

"பொய் சொல்கிறாயே நித்யா. மீனு உன்னை இந்த இடத்தை விட்டுப் போகச் சொல்லிக் கேட்க வில்லை? அவள் என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போவதாகச் சொல்லவில்லை..."

"——"

"என்ன பேசாமல் இருக்கிறாய்...? அதற்கா இப்படிச் சாப்பிடப் பிடிக்காமல் கஷ்டப்படுவது? ம்..?"

"அதற்காக இல்லை. பசிக்கவில்லை..."

புன்சிரிப்பாகச் சிரித்தான் அவன். அதில் எனக்கு நம்பிக்கை இல்லை என்கிற மாதிரி.

பேச்சை மாற்றுவதற்காக நித்யா, "படம் எப்படி இருந்தது?" என்று கேட்டாள்.

"என்ன படம்..?"

"நீங்கள் போன சினிமா..."

"யார் போனார்கள்..."

"போகவில்லை...?"

"எங்கே போவது? மீனுதான் கோபித்துக் கொண்டு போய் விட்டாளே..."

"ஐ'ம் ஸாரி. என்னால்தான் உங்களுக்குள் அனாவசியமான மனக் கஷ்டம்."

"டோண்ட் பி ஸில்லி," என்று கைகழுவ எழுந்தான் அவன். கழுவிக் கொண்டு வந்ததும், "நாளைக் காலை நான் நர்ஸிங் ஹோம் போகிறபோது தயாராய் இரு நித்யா. உன்னை அழைத்துக் கொண்டு போய்ப் புடவையும், ஜாக்கெட்டும் வாங்கித் தர வேண்டுமென்று அம்மா சொன்னாள்..."

நித்யா அதற்கு பதில் சொல்லவில்லை.

"என்ன நித்யா பேசாமல் இருக்கிறாய்? என்னுடன் வர இஷ்டம் இல்லையா...?"

"அதில்லை. புடவைக்காக ஆகிற பணத்தை என்னிடமிருந்து நீங்கள் வாங்கிக் கொள்வதானால் நான் வருகிறேன்."

"உன்னிடமிருந்து நான் பணம் வாங்கிக் கொள்வதா...என்ன நித்யா இது...!"

"இல்லாவிட்டால் எனக்குப் புடவை வேண்டாம்."

''நிறைய பணம் வைத்திருக்கிறாயா?''

''இப்போது இல்லை, அப்புறம் பின்னால் நான் சம்பாதிக்கிறபோது கொடுத்து விடுவேன்.''

''சம்பாதிக்கப் போகிறாயா...? எங்கே...? எப்படி நித்யா...?''

''அம்மா வேலை வாங்கித் தருவதாகச் சொல்லி யிருக்கிறார்கள்...''

''அம்மாவா...? எங்கே.. யாரிடம்?''

''ஒரு நர்ஸிங் ஹோமில்...''

''நர்ஸிங் ஹோமா! யாருடைய நர்ஸிங்ஹோம் நித்யா...?''

''யாரோ டாக்டர் ராம் குமாராம். அவருடைய நர்ஸிங் ஹோமாம்.''

அதைக் கேட்டுப் பெரிதாய்ச் சிரித்தான் அவன். ஒரு நிமிஷம் சிரித்துக் கொண்டே இருந்தான். கண்ணோரம் நீர் கட்டினதும் சட்டென்று நிறுத்தினான்.

''அந்த ராம்குமாரா...அதனிடமா வேலை செய்யப் போகிறாய். அது ஒரு பெரிய சிடுமூஞ்சியாயிற்றே நித்யா...?''

''சிடுமூஞ்சி மட்டுமில்லை. பெரிய சந்தேகக் காரனும் கூட என்று அம்மா சொன்னார்கள்.''

''அப்புறம் வேறு என்ன சொன்னார்கள்...?''

''சட்டென்று கோபம் வரும். வார்த்தைகளால் மனசைக் கீறும். ஆனால் அடுத்த நிமிஷமே பஞ்சும் மருந்துமாக ஓடிவரும் என்றார்கள்.''

''அப்புறம்...?''

''அது ஒரு தொண்டு கிழம். வயசு ஐம்பத்தைந்து. அதனால் இன்னும் பெண்கள் என்றாலே எரிந்து விழும். பெரிய விஸ்வாமித்திரர் என்று சொன்னார்கள்...''

''அப்படியா.. என்னிடம் கூட அதே மாதிரி ஒன்று சொன்னார்களே...''

''என்ன...?''

''அந்த விஸ்வாமித்திரருக்காக நித்யா என்கிற மேனகையை அனுப்பி இருப்பதாகச் சொன்னார்கள்.''

அவள் சட்டென்று தலையை குனிந்து கொண்டாள். அவன் ''நி—த்—யா—'' என்று அருகில் வந்தான். அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான். அந்த முகத்தை நிமிர்த்தித் தன் உதட்டால் அவள் உதடுகளைத் தேடினபோது அவள் சரேலென்று அவனை விலக்கி

னாள். "நோ ராம். ப்ளீஸ் நோ..." என்றாள்.

"ஒய்...? டோண்ட் யு லைக் மீ.."

"நீங்கள் இன்னும்கூட நான் கணேஷின் மனைவி என்று நம்புகிறீர்கள் ராம்.."

"ஸோ வாட். ஹி ஈஸ் நோ மோர். கணேஷ் இப்போது உயிரோடு இல்லை."

"ஆனால் நான் இருக்கிறேன். இன்னமும் அவர் மனைவி என்ற பெயரோடு—"

"நித்யா..." என்று கோபத்தோடு அதட்டினான் அவன். "கெட் லாஸ்ட். அண்ட் நெவர் ஸீ மீ அகெய்ன்!"

அவன் சாத்திக் கொண்டு போன வேகத்தில் ஸ்பிரிங் கதவு ஆடியது. ஒரு விநாடிக்கெல்லாம் கார் கிளம்புகிற சத்தம் கேட்டது.

இத்தனை நேரத்திற்கு மேல் எங்கே போகிறான் அவன்...?

ஒரு ஆழமான பெருமூச்சோடு தன் அறைக்குப் போனாள் அவள்.

## 7

ஜன்னல் ஓரத்தில் நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் நித்யா. தோட்டத்து இருட்டை வெற்றுப் பார்வையாய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஹால் கடிகாரம் ஒன்றடிப்பது கேட்டது. இன்னும் ராம்குமார் வரவில்லை என்று நினைத்தபோது கஷ்டமாக இருந்தது. தான் அப்படி நடந்து கொண்டிருக்கக் கூடாதோ என்று தோன்றிற்று. ஆனால் வேறு எப்படியும் நடந்து கொண்டிருக்க முடியாது என்றும் பட்டது. ஆர்வமாய்த் தன் முகத்தை நெருங்கின அந்த முகமும் பார்வையும் மனத்துக்குள் வந்து போயின. அதை ஏமாற்றினது தவறுதானோ? அதில் அவன் அடிபட்டுப் போயிருப்பானோ? அந்த மனம் புண்பட்டுப் போயிருக்குமோ?

ஸாரி ராம். வெரி ஸாரி. நீங்கள் எனக்காக என்னை விரும்புகிறவரை என் மீது உங்கள் அடிமனசில் ஏற்படுகிற சந்தேகங்கள் மறைகிற வரை அந்த நிமிஷ

தேவைக்காக இல்லாமல் எப்போதுமே நான் வேண்டும் என்று நீங்கள் உணர்கிற வரை என்னால் இதற்கு சம் மதிக்க முடியாது ராம். அப்படியே நீங்கள் உணர்ந்தாலும் நான்...நான் ஐயம் யுவர் பிரதர்ஸ் விடோ...என்னை நீங்கள் நினைப்பதோ மறுபடியும் கல்யாணம் பண்ணிக் கொள்வதோ எப்படி முடியும் ராம்? அம்மா இதை அனுமதிப்பார்களா ராம்? அம்மா இருக்கட்டும். நீங்களே கூட அப்படி நினைக்கி றீர்களா அல்லது உங்கள் மனசில் விழுந்து போயிருக்கிற என்னைப் பற்றின அபிப்பிராயத்தின்படி அந்த நேர வேகத்திற்குதான் இவள் என்று...

நோ ராம். நீங்கள் நினைக்கிற மாதிரியெல்லாம் என்னால் நடந்து கொண்டிருக்கவே முடியாது. எப்படித் தெரியும் என்று கேட்காதீர்கள். எத்தனையோ விஷயங்கள் நமக்கு அந்த மாதிரி தெரிவதுண்டு ராம். அடி மனசுக்கு மட்டும் பிடிபடுவதுண்டு. அப்படி என் அடி மனசிலிருந்து பிடிப்பட்டதுதான் இதுவும். எப்போது நீங்கள் இதை நம்பப் போகிறீர்கள். எப்படி உங்களை நம்ப வைக்கப் போகிறேன்?

நான் யார் என்பது மட்டும் தெரிந்தால் போதும். என்னால் இதைக் கண்டிப்பாக நம்ப வைக்க முடியும். ஆனால் அதை எப்படிக் கண்டு பிடிக்கப் போகிறேன். யார் எனக்கு இதில் உதவி செய்யப் போகிறார்கள்? என்னைத் தெரிந்த வர்களாக, நான் யார் என்பதைச் சொல்லக் கூடியவர் களாக யார் இருக்கிறார்கள்?

யோசிக்க யோசிக்க அவளுக்கு ஒன்றும் புரி யாமற் போயிற்று. தலையை வலிக்கிற மாதிரி இருந்தது. சிறிது நேரம் எல்லாவற்றையும் மறந்து தூங்கினால் தேவலை என்று தோன்றியது.

ஆனால் தூக்கம் வரவில்லை. தூங்குகிற சக்தியே தன்னிடமிருந்து போய் விட்டதோ என்கிற பயமும் வந்தது. அந்த பயத்தில் அறைக்குள் உட்காரப் பிடிக்காமல் எழுந்து கதவைத் திறந்து கொண்டு வராந்தாவிற்கு வந்த போது ராம்குமாரின் கார் உள்ளே வந்தது. போர்ட்டி கோவில் நிறுத்திப் பூட்டிவிட்டுப் படியேறினபோது அவளைப் பார்த்தான் அவன். நடை சட்டென்று நின்றது. பார்வை தழைத்தது. மெதுவாக அருகில் வந்து குரல் கரகரக்கப் பேசினான்.

"ஐயம் ஸாரி நித்யா. வெரி ஸாரி. இட் வில் நெவர் ஹேப்பன் அகெய்ன்."

பார்வையை உயர்த்தாமல் சொல்லிவிட்டுச் சட்

சென்று போய் விட்டான். அவன் வந்தது. பேசினது, விருட்டென்று போனது...

நோ ராம். உங்களிடமிருந்து இந்தப் பேச்சை நான் எதிர் பார்க்கவில்லை ராம். நான் எதிர் பார்த்ததே வேறு ராம். நீங்கள் நினைத்ததில், நடந்து கொண்டதில் எந்தத் தப்பும் இல்லை...

உதட்டைக் கடித்துக் கொண்டாள் அவள். அப்போதே அவனைப் பார்த்து ஒரு வார்த்தையாவது சொல்ல வேண்டுமென்று மனம் பரபரத்தது. மெதுவாக அவனுடைய அறைக் கதவைத் தட்டினாள். கதவிடுக்கின் வழியாக உள்ளே விளக்கு எரிவது தெரிந்தது. அரை விநாடிக்கெல்லாம் கதவு திறக்கப்பட்டது. அந்த நேரத்தில் அவளை அங்கு எதிர்பார்க்காத அவன் பார்வை ஆச்சரியமாயிற்று. குரல் தழைய, "என்ன நித்யா...?" என்று கேட்டான்.

"நான் உள்ளே வரலாமா...?"—அவள் கெஞ்சுகிற மாதிரி அவனைப் பார்த்தாள். அந்தப் பார்வை அவனை என்னவோ பண்ணியது. சட்டென்று நகர்ந்து வழிவிட்டான். அவள் உள்ளே வந்து உட்கார்ந்து கொண்டாள். எதிரில் தன் கட்டிலில் உட்கார்ந்து தலையணையின் அடியிலிருந்து சிகரெட் பாக்கெட்டை எடுத்தான். உதட்டில் ஒன்றைப் பொருத்திப் பற்ற வைப்பதற்கு முன்னால் அவளைப் பார்த்தான்.

"நான் சிகரெட் பிடிக்கலாமா நித்யா, உனக்கு அதில் ஆட்சேபணை ஒன்றும் இல்லையே...?" என்று கேட்டான்.

"இல்லை... ஆனால், எனக்கு இந்த சிகரெட் வாசனை பிடிக்காது. தலை வலிக்கிற மாதிரி இருக்கும். ஏற்கெனவே ஒரே தலைவலி..."

"அப்படியானால் நான் பிடிக்கவில்லை," என்று சிகரெட்டைப் பாக்கெட்டிற்குள் செருகினவன் சட்டென்று அவளை நிமிர்ந்து பார்த்தான்.

"என்ன சொன்னாய் நித்யா...?" என்று கேட்டான்.

"ஏன், தப்பாக ஒன்றும் சொல்லவில்லையே?" என்றாள்.

"தப்பு என்பதற்காகக் கேட்கவில்லை. என்ன சொன்னாய் சொல்லேன்..."

"சிகரெட் வாசனை எனக்குப் பிடிக்காது. தலையை வலிக்கிற மாதிரி இருக்கும் என்று சொன்னேன்..."

அதைக் கேட்டு அவன் அவள் கண்களுக்குள் ஆழமாகப் பார்த்தான். அதில் பொய் தெரியவில்லை. ஏமாற்றுகிற மாதிரி தோன்றவில்லை. அதனால் சற்று குழம்பிப் போனான். அவன் மௌனமாய் இருக்கவே அவளே பேச்சை ஆரம்பித்தாள்.

''எதற்காகக் கேட்டீர்கள் ராம்...?''

''எனக்கு ஒன்றும் புரியவில்லை நித்யா. நீ சிகரெட் வாசனை பிடிக்காது என்கிறாய். ஆனால் கணேஷ் நீ நிறைய சிகரெட் பிடிப்பதாய் எழுதி இருந்தான். எதை நம்புவது என்றே தெரியவில்லை...''

அதைக் கேட்டு அவள் மௌனமாக இருந்தாள். அதன் பின் சிறிது நேரம் எதுவும் பேசவில்லை. பின் அறைக்குள் நிலவின அமைதியை கலைக்கிற மாதிரி மீண்டும் பேசத் துவங்கினாள்.

''அது இருக்கட்டும் ராம். உங்களுக்கு சிகரெட் பிடிக்கிற பழக்கம் உண்டா..?''

''எப்போதாவது. மனசு சரியில்லாதபோது.''

''இப்போது சரியில்லாமல் போனதற்கு நான் தானே காரணம்?''

''இல்லை நித்யா. நீயே முழுக் காரணமில்லை. நானும் காரணம்தான். தவறு என் மீதும் இருக்கிறது.''

''தவறா? இதைத் தவறு என்று நினைக்கிறீர்கள்?''

''இன் எவே.. தவறுதானே நித்யா...?''

''என்ன தவறு ராம்...?''

''உனக்குப் பிடிக்காமல் உன் அனுமதி இல்லாமல் உன்னைத் தொட்டது தவறுதானே?''

''ஓ...அதுதான் தவறு என்று நினைக்கிறீர்கள். வேறு எதனாலும் தவறு என்று நினைக்கவில்லை...?''

அதற்குப் பதில் சொல்வதற்கு முன் அவன் நிறைய யோசித்தான். இதற்கு எந்தப் பதிலைச் சொன்னாலும் சரியாக இருக்கும் என்று பார்த்தான். முதலில் எது தன் மனத்துக்குச் சரி என்று படுகிறது..? நித்யாவின் மீது எனக்கு ஏற்பட்டிருக்கிற உணர்ச்சிக்கு என்ன பெயர். இஸ் இட் லவ்? ஆர் வெறும் லஸ்ட்? சாதாரணக் கவர்ச்சி? அவள் உடம்பு தனக்குக் கிடைக்கிற பட்சத்தில் ஒரு நாள் ராத்திரியில் அடங்கி விடக் கூடியது. இல்லை...நிச்சயமாய் இது கவர்ச்சி இல்லை. வெறும் உடம்பின் மீது ஏற்பட்ட மோகம் இல்லை ஐ லவ் ஹெர். ஐ நீட் ஹெர்.. எப்போதும் எனக்காக என்னுடையவளாக...

இருப்பாயா நித்யா...என்னை ஏற்றுக் கொள்வாயா? நான் நினைக்கிற அதே மாதிரி நீயும் நினைக்கிறாயா? உன் மனத்தில் என்ன இருக்கிறது? டு யு லவ் மீ ஆஸ் ஐ லவ் யு...? சொல்லு நித்யா...ப்ளீஸ் சொல்லு. உன்னைப் பார்த்ததிலிருந்து என் மனசுக்குள் பற்றி எரிகிற இந்த நெருப்பை அணையேன் நித்யா. அல்லது நானே இதில் எரிந்து போய் விடுவேன் போலிருக்கிறதே—

''என்ன ராம், பதிலே இல்லை..?''

''என்ன நித்யா...?''

''வேறு எந்தக் காரணத்திலும் தப்பு என்று நினைக்கவில்லையா ராம்..?''

''நீ எதைச் சொல்கிறாய் என்று எனக்குப் புரிகிறது. ஆனால் இப்படியெல்லாம் கேட்டால் எனக்கு பதில் சொல்லத் தெரியவில்லை நித்யா. எப்படிச் சொல்வது என்றும் புரியவில்லை. எது நிஜம் என்பதும் தெரியவில்லை. நான் மிகவும் குழம்பிப் போயிருக்கிறேன் நித்யா. இப்போது என்னை எதுவும் கேட்காதேயேன். ப்ளீஸ்..''

அதைக் கேட்டு அவள் அரை விநாடி யோசித்தாள். பின், ''சரி ராம். நான் எதுவும் கேட்கவில்லை,'' என்று எழுந்து கொண்டாள். சட்டென்று நினைவுக்கு வந்தவளாக, ''காம்போஸ் டயாசிபாம் ஏதாவது இருந்தால் கொடுங்களேன். தூக்கமே வரமாட்டேன் என்கிறது...'' என்றாள்.

அவன் எழுந்து போய் ஒரு ட்ரினிகாம் மாத்திரையைக் கொண்டு வந்தான்.

''இதைச் சாப்பிடு நித்யா. நல்ல தூக்கம் வரும்,'' என்றான்.

போகத் திரும்பினவளை, ''ஒரு நிமிஷம்,'' என்று நிறுத்தினான். ''அடிக்கடி நீ காம்போஸ் மாத்திரைகள் சாப்பிடுவதுண்டா நித்யா...?'' என்று கேட்டான்.

''இல்லை, ஏன் கேட்கிறீர்கள்...''

''நீ நர்ஸிங் ஹோமில் இருந்தபோது கூட உனக்கு நான் காம்போஸ் மாத்திரை தரவில்லை. இன்ஜெக்ஷன் தான் போட்டேன். இப்போது உனக்கு எப்படி காம்போஸ் ஞாபகம் வந்தது...?''

அவள் யோசித்துக் கொண்டே, ''தெரியவில்லை ராம்...'' என்று அவனைப் பார்த்தாள். அந்தப் பார்வை குழந்தையின் பார்வையாகக் கிடந்தது.

''சரி நித்யா. இதை வேறு மனசில் வைத்துக்

கொண்டு இன்னமும் அதிகமாகக் கவலைப்பட ஆரம்பிக்காதே. லீவ் திங்க்ஸ் இன் தேர் ஓன் வே... பார்க்கப் போனால் இவை எல்லாவற்றிற்கும் ஒருநாள் வழி கிடைக்காமல் போகாது....''

எப்போது வரும் அந்த ஒருநாள் என்று நினைத்துக் கொண்டே அறையைவிட்டு வெளியில் வந்தபோது மாடிப் படியிலிருந்து பிரகாஷ் இறங்கி வருவதைப் பார்த்தாள்.

சட்டென்று மனதை ஒரு பயம் கவ்வ மேலே நடக்க முடியாமல் நின்றாள். அவள் 'நடு ராத்திரிக்கு மேல் ராம்குமாரின் அறையிலிருந்து வருவதைப் பார்த்ததும் இவன் என்ன நினைத்துக் கொள்வானோ' என்று அந்த முகத்தை நிமிர்ந்து பார்த்தபோது—

அது அந்தப் புன்சிரிப்பாகச் சிரித்துக்கொண்டிருந்தது.

''என்ன நித்யா...தூக்கம் வரவில்லையா...?'' என்று சாதாரணமாகக் கேட்டது.

''இல்லை. அதனால்தான் டாக்டரிடமிருந்து மாத்திரை வாங்கிக் கொண்டு போகிறேன்.''

''என்ன மாத்திரை...?''

''ட்ரினிகாம்.''

''எதற்கு நித்யா இதெல்லாம்? ஒருதடவை பழக்கம் பண்ணினால் இதுவும் லிக்கர் சிகரெட் மாதிரி பிடித்துக் கொள்ளும். அப்புறம் மாத்திரைகளின் உதவி இல்லாமல் தூங்க முடியாமற் போகும். பேசாமல் படுத்துக் கண்ணை மூடிக் கொண்டு மனதை துடைத்து வைத்துக் கொண்டு ஒன்று, ரெண்டு, மூணு என்று எண்ணிக் கொண்டே போனால் ஐம்பது வருவதற்குள் கண் தானாக இழுக்கும். பாருங்கள்...''

மெல்லிசாகச் சிரித்தாள் அவள்.

''என்ன சிரிக்கிறீர்கள்...?''

''இல்லை. படிப்பது டாக்டருக்கு. சொல்கிற வைத்தியமோ அதற்கு எதிர் பதம் இது. என்ன முரண்பாடு என்று...''

''இதற்குப் பெயர் முரண்பாடில்லை. அக்கறை.''

''அக்கறையா?''

''ம்...ஒரு தரம் உங்களைப் பார்த்தபின் யாருக்காவது உங்கள் மீது அக்கறைப் படாமல் இருக்க முடியுமா?''

''என்ன சொல்கிறீர்கள்...?''

''ஒன்றுமில்லை. போய்ப் படுத்துக் கொள்ளுங்கள். மணி மூன்றடிக்கப் போகிறது. குட் நைட்.''

அவளுடைய குட்நைட்டிற்குக் கூடக் காத்திராமல் வேகமாகப் படியேறிப் போய் விட்டான் அவன்.

'இது என்ன புதுப் பிரசினை'! என்று நினைத்துக் கொண்டே அறைக்கு வந்து மாத்திரை போட்டுக் கொண்டு படுத்த அரை மணிக்கெல்லாம் கண் செருக எங்கோ மிதக்கிற உணர்வில் தூங்கிப் போனாள் அவள்.

காலையில் கண் விழித்தபோது மணி எட்டிற்கு மேல் ஆகியிருந்தது. 'இவ்வளவு நேரமா தூங்கியிருக்கிறோம்!' என்ற நினைப்பில் பரபரவென்று பல் தேய்த்து முகத்தை மட்டும் அலம்பிக் கொண்டு வந்தாள். சோப்பு கூட இல்லாமல் வெறும் தண்ணீரிலேயே அந்த முகம் பளிச்சிட்டது. புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டு வெளியில் வந்தாள்.

ஹாலுக்கு வந்தபோது ராம்குமார் டெலிபோனில் பேசிக் கொண்டிருந்தான்.

''உடனடியாக பெரால்டெதைட் இன்ஜெக்ஷன் கொடு ஷீலா. வேறு எதுவும் வேண்டாம். ஒன்றும் பயமில்லைன்னு சொல்லு. அப்படியே அந்த மூன்றும் நம்பரும் பேஷண்ட்டிற்கு வெறும் பரால்கான் கொடுத்தால் போதும். ஓ. கே... வேறு எதுவும் இல்லை. நான் பனிரெண்டு மணிக்குமேல்தான் வருவேன். எஸ்... எதாவது அவசரமானால் டாக்டர் ஸ்ரீகாந்தைக் கவனிக்கச் சொல். ஓ..கே.?''

அவன் ரிஸீவரை வைத்து விட்டுத் திரும்பினதும் நித்யா சட்டென்று கேட்டாள்.

''பெரால்டெதைட் இன்ஜெக்ஷனா.. யாருக்காவது ஃபிட்ஸ் வந்து விட்டதா ராம்...?''

''என்ன!'' என்று அவன் அவளை ஆச்சரியமாகப் பார்த்தான்.

''இது ஃபிட்ஸுக்குக் கொடுக்கிற இன்ஜெக்ஷன் என்று உனக்கு எப்படித் தெரியும் நித்யா?''

அவள் அரைவினாடி யோசித்து பின் சொன்னாள்.

''தெரியலை. இந்த மருந்துகள், இன்ஜெக்ஷன்கள் ஆஸ்பத்திரி, அதன் வாசனை இதனுடனெல்லாம் ஏதோ ஒரு பரிச்சயம் இருக்கிற மாதிரி தோன்றுகிறது. எந்த மருந்தின் பெயரைக் கேட்டாலும் வியாதி புரிந்து போகிறது. இது எப்படி என்பது புரியவில்லை.''

"இலிட்....!" என்று அவனும் யோசித்தான் "உனக்கு எப்படி ஆஸ்பத்திரியுடனும், மருந்துகளுடனும் சம்பந்தம் இருந்திருக்க முடியும். கணேஷ் கூட இல்லையே. அவன் ஒரு லாயர்தானே..."

"லாயரா... அவரா...?" என்று அவள் நெற்றி சின்னச் சுருங்கலாய் சுருங்கியது. "நோ. ஐ ஹேவ் நாட் ஸீன் எனிபடி ஹேவிங் எ கப்போர்ட் ஃபுல் ஆஃப் லா புக்ஸ். அந்த மாதிரி பெரிய பெரிய புஸ்தகங்களையோ கட்சிக்காரர்களின் வரிசையையோ பார்த்த ஞாபகம் கூட இல்லை..."

"நீ பார்த்திருக்காததில் எந்த அதிசயமும் இல்லை. பெயருக்குத்தான் அவன் லாயர். ஒருநாள் கூடக் கோர்ட்டுக்குப் போனதில்லை. ஒரு கட்சிக்காரர் கூட வந்ததில்லை. படித்த படிப்பிற்கு சம்பந்தமில்லாமல் ஏதோ பிஸினஸ் பண்ணிக் கொண்டிருப்பதாகத்தான் எழுதி இருந்தான்..."

"பி ஸி னெ ஸா? எ ங் கே? எந்த ஊரில்?"

"கோவா பக்கமா...நான் கூட அந்த ஊரைச் சேர்ந்தவளா?"

"தெரியவில்லை. உன்னைப்பார்த்தால் இந்த நிறத்தையும் அழகையும் பார்த்தால் அப்படித்தான் தெரிகிறது. ஆனால் நீ பேசுகிற தமிழைப் பார்த்தால் சந்தேகம் வருகிறது."

"கோவா என்று சொல்கிறீர்கள். எங்கோ லண்டனோ அமெரிக்காவோ இல்லை. அப்படி இருந்துமா ஒரு தடவைகூட நீங்கள் அவரைப் பார்க்கப் போகவில்லை? அங்கே என்னைப் பார்க்கவில்லை?"

"போனேன். இரண்டு தடவை அம்மாவிற்குத் தெரியாமல் போயிருந்தேன். வீடு பூட்டியிருந்தது. பக்கத்தில் விசாரித்தபோது அந்த அட்ரஸில் யாரோ பாய் என்பவர் இருப்பதாகச் சொன்னார்கள். அவர் கொங்கிணிக்காரர் என்றார்கள். அந்த விலாசம்தான் கணேஷ் எனக்குக் கொடுத்தது. அந்த பாய் வந்தால் விசாரிக்கலாம் என்று நானும் நான்கு நாட்கள் தங்கினேன். அவர் வரவே இல்லை. அதற்கு மேல் தங்க முடியாமல் திரும்பி விட்டேன். அடுத்த தரம் போனபோது 'நான் வருகிறேன் நீ வீட்டிலேயே இரு' என்று கணேஷிற்குத் தந்தி கொடுத்து விட்டுப் போனேன். அப்போதும் அதே பூட்டின வீடுதான் வரவேற்றது."

அந்தப் பாய் என்ற பெயர் தன் நினைவில் எங்காவது தட்டுகிறதா என்று தேடிப் பார்த்தாள் அவள்.

அது ஒரு சாதாரணப் பெயர் என்பதைத் தவிர வேறு எதுவும் நினைவுக்கு வரவில்லை.

"அப்படியானால் ஒரு தரம் அங்கு போய்ப் பார்க்கலாமா? நீங்களும் வருவீர்களா?" என்று கேட்டாள்.

"இல்லை நித்யா. அங்கு போவதால் இப்போது எந்த உபயோகமும் இல்லை. அதன் பின் கணேஷ் அந்த விலாசத்திலிருந்து எனக்குக் கடிதம் எழுதவில்லை. ஒரு தடவை பம்பாயிலிருந்து, அடுத்த தரம் கூர்கிலிருந்து, அதற்கப்புறம் சிம்லா பக்கம் ஏதோ ஒரு இடத்திலிருந்து. ஏன் இப்படி அலைகிறாய் என்று கேட்டு எழுதினால் எல்லாம் நித்யாவால்தான். அவளை வைத்துக் கொண்டு ஒரு இடத்தில் நிரந்தரமாக என்னால் இருக்க முடியாது. மானமாக வாழ முடியாது. கடன் காரர்களும் என்னை வாழ விடமாட்டார்கள் என்று எழுதிவிட்டான்."

அதைக் கேட்டதும் அவள் முகம் சிவந்து போயிற்று. உடம்பு ரத்தம் முழுவதும் தலைக்கு ஏறின மாதிரி சூடாயிற்று. அவனை நிமிர்ந்து பார்க்கிற சக்தி இல்லாமல் உதட்டை இறுகக் கடித்துக் கொண்டு நின்றாள். சட்டென்று அவளிடம் ஏற்பட்ட அந்த மாறுதலை கவனித்தான் அவன். அந்தச் சிவந்துபோன முகத்தை—தன்னைப் பார்க்க முடியாமல் குனிந்த பார்வையை உதட்டைக் கடித்துக் கொண்ட வேகத்தை...மெதுவாக, "ஐயம் ஸாரி நித்யா, நானாக இந்தப் பேச்சை ஆரம்பிக்கவில்லை," என்றான்.

அவள் அதற்கு பதில் சொல்லாமல் நிற்கவே,

"லெட் அஸ் லீவ் திஸ் மேட்டர். கிளம்பு நித்யா. கொஞ்சம் வெளியில் போய்விட்டு வரலாம்" என்றான்.

"வெளியிலா...எங்கே...?"

"மௌவுண்ட் ரோடிற்கு. அம்மா உன்னைப் புடவைக் கடைக்கு அழைத்துக் கொண்டு போகச் சொன்னாள்."

"புடவைக் கடைக்கா. அப்படியானால் நேற்று நான் சொன்னது ஞாபகமிருக்கிறதா?"

"எது. புடவைகளுக்காக செலவழிக்கிற பணத்தை திருப்பி வாங்கிக் கொள்ள வேண்டும் என்பதுதானே. ஓ.கே. வாங்கிக் கொண்டால் போயிற்று. உன் சம்பளப் பணத்தில் கொஞ்சம் கொஞ்சமாகப் பிடித்துக் கொண்டால் ஆயிற்று."

''சம்பளப் பணமா!''

''ஆமாம் நித்யா. அம்மா உன் வேலைக்காக அந்த சிடுமூஞ்சி டாக்டர் ராம்குமாரிடம் சொல்லவில்லை? அவர் உனக்குத் தன் நர்ஸிங்ஹோமில் வேலை போட்டுத் தருவதாக ஒப்புக் கொண்டிருக்கிறாராம். ஸோ அவரிடம் சொல்லிச் சம்பளத்தில் பிடித்துக் கொள்ளச் சொல்கிறேன். ஓ. கே.?''

''ராம். நிஜமாகவா...உங்கள் நர்ஸிங் ஹோமிலா வேலை போட்டுத் தரப் போகிறீர்கள்?''

''என் நர்ஸிங்ஹோமா? நோ...நோ. ஐயம் அன் யங், இண்டலிஜெண்ட் டாக்டர். உனக்கு அந்தச் சிடு மூஞ்சி வயசான டாக்டர்தான் வேலை போட்டுத் தரப் போகிறார். ஸோ பீ ப்ரிபேர்ட். சீக்கிரம் கிளம்பு. முதல் நாளை தாமதமாகப் போனால் அந்தக் கிழம் சள்ளென்று விழும்.''

''அப்படியா அந்தக் கிழமே இன்னும் கிளம்ப வில்லையே...'' என்று சொல்லிவிட்டு சிரித்துக் கொண்டே உள்ளே போனாள் அவள்.

மாடிக்குப் போய் சாரதாவிடம் சொல்லிக் கொண்டாள்.

''நித்யா ராம் உன்னைத் தன் நர்ஸிங்ஹோமிற் கும் அழைத்துக் கொண்டு போவதாகச் சொல்லியிருக்கிறான். கொஞ்சம் ட்ரெய்னிங் கொடுத்துத் தனக்கு உதவியாக வைத்துக் கொள்கிறேன் என்றான். அதனால் இனிமேல் நீ பொழுது போகாமல் கஷ்டபபட வேண்டாம். இந்தப் பெரிய வீட்டைத் தனியாகச் சுற்றி வரவேண்டாம். எதையாவது நினைத்து நினைத்து மனசை சிரமப்படுத்திக் கொள்ள வேண் டாம்,'' என்றாள் சாரதா.

அதைக் கேட்டதும் அவளுக்குச் சட்டென்று கண் கலங்கிப் போயிற்று. எதுவும் சொல்ல வராமல் குரல் தடுமாறியது.

''அம்...மா...!'' என்று சாரதாவின் கையைப் பற்றிக் கொண்டாள். அந்தக் கை மெதுவாக நடுங்கு வதைக் கவனித்த சாரதா அவளை இன்னும் மென்மை யாகப் பார்த்தாள்.

''கிளம்பும்மா. ஏற்கனவே ராமிற்கு இன்று நேரமாகிவிட்டது பார்.''

குளித்து லேசாகத் தலையை மட்டும் வாரிக் கொண்டு அதே புடவையுடன் அவள் வந்தபோது ராம்

குமார் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றான்.

''என்ன ராம்?''

''ஏன் நித்யா பொட்டு வைத்துக் கொள்ள வில்லை...?''

''வேண்டாம் ராம்.'' சொல்கிறபோதே அந்தக் குரல் நடுங்கியது. அந்த நடுக்கத்தையும் அவளையும் கவனித்தான் அவன். நேற்று 'நான் பொட்டு வைத்துக் கொள்ளலாமா?' என்று கெஞ்சுகிற பார்வையில் கேட்ட அதே நித்யாவா இவள்? என்ன ஆயிற்று இவளுக்கு? ஏன் இப்படி முரண்பாடாகப் பேசுகிறாள்?'

''டோண்ட் பி ஸில்லி நித்யா. நேற்று நீயே பொட்டு மட்டும் வைத்துக் கொள்கிறேன் என்று கேட்டு விட்டு இப்போது இப்படிச் சொல்கிறாயே? என்ன ஆயிற்று உனக்கு. போ போய் பொட்டு வைத்துக் கொண்டு வா.''

அவள் போகாமல் தயங்கி நிற்கவே அவன் அழுத்தமான குரலில் சொன்னான்.

''நித்யா, இதெல்லாம் உன்னுடைய அடிப்படை உரிமைகள். அந்த உரிமைகளை யாருக்காகவும் நீ விட்டுக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. மனசுக்கு சரி என்று படுவதைச் செய்யத் தயங்க வேண்டியதில்லை. யாருக்காகவும் பயப்பட வேண்டியதில்லை. புரிகிறதா நித்யா. போ. போய்ப் பொட்டு வைத்துக் கொண்டு வா.''

அவள் உள்ளே போய் வெளியில் வந்தபோது புருவங்களுக்கிடையில் சிவப்பு நிறத்தில் சின்ன வட்டமாய் பளிச்சிட்டது. முகம் முழுதும் பிரகாசமாய் பிறையில் அகல் விளக்கை ஏற்றின மாதிரி.. அவளைப் பார்த்துக் கொண்டு அப்படியே நின்றான் ராம்குமார்.

'என்ன முகம் இவளுக்கு,' என்று நினைத்துக் கொண்டான். பளபளவென்று என்ன நிறம். இந்த மண்ணின் நிறமா இது? கோதுமையின் செழுமையாய் இத்தனை மினுமினுப்பா. அப்படியானால் எப்படி இவ்வளவு சுத்தமாகத் தமிழ் பேசுகிறாள்? கணேஷின் மனைவி இல்லை என்றால் யார் இவள்? எப்படி இங்கு வந்தாள்? கணேஷின் மனைவிதான் என்றால் கணேஷ், நீ எழுதினதெல்லாம் இவளா...இவளையா? நம்ப முடியவில்லையே... நம்பாமல் இருக்கவும் வழி இல்லையே...

ஓர் ஆழமான பெருமூச்சோடு காரைக் கிளப்பின போது மனம் கனத்துக் கிடந்தது. அவளின் எதிர்காலத்தைப் பற்றி நினைத்தபோது ஒன்றும் புரியாமல் மருட்டிற்று.

இத்தனை அழகும், இளமையும் அப்படியே வீணாகப் போய் விட வேண்டியதுதானா என்று கஷ்டப்பட்டது.

'நோ. அதை அனுமதிக்கக் கூடாது. இவள் யாராக இருந்தாலும் இவளுக்கு வாழ்கிற உரிமையும் தகுதியும் இருக்கிற போது அதை மறுப்பது நியாயம் இல்லை.' அந்த இரவில் அவளை அணைத்த அந்த ஒரு நிமிடத்தில் தன் உடம்பில் பதிந்த அந்த மென்மையும் இதமும் இனிமையும்...

உன்னை இனிமேல் என்னால் மறக்கவே முடியாது போலிருக்கிறதே...என்னை எத்தனை பலவீனமானவனாக ஆக்கிவிட்டாய் நித்யா...

ஓர் ஆழமான பெருமூச்சோடு மவுண்ட்ரோடின் பெரிய புடவைக் கடையின் முன் காரை நிறுத்தி, "வா நித்யா," என்று கீழே இறங்கினான் அவன்.

## 8

ரோஜா நிறத்தில் வெளிர் நீலத்தில் வெளிர் மஞ்சளில் மூன்று வங்காளக் கைத்தறிப் புடவைகளும் ஒரே ஒரு வெள்ளை ஆர்கண்டியும் மட்டும் எடுத்துக் கொண்டாள் நித்யா.

"என்ன நித்யா இது?" என்று அவளைப் பார்த்தான் ராம்குமார்.

"நல்ல விலையில் பத்துப் பன்னிரண்டு புடவைகளாவது எடுத்துக் கொடு என்று அம்மா சொல்லியனுப்பினாள். இங்கே வந்தால் நீ வெறும் கைத்தறிப் புடவையாக எடுத்துக் கொண்டிருக்கிறாயே.."

"இவை மட்டும் நல்ல புடவைகள் இல்லையா ராம்...?"

"அதற்குச் சொல்லவில்லை நித்யா. கடையில் இத்தனை புடவைகள் இருக்கிறபோது நீ ஏன் வெறும் வெளிர் வர்ணமாய் நூல் புடவைகளாக எடுத்துக் கொண்டிருக்கிறாய்?"

"பளிச்சென்று அடிக்கிற நிறங்கள் எனக்கு எப்போதுமே பிடிக்காது. அதுவுமில்லாமல் நான் கைத்தறிப்

புடவைகள்தான் கட்டுகிற வழக்கம்.''

''வழக்கமா...?'' என்று அவளைச் சட்டென்று நிமிர்ந்து பார்த்தான் அவன், அடிக்கடி அவள் இந்த மாதிரி பேசுவதை நினைத்துக் கொண்டான். பளிச்சென்று வெட்டுகிற மின்னலாக இந்த மாதிரி எப்போதாவது வருகிற சில ஞாபகங்கள்...இவளை ஒரு நல்ல மனோதத்துவ டாக்டரிடமோ அல்லது மூளை சம்பந்தப்பட்ட டாக்டரிடமோ அழைத்துப் போனால் என்ன என்று தோன்றியது. அன்று மாலை டாக்டர் விஜயகுமாருக்கும் டாக்டர் கல்யாணசுந்தரத்திற்கும் போன் பண்ணி அப்பாய்ண்ட்மெண்ட் வாங்கிக் கொள்ள வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

நர்ஸிங் ஹோமிற்குப் போனதும் ஒவ்வொருவராக வந்து நித்யாவை வரவேற்றார்கள். டாக்டர் ஸ்ரீகாந்த், டாக்டர் தாமஸ், டாக்டர் மதனகோபால், டாக்டர் சித்ரா, ஷீலா, ஸிஸ்டர் ப்ரேமா, உஷா...

''ஹெள ஆர் யு மிஸஸ் கணேஷ்குமார்?''

''ஆர் யு ஆல்ரைட் மிஸஸ் கணேஷ்...?''

''உடம்பு தேவலையா மிஸஸ் கணேஷ்...?''

மிஸஸ் கணேஷ் மிஸஸ் கணேஷ்...எதை அவள் மறக்க நினைக்கிறாளோ, எது இல்லை என்று தனக்குள் ஊர்ஜிதப் படுத்திக் கொள்ளப் பார்க்கிறாளோ அதையே எல்லாரும் நினைவு படுத்தினார்கள். அதுதான் நிஜம். அதுதான் சத்தியம் என்கிற மாதிரி. அதிலிருந்து இனியேல் அவளால் மீள முடியாது. வெளியில் வரமுடியாது.

மிஸஸ் கணேஷ்குமார்.

அவள் நித்யா இல்லை.

வெறும் நித்யா இல்லை.

கணேஷ்குமாரின் மனைவி.

ராம்குமார் சட்டென்று தன் அறைக்குப் போனான். ஷீலாவைக் கூப்பிட்டு நித்யா அங்கு வேலை செய்யப் போவதைத் தெரிவித்தான். தனக்கு உதவியாக, தன்னுடைய காரியதரிசியாக...

''அவளை அழைத்துக் கொண்டு போய் நர்ஸிங் ஹோமைச் சுற்றிக் காட்டுகிறாயா ஷீலா...?'' என்றதும்—

''வித் ப்ளெஷர் டாக்டர்,'' என்று வெளியில் போனாள் அவள்.

வாட்டர் கூலரிலிருந்து ஒரு டம்ளர் தண்ணீர் பிடித்துக் குடித்துவிட்டு அன்றைய கடிதங்களைப் பார்க்க ஆரம்பித்தான். உடனடியாகப் பதில் எழுத வேண்டிய கடி

தங்களைத் தனியாகப் பிரித்து வைத்தான். காலை வார்ட் இன்ஸ்பெக்ஷனுக்குப் போக முடியாததால் இப்போது போக முடிவு செய்து எழுந்த போது அறைக் கதவு லேசாகத் தட்டப்பட்டது. இவன் பஸ்ஸரை அழுத்தினதும் கதவைத் தள்ளிக் கொண்டு நித்யா உள்ளே வந்தாள். ஏர்கண்டிஷண்ட் குளிர்ச்சி முகத்தைத் தாக்க அவன் எதிரில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

"உங்கள் நர்ஸிங் ஹோம் இவ்வளவு பெரிதாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை ராம்."

அவன் புன்சிரிப்பாய்ச் சிரித்து அந்த முகத்தைப் பார்த்தான்.

"உள்ளே எல்லா வசதிகளும் இருக்கிறது. லெபரட்டரி, எக்ஸ்ரே இன்ஸ்டிட்யூட், ஆம்புலென்ஸ்.."

"இது என்னுடைய அப்பாவின் கனவு நித்யா. அவர் கட்ட ஆரம்பித்தது இந்த நர்ஸிங்ஹோம். ஆனால் முடிகிறபோது அவர் இல்லை. இருந்திருந்தால் இதுதான் அவருடைய தாஜ்மகாலாக இருந்திருக்கும்."

"இப்போது உங்களுடைய தாஜ்மகாலாக இருக்கிறது இல்லையா?"

"எஸ். இது என் தாஜ்மகால்தான். ஆனால் மும்தாஜைத்தான் காணோம்."

சொல்லிவிட்டு அவள் கண்களையே பார்த்தான். பார்வையில் கூடச் சிரிப்பு தெரிந்தது. 'என்ன, நீ மும்தாஜாக இருக்கிறாயா?' என்கிற மாதிரி.

சட்டென்று தலையைக் குனிந்து கொண்டாள் அவள். அந்தப் பார்வையும் சிரிப்பும் மனத்தில் பதிந்து போயின. அதே மாதிரி தானும் சிரித்து எதாவது சொல்ல வேண்டும் போலிருந்தது. ஆனால் எதுவும் சொல்ல முடியவில்லை. பேசாமல் உட்கார்ந்திருந்தாள். அதற்கு மேல் அவளை சங்கடப்படுத்த இஷ்டப்படாமல் நாற்காலியை விட்டு எழுந்தான் அவன். "நான் வார்ட் இன்ஸ்பெக்ஷனுக்குப் போகிறேன். நீயும் வருகிறாயா நித்யா...?" என்று கேட்டான்.

"வார்ட் இன்ஸ்பெக்ஷனா? இந்த நேரத்திலா?"

"என்ன செய்வது, காலையில் உன்னுடன் கடைக்கு வந்ததில் தவறிப் போய் விட்டது. ஒரு நாளைக்கு இரண்டு தரமாவது நான் என் நோயாளிகளைப் பார்த்து விடுவேன். இப்போது பார்த்தால் மறுபடியும் சாயந்தரம் ஐந்து மணிக்கு ஒரு ரவுண்ட் வந்து விடலாம்."

"சரி, அப்படியானால் போகலாம்."

மாடியிலும், கீழுமாக மொத்தம் இருபது அறைகள். தனியாக மூன்று ஏ. ஸி. அறைகள். அதில் இரண்டு காலியாய்க் கிடந்தன. ஒன்றில் மட்டும் ஒரு பிரபல நடிகரின் மனைவி படுத்துக் கொண்டிருந்தாள். வெறும் டி அண்ட் ஸி. அவள் டாக்டர் சித்ராவின் நோயாளி. ஆனாலும் அவன் அவளையும் விசாரித்தான். பின் ஒவ்வொரு அறையாகப் போனான். அப்பெண்டிஸைடிஸ், அல்ஸர், பைல்ஸ் என்று ஆபரேஷன் ஆன நோயாளிகள். ஒரு அறையில் மட்டும் கால் உடைந்து போன ஒரு வயதான அம்மாவிற்கு டிராக்ஷன் போட்டுக் கட்டியிருந்தார்கள். அந்த அறையை விட்டு வந்ததும் நித்யா கேட்டாள்.

"ஏன் ராம். இங்கே ஆர்த்தோ பேஷண்டுட்களைக் கூட ட்ரீட் பண்ணுகிறீர்களா?"

"இல்லை. இதுதான் முதல் கேஸ். என் நண்பர் ஒருவரின் அம்மா. இந்த நர்ஸிங் ஹோமைத் தவிர வேறு எங்கும் போகமாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள். அதனால் வேறு வழி இல்லாமற் போய் விட்டது."

"உங்களிடம் ஆர்த்தோபெடிக் ஸர்ஜன் கூட இருக்கிறார்களா?"

"இல்லை. டாக்டர் கைலாசம்தான் இங்கு வந்து இந்த அம்மாவிற்கு டிராக்ஷன் போட்டார்."

அதன் பின் அவள் ஒன்றும் கேட்கவில்லை. அவனுகை அழைத்துப் போய் ஆபரேஷன் தியேட்டரைக் காட்டினான். லேபர் அறையைக் காட்டினான். ஒவ்வொன்றையும் பார்த்து அவள் வியந்து போனாள். மீண்டும் அறைக்கு வந்ததும்—

"எனக்கு இங்கேயே இருக்க வேண்டும் போலிருக்கிறது ராம். ஐ லவ் திஸ் நர்ஸிங் ஹோம்..." என்றாள்.

"நர்ஸிங்ஹோம் மட்டும்தானா?" என்று கேட்டு விட்டு புன்சிரிப்போடு அவளைப் பார்த்தான் அவன்.

"என்ன!" என்று சரேலென்று நிமிர்ந்தாள் அவள்.

"எங்களையெல்லாம் பிடிக்கவில்லையா? வெறும் நர்ஸிங் ஹோம் மட்டும்தான் பிடிக்கிறதா நித்யா...?"

கண்களில் பளிச்சிட்ட அந்த ஒளி சட்டென்று அடங்க நிதானமாகப் பேசினாள்.

"நர்ஸிங்ஹோம் என்றால் வெறும் சுவரும் கட்டிடமும் என்ற அர்த்தமில்லை ராம். அதன் உயிரோட்டமான மனிதர்களும்தான் என்று அர்த்தம்."

"மனிதர்களா அல்லது மனிதனா நித்யா?" அதற்கு

அவனிடமிருந்து பதில் வராமற் போகவே அவன் குரல் தழையச் சொன்னான்.

"விளையாட்டிற்குச் சொன்னேன் நித்யா. உன்னிடம் விளையாடக் கூடாதா நான்..."

அந்தக் கேள்வியில் அவள் உதட்டோரம் புன்னகையாய் விரிந்ததும்தான் அவனுக்குள் ஒரு அமைதி ஏற்பட்டது. வேலையில் மனசு போயிற்று. எல்லாவைக் கூப்பிட்டுக் கடிதங்களை டிக்டேட் பண்ணினான். பின் நித்யாவைப் பார்த்து—

"உனக்கு ஷார்ட்ஹாண்ட் தெரியுமா?" என்று கேட்டான்.

"தெரியும் என்று நினைக்கவில்லை."

"டைப்பிங்?"

"அதுவும் அப்படித்தான்."

"அப்படியானால் என்ன வேலை செய்யப் போகிறாய் நித்யா...?"

"தெரியவில்லை. இன்னது என்று என்னால் குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை. ஆனால் உங்களுக்கு நிறைய உதவ முடியும் என்று தோன்றுகிறது. முன்பு சொன்ன மாதிரி இதெல்லாம் எனக்குப் பழக்கப்பட்ட இடங்கள், விஷயங்கள் என்ற உணர்வு மட்டும் எனக்குள் அசைக்க முடியாததாக இருக்கிறது. ஏதோ ஒரு வகையில் நானும் ஆஸ்பத்திரியுடனும் நோயாளிகளுடனும் சம்பந்தப்பட்டவள் என்றே நினைக்கிறேன். எப்படி என்று கேட்டால் எனக்கு சொல்லத் தெரியவில்லை ராம்.."

"அது விமான விபத்தில் அடிபட்டதிலிருந்து நீ இங்கு இருந்ததால் இருக்கலாம். இந்த நர்ஸிங்ஹோம் உன் அடிமனசில் அவ்வளவு தூரம் இறங்கிப் போயிருக்கும். உன்னால் எந்த உதவியும் செய்ய முடியாமற் போனாலும் பரவாயில்லை நித்யா. இங்கு வருவது உன் மனசுக்குக் கொஞ்சம் தெம்பாக இருக்கும் என்றுதான் வரச் சொல்லிறனே தவிர எனக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்காக இல்லை..."

"நோ. நோ. பேசாமல் உட்கார்ந்திருப்பதற்கா நான் இங்கு வந்தேன்? ஏதாவது சொல்லுங்கள் ராம். செய்கிறேன்."

"ஓ. கே. ஆபரேட்டரிடம் கேட்டு சைக்கியாட்ரிஸ்ட் விஜயகுமாருக்கும் ந்யூரோ ஸர்ஜன் கல்யாண சுந்தரத்திற்கும் போன் பண்ணி இன்றைய சாயந்திரம் ஏழு மணிக்கு அப்பாய்ண்ட்மெண்ட் பிக்ஸ் பண்ணு பார்க்கலாம்."

அவன் இரண்டு அப்பாயிண்ட்மெண்ட்களையும் வாங்கினதும் அவன் மற்ற கடிதங்களை அவளிடம் கொடுத்தான். சின்னதாய் விவரங்களை மட்டும் குறித்துத் தரச் சொன்னான். பின் ஸயண்ட்டிஃபிக் இன்ஸ்ட்ருமெண்ட் கம்பெனிக்கு போன் பண்ணி சில சாமான்களை ஆர்டர் பண்ணச் சொன்னான்.

பகல் சாப்பாடு முடிந்து சின்னச் சின்ன வேலைகளையெல்லாம் கவனித்ததும் மாலை நான்கு மணிக்கு ஓ. பி. அவுட் பேஷண்ட்ஸ். அவர்களைக் கவனிக்க ஆரம்பித்தான்.

நித்யா அவன் எதிரில் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள். ஒரு ஜுர பேஷண்ட், ஒரு தொண்டை வலிக்காரி, சின்னக் குழந்தையின் வயிற்றுப் போக்கு, கால் வீக்கம், டயாபெடீஸ்காரருக்கு இன்சுலின், ஆஸ்துமா நோயாளி... கடைசியில் ஒரு முப்பது வயசுக்காரர் வயிற்றைப் பிடித்து முனகிக் கொண்டே உள்ளே வந்தார். பரிசோதித்தபோது இடது பக்க அடிவயிற்றில் கை வைத்ததும் அலறினார்.

அந்த அலறலைப் பார்த்து ராம்குமார் ஒரு விநாடி யோசித்ததும் நித்யா சட்டென்று எழுந்தாள்.

''வலி எங்கே இருக்கிறது? அடிவயிற்றிலா?'' என்று கேட்டாள்.

''இல்லை. இங்கே...'' என்று அவர் இடது பக்கக் கீழ் வயிற்றைக் காட்டினார்.

''நன்றாக யூரின் போகிறீர்களா?''

''இல்லை. போகும்போது அதிகம் வலிக்கிறது.''

''சாப்பாடு?''

''சாப்பிடவே முடியவில்லை. கொஞ்சம் உள்ளே போனதும் வலி ஆரம்பித்து விடுகிறது...''

''அப்படியா?'' என்று ராம்குமாரின் பக்கம் திரும்பினாள்.

''இவரை முதலில் ஒரு எக்ஸ்ரே எடுத்துக் கொண்டு வரச் சொல்லுங்கள். எக்ஸ்ரே ஈரமாக இருந்தாலும் பரவாயில்லை. இது ரீனல்கோலியாக இருக்குமென்று நினைக்கிறேன். யூரீட்டரில் கல் இருக்க வேண்டும். அதைச் சுற்றிச் சீழ் பிடித்திருக்க வேண்டும். அப்படியானால் ஓபன் பண்ணிப் பார்த்து விடலாமே...என்ன சொல்கிறீர்கள்?''

ராம்குமார் கண்ணகல அவளைப் பார்த்துக் கொண்டு நின்றான். ஒரு விநாடி பேச்சு எதுவும் வரவில்லை. பின் கேட்ட போது குரலில் கூட அதே ஆச்சரியம் தெரிந்தது.

"என்ன சொல்றாய் நித்யா! இதெல்லாம் எப்படித் தெரிந்தது உனக்கு. ஒரு டாக்டரால் மட்டுமே டயக்னோஸ் பண்ண முடிந்த விஷயத்தை நீ எப்படிப் பண்ணினாய்?"

அப்போதுதான் நித்யாவிற்குத் தான் பேசினது புரிந்தது. நடந்து கொண்டது தெரிந்தது.

எப்படிச் சொன்னேன் இதை...? ரீனல்கோலி எப்படிப் பெயர் தெரிந்தது?

அவன் அவசரமாக எக்ஸ்ரேக்கு எழுதிக் கொடுத்தனுப்பிவிட்டு அவளிடம் வந்தான். மனசில் ஏற்பட்ட பரவசத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் அவள் முகத்தை நிமிர்த்தினான்.

"ஹுக் நித்யா. கொஞ்சம் நிதானமாக யோசி. மேலும் மேலும் விடாமல் யோசித்துப் பார். எப்படித் தெரிந்தது உனக்கு இந்த வியாதியின் பெயர்? எப்படி டயக்னோஸ் பண்ணினாய்? ப்ளீஸ் நித்யா நிதானமாக யோசி, நித்யா..."

அவள் யோசித்தாள். ராம்குமார் அந்த மனிதரின் எக்ஸ்ரேயுடன் திரும்பி வந்து அதை விளக்கின் எதிரில் வைத்துப் பார்த்து யூரீட்டரில் பெரிதாய்க் கல் இருப்பதைக் கண்டு பிடித்து உடனடியாக ஆபரேஷன் பண்ண வேண்டிய தேவையில் அவரை ரத்தப் பரிசோதனையும், மற்ற பரிசோதனைகளும் செய்து கொண்டு வரும்படி அனுப்பி பஸ்ஸரை அழுத்தி ப்யூனை உள்ளே கூப்பிட்டு அவரை அட்மிட் பண்ணிக் கொள்ளச் சொன்னான்.

பின் நித்யாவைப் பார்த்தான். "கன்கிராட்ஸ் நித்யா," என்றான்.

"எதற்கு?"

"முதல் நாளே முதல் கண்டு பிடிப்பே சரியாக அமைந்திருக்கு."

"நான் ஜோஸியம் மாதிரி ஏதோ சொன்னேன். அது சரியாகப் போய் விட்டது என்றால் அதற்கு எதற்குப் பாராட்டு?"

அவன் பளிச்சென்று சிரித்தான்.. "இது ஜோஸியமுமில்லை. நீ ஜோஸியமும் சொல்லவில்லை. இனிமேலும் உன்னை இப்படியே விடக்கூடாது நித்யா. உன்னைப் பற்றின விவரங்களைக் கண்டு பிடித்தாக வேண்டும் கிளம்பு நித்யா..."

"எங்கே?"

"மத்தியானம் நீ அப்பாய்ன்ட்மென்ட் ஃபிக்ஸ் பண்ணின டாக்டர்களின் வீட்டிற்கு."

''உன்னை செக் பண்ணிப் பார்க்க. எங்கே என்ன தவறு என்று கண்டுபிடிக்க...''

''வேண்டாம். ராம். ப்ளீஸ். நானே முயற்சி பண்ணிப் பார்க்கிறேனே?''

''நோ. சீக்கிரம் கிளம்பு நித்யா க்விக். இப்போதே மணியாகி விட்டது பார்.''

அவளும் வந்து உட்கார்ந்ததும் கார் வாசல் புல்தரையை அரை வட்டம் அடித்துக் கொண்டு வேகமாக வெளியில் போயிற்று.

## 9

மனோதத்துவ டாக்டரிடமும் நரம்பு நிபுணரிடமும் நிறைய தரம் போய் வந்தாகிவிட்டது. மூளையின் இயக்கங்களை எக்ஸ்ரே எடுத்து உடம்பைப் பரிசோதித்து நிறைய கேள்விகளாகக் கேட்டு...

பதில் சொல்ல முடியாமல் தடுமாறிப் போனாள் நித்யா. கடந்த காலத்தைப் பற்றி ஆழமாய், கேள்விமேல் கேள்வியாக வந்ததும் குழம்பிப்போனாள். எதுவும் தெளிவு படாததால் கொஞ்சம் பயந்து கூடப் போனாள்.

''வேண்டாம் ராம். எனக்கு எந்த டாக்டரும் பரிசோதனையும் வேண்டாம். எப்போது எல்லாம் நினைவுக்கு வருகிறதோ வரட்டும். வராவிட்டாலும் பரவாயில்லை. இனிமேல் நான் அந்த சைக்கியாட்ரிஸ்டிடம் வரமாட்டேன்.'' என்று சொல்லிப் பிடிவாதம் பிடித்தாள்.

ஆனாலும் ராம்குமார் விடவில்லை. ''உன்னைக் கஷ்டப்படுத்த வேண்டும் என்பது அந்த சைக்கியாட்ரிடிஸ்டி நோக்கமில்லை நித்யா. ஹி இஸ் ஹெல்ப்பிங் யு டு கம் அவுட் ஆஃப் திஸ் அம்னிஷியா. அதனால் நீயும் கொஞ்சம் ஒத்துழைத்தால்தான் முடியும்...''

அப்போதும் அவள் பிடிவாதமாக இருக்கவே— ''என்ன நித்யா இது குழந்தை மாதிரி?'' என்று கோபித்துக் கொண்டான் அவன். ''நீ ஒரு சாதாரண நோயாளியாக மட்டும் இருந்தால் இப்படி மறுக்கலாம். வேண்டாம்

என்று சொல்லலாம். பட், யு ஆர் நாட் லேக் தட். ஒரு டாக்டரின் கஷ்டங்களைப் புரிந்து கொண்டிருப்பவள். எவ்வளவோ விஷயங்களைத் தெரிந்து கொண்டிருப்பவள். நீ போய் இப்படிச் செய்யலாமா? எழுந்திரு நித்யா.'' என்று அதட்டி அழைத்துக் கொண்டு போனான்.

அன்றும் அவளைப் பரிசோதித்த டாக்டர் கல்யாணசுந்தரம் ராம்குமாரிடம் விரிவாகப் பேசினார்.

''இட்ஸ் வெரி ஸ்ட்ரேஞ்ச் மிஸ்டர் ராம்குமார். சில சமயம் டெலிவரி ஆன சில பெண்களுக்கு இந்த மாதிரி மறதி வருவதுண்டு. நான்கு மாதம் ஐந்து மாதம் என்று அந்த மறதி இருந்து விட்டுப் பின் தானாகப் போய் விடுவதும் உண்டு. அப்படி இல்லாவிட்டால் அடுத்த குழந்தை பிறக்கும்போது நிச்சயம் சரியாகிவிடும். அது ஒரு அதிர்ச்சி தானே தவிர வேறு எதுவும் இல்லை. அந்த அதிர்ச்சியை வேறு ஒரு அதிர்ச்சியால் சரி பண்ணிவிட முடியும். இவர்களுக்கு விமானவிபத்தில் மறந்துபோன ஞாபக சக்தி வேறு எந்த அதிர்ச்சியிலாவது திரும்பி வரலாம். அது உடம்பின் அதிர்ச்சியாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. மனசுக்கு ஏற்படுகிற அதிர்ச்சியாகக் கூட இருக்கலாம். ஸோ— லெட் அஸ் வெயிட் டில் தென். அல்லது வேண்டுமானால் ஷாக் ட்ரீட்மெண்ட் கொடுத்துப் பார்க்கலாம்.''

''வேண்டாம் டாக்டர். கொஞ்சம் காத்திருந்து பார்க்கலாம். அப்போதும் அவள் இதே நிலையில் இருந்தால் அதன்பின் யோசிக்கலாம்,'' என்றவன், ''இன்னொரு விஷயம் டாக்டர்...'' என்று ஆரம்பித்து அன்று நித்யா முதல் தடவையாய் நர்ஸிங் ஹோமிற்கு வந்திருந்தபோது வயிற்று வலிக்காரரின் வியாதியைக் கண்டு பிடித்ததைச் சொன்னான்.

''அது எப்படி டாக்டர்?'' என்று கேட்டான்.

அவர் சற்று யோசித்தார். பின்—

''அவர்களுடைய கணவரும் ஒரு டாக்டரா...?'' என்று கேட்டார்.

''நோ...'' என்று மறுத்தான் அவன்.

அவர் மறுபடியும் யோசித்தார்.

''அவர்களைப் பற்றின எந்த விவரமும் உங்களுக்குத் தெரியாதா?'' என்று கேட்டார். ''எதற்குக் கேட்கிறேன் என்றால் எந்தச் சின்ன விஷயமும் இப்போது நமக்கு உதவி செய்யக் கூடும்.''

அதன் பின் ராம்குமார் தயங்கித் தயங்கி அவளைப் பற்றி கணேஷ் எழுதியதையெல்லாம் சொன்னான்.

அவரிடம் அதைச் சொல்ல வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டதற்காக வருந்தினான். அவரிடம் மட்டுமில்லை. யாரிடமுமே சொல்லப் பிரியப்படாத விஷயம் அது. அவனே கூட மறக்க நினைக்கிற விஷயம்.

அவன் சொன்னதையெல்லாம் பொறுமையாகக் கேட்டுக் கொண்ட அவர் நெற்றி சின்னச் சுருங்கலாய்ச் சுருங்கியது. பின் மெதுவாக நிதானமாகப் பேச ஆரம்பித்தார்.

"இதை என்னால் நம்பவே முடியவில்லை ராம்குமார். இவர்களா? இந்த உருவமா? இத்தனை பணிவாய் பதவிசாய் இருக்கிற இவர்களா அந்த மாதிரியெல்லாம் நடந்து கொண்டவர்கள்! எத்தனை வருத்தமான விஷயம். விரும்பத் தகாத விஷயம். ஐயம் ரியலி வெரி ஸாரி. அப்படிக் குடிப்பவர்களானால் சிகரெட் பிடிப்பவர்களானால் உங்களிடம் ஏன் சிகரெட் வாசனையே பிடிக்காது என்று சொல்ல வேண்டும். ம்...? இதற்கு வேறு ஏதாவது காரணமிருக்கும் என்று நினைக்கிறீர்களா?"

"ஐ டோண்ட் நோ. நித்யாவை அந்த மாதிரியெல்லாம் நினைத்துப் பார்க்கவே கஷ்டமாக இருக்கிறது. வெறும் குடி, சிகரெட் மட்டுமில்லை. நிறைய ஆண்களின் தொடர்பும் உண்டு என்று கணேஷ் எழுதி இருந்தான்."

"அப்படியா? அப்படியானால் அதை ஒரு லேடி டாக்டரை டெஸ்ட் பண்ணச் சொல்லிக் கண்டு பிடித்து விடலாம் ராம்குமார்."

"ஐ நோ டாக்டர். ஆனால் அப்படிச் செய்வது எத்தனை அநாகரிகமான விஷயம். அதுவும் நான் எப்படி அவளை... நோ டாக்டர். ஐ காண்ட் டூ தட்..."

"நீங்கள் அப்படி ஃபீல் பண்ணினால் வேண்டாம். வேறு வழியில் முயற்சி பண்ணிப் பாருங்களேன். ஒரு காக்டெயில் பார்ட்டிக்கு அரேஞ்ச் பண்ணி அவர்களுக்குக் கொஞ்சம் விஸ்கி கொடுத்து சிகரெட் ஆஃபர் பண்ணிப் பாருங்களேன். அதையும் நீங்கள் செய்யாமல் வேறு யாரையாவது செய்யச் சொல்லிப் பாருங்கள்..."

அதைக் கேட்டு அவன் சிறிது யோசித்தான். அந்த யோசனையைப் பார்த்ததும் அவரே பேசினார். "எல்லாவற்றிற்கும் தயங்கினால் எப்படி ராம்? முடிச்சு விழுந்த நூல்கண்டின் ஒரு முனையாவது கிடைத்தால்தானே முடிச்சை அவிழ்க்க முடியும்?"

"ஓ. கே. டாக்டர். ஐ வில் டூ தட். நானே ஒரு

ட்ரிங்க் பார்ட்டிக்கு ஏற்பாடு பண்ணி அவளையும் அழைத்துக் கொண்டு போகிறேன். அப்புறம் அந்த நோயாளியின் நோயைக் கண்டு பிடித்த விஷயம்...''

''அதுவும் கொஞ்சம் நெருடலாகத்தான் இருக்கிறது. அதை வைத்துக் கொண்டு மட்டும் எதுவும் சொல்லிவிட முடியாது. நம் வீட்டுப் பெண்கள்கூட ஏதோ அறிகுறியை வைத்துக் கொண்டு வியாதியின் பெயரைக் கண்டுபிடித்து விடுவதைப் பார்த்திருக்கலாம். பட், இது அந்த மாதிரி இல்லைதான். சரியான மெடிகல் வார்த்தையைச் சொல்லியிருக்கிறார்கள். இதற்கும் நீங்கள் ஒரு பரிசோதனையில் இறங்க வேண்டியதுதான்...''

''என்ன' டாக்டர்?'' என்று மீண்டும் தயங்கினான் அவன்.

''தினமும் அவர்கள் உங்கள் நர்ஸிங் ஹோமிற்கு வருகிறார்கள் இல்லையா...?''

''எஸ் டாக்டர்?''

''நாளையிலிருந்து சில நோயாளிகளின் எக்ஸ்ரேயை அவர்களிடம் கொடுங்கள். வித்தியாசமான நாலு நோயாளிகளை டெஸ்ட் பண்ணும்போது அவர்களையும் கூட வைத்துக் கொண்டு யோசனை பண்ணுகிற மாதிரி நடியுங்கள். ஆபரேஷன் பண்ணுகிறபோது ஒரு தரம் அவர்களையும் தியேட்டருக்குள் அனுமதியுங்கள்.''

''ஆபரேஷன் தியேட்டருக்குள் சம்பந்தப்படாத ஒரு மனிதரை அனுமதிப்பதா? என்ன டாக்டர் சொல்கிறீர்கள்?''

''உங்கள் சங்கடம் எனக்கும் புரிகிறது. தியேட்டருக்குள் யாரையும் அனுமதிப்பது கூடாது என்றாலும் இந்த சந்தர்ப்பத்தில் அதை நீங்கள் மீறித்தான் ஆக வேண்டும். அது ஒரு மேஜர் ஆபரேஷனாக இருக்க வேண்டாம். சாதாரண டான்ஸில்ஸ் ஆபரேஷனாக இருந்தால் கூடப் பரவாயில்லை.''

''பட் ஐ'ம் நாட் அன் இ. என். டி. டாக்டர்.''

''யு ஹேவ் காட் எ வெரி குட் ஸென்ஸ் ஆஃப் ஹ்யூமர்...'' என்று பெரிதாய்ச் சிரித்தார் அவர். பின்— ''லெட் அஸ் ஸீ...'' என்று எழுந்து கொண்டதும் வெளியில் வந்தான் ராம்குமார்.

காரில் போனபோது நித்யா கேட்டாள்.

''அவ்வளவு நேரம் தனியாகப் பேசினீர்களே...'' என்ன சொன்னார் டாக்டர்...''

... எல்லாம் சரியாகப் போய்

விடும் என்றார்.''

''குழந்தைக்குச் சொல்கிற மாதிரி சொல்கிறீர்களே?'' என்று வருத்தமாகச் சிரித்தாள் அவள்.

''நிஜமாகத்தான் நித்யா. எல்லாம் சரியாகப் போய் விடும் என்றுதான் சொன்னார்.''

''அவ்வளவு நேரமாக அந்த ஒரு வார்த்தைதான் சொன்னாரா...?''

''அவ்வளவு நேரம் பேசினால் உன்னைப் பற்றித்தான் என்று அர்த்தமா நித்யா. இரண்டு டாக்டர்களுக்கிடையில் பேச எத்தனை விஷயமில்லை...?''

அது சரி என்று தோன்றவே அதற்கு மேல் ஒன்றும் கேட்காமல் பேசாமல் இருந்தாள் அவள்.

## 10

இரண்டு நாட்களாகத் தூக்கமில்லாமல் அலைந்தான் ராம்குமார். நிறைய சிகரெட் பிடித்தான். ராத்திரி முழுவதும் பால்கனியில் உட்கார்ந்து வானத்தை வெறித்தான். மனத்தில் நிம்மதி இல்லாமற் போயிற்று. டாக்டர் கல்யாணசுந்தரம் சொன்ன மாதிரி செய்யப் பிடிக்கவும் இல்லை. வேறு வழி எதுவும் தோன்றவில்லை.

தான் இப்படிச் செய்தது தெரிந்தால் நித்யா என்ன நினைப்பாள் என்று யோசித்தபோது மிகவும் கஷ்டப்பட்டுப் போனான். எந்தக் காரணத்தினாலும் அவள் மனத்தில் தான் இருக்கிற உயரத்திலிருந்து சரிந்து விடக் கூடாது என்று நினைத்தான்.

ஏன் இப்படி நினைக்கிறோம் என்று எண்ணிப் பார்த்தபோது நித்யா மீது எவ்வளவு அன்பு வைத்திருக்கிறோம் என்பதைப் புரிந்து கொண்டான்.

அவள்மீதா! அத்தனை வெறுத்த அவள் மீதா...? இது எப்படி சாத்தியமாயிற்று? அவள் கணேஷின் மனைவி. கணேஷ் எழுதினதெல்லாம் உண்மைதான் என்று திடமாக நம்பினவனா இப்போது இப்படி? இது நித்யாவிற்குத் தெரியுமா? என்ன நினைக்கிறாள் அவள்? அம்மாவிற்கு தெரிந்தால் என்ன நினைப்பாள்.?

அம்மாவை நினைத்ததும் மனசு இன்னும் சங்கடப் பட்டது. இதைத் தாங்க முடியுமா அவளால் என்ற சந் தேகமும் வந்தது. அம்மாவுக்கு விசாலமான மனம்தான். நித்யா இன்னொரு கல்யாணம் பண்ணிக் கொள்ள நினைத் தால் ஒன்றும் சொல்ல மாட்டாள்தான். ஆனால் அந்த இன்னொரு கல்யாணம் தன்னுடன் என்பது தெரியவந்தால்?

என்ன நினைப்பு இது என்று தோன்றியதும் சட்டென்று உடம்பைச் 'சிலிர்த்துக் கொண்டான். கல் யாணமா? நித்யாவுடனா? தான் மட்டும் சம்பந்தப்பட்ட விஷயமா! அல்னுஷர் கட்டின கோட்டை மாதிரி மடமட வென்று இது என்ன கற்பனை?

கற்பனை...? வெறும் கற்பனையாகப் போய் விடுகிற விஷயம்? இல்லை, நித்யாவை அவனால் இழக்க முடியாது. அவளை இழக்கிற சக்தி அவனிடம் இல்லை. அதுவும் இத் தனை நாட்கள் அவளுடன் பழகின பின் அவளை ஓரள விற்குத் தெரிந்து கொண்டபின்—

தெரிந்து கொண்டிருக்கிறோமா அவளை...அப்படித் தெரிந்து கொண்டிருந்தால் மனத்தில் இந்தச் சந்தேகம் ஏன் வருகிறது? அவள் அப்படிப்பட்டவள் இல்லை என்று நம்பி இதையெல்லாம் ஏன் ஒதுக்கித் தள்ளமுடியாமற் போகிறது? ஸோ—அடி மனசில் அவளைப் பற்றின சந்தேகம் இன்னும் இருக்கிறது. கணேஷின் கடிதங்களின் உறுத்தல்—நெருடல் எல் லாம் இருக்கிறது. இந்த உறுத்தலோடும் நெருடலோடும் அவளுடன் தன் வாழ்க்கையைப் பிணைத்துக் கொள்வதில் எந்த அர்த்தமும் இல்லை. அவளைப்பற்றி நினைப்பது நல்ல தில்லை. அந்த உறுத்தலும் சந்தேகமும் இல்லாமல் இருக்க வேண்டுமானால் அவளைப் பற்றின உண்மை தெரிய வேண்டு மானால் டாக்டர் கல்யாணசுந்தரம் சொல்கிற மாதிரி கேட் பதைத் தவிர வேறு வழி இல்லை.

சிகரெட்டை அணைத்து ஆஷ்ட்ரேயில் போட்டு விட்டு பால்கனியை விட்டு வந்தபோது நித்யா எதிரில் வந் தாள்.

"உங்களிடம் கொஞ்சம் பேசவேண்டும் ராம்," என்றாள்.

"என்ன?" என்று அவள் முகத்தையே பார்த் தான் அவன்.

"இப்படி மாடிப் படியில் நின்று கொண்டு பேசி விடுகிற விஷயமில்லை..."

"சரி. அப்படியானால் என் அறைக்குப் போக லாம் வா."

அறைக்குப் போய் உட்கார்ந்து கொண்டதும் தன் மனத்தின் பரபரப்பு அவளுக்குத் தெரிந்து விடப் போகிறதே என்று சிகரெட் ஒன்றைப பற்றவைத்துக் கொண்டான். அதைப் பார்த்ததும், "இதைப் பற்றித் தான்கேட்க வந்தேன் ராம்," என்றாள் அவள் மெலிசான குரலில்.

அவன் அவளைப் பார்ப்பதைத் தவிர்த்துக் கொண்டே கேட்டான்.

"எதைப் பற்றி...?"

"இப்படி 555 ஆகக் கரைந்து சாம்பலாகிற காரணத்தைப் பற்றி..."

"என்ன சொல்கிறாய்...?"

"நான் சொல்வது உங்களுக்குப் புரியவில்லை?"

அந்தப் பார்வையை சந்திக்கிற சக்தி இல்லாமல் மீண்டும் அவன் தலை குனிந்தது.

"என்ன கஷ்டம் ராம் உங்களுக்கு? எதற்காக இப்படி சிகரெட் சாம்பலாகக் கருகிப் போகிறீர்கள்? என்னை ஒரு நல்ல சினேகிதியாக நினைத்து என்னிடம் சொல்லுங்கள் ராம்..."

சினேகிதி!

அந்தச் சினேகிதி என்ற வார்த்தை சட்டென்று மனதைத் தாக்க அவள் முகத்தை நேராகப் பார்த்தான்.

"ஏன் நித்யா...வெறும் சினேகிதிதானா? இது சினேகம் மட்டும்தானா நித்யா?"

"ரா...ம்...!"

"என்ன நித்யா அப்படிப் பார்க்கிறாய்? அது தான் நமக்குள் சாத்தியப்படும் என்று நினைக்கிறாயா?"

"வந்து..நான்.. நான் உங்கள் அண்ணாவின்—"

"ஸ்டாப் இட் நித்யா. இது என்ன, உனக்குத் தப்பித்துக் கொள்ள கிடைத்திருக்கிற ஆயுதமா? திருப்பித் திருப்பி இந்த ஒரே வார்த்தையால் என்னைத் தாக்க? வெல், நீ கணேஷின் மனைவியாக இருந்தாலும் இப்போது கணேஷ் உயிரோடு இல்லை..."

"அது நமக்கு வசதியாகத்தான் இருக்கிறது. இல்லை?"

"என்ன!"

"—"

"என்ன சொன்னாய் நித்யா. ஹௌ டேர் யு டாக் லைக் தட்! இப்படியா நினைத்துக் கொண்டிருக்கிறாய்?

இத்தனை கேவலமாகவா...! தயவு செய்து இந்த இடத்தை விட்டுப் போகிறாயா? ப்ளீஸ்...''

''இல்லை ராம். நான்...வேடிக்கையாக...விளையாட்டிற்காக—''

''விளையாட்டிற்காகப் பேசுகிற பேச்சா இது. நெருப்போடு விளையாடுகிற மாதிரி மனசோடு இது என்ன விளையாட்டு. இதுவா உனக்கு வேடிக்கை...ம்...?''

''ஐயம் ஸாரி ராம். வெரி ஸாரி. ஐ டிடிண்ட் மீன் டு ஹர்ட் யு ராம்.''

அரைவினாடி தூரத்து இருட்டை வெறித்துக் கொண்டு நின்றான் அவன். பின் ஓர் ஆழமான பெருமூச்சோடு அவளைத் திரும்பிப் பார்த்தான்.

''இட்ஸ் ஆல் ரைட் நித்யா. உனக்கு இஷ்டமில்லாத விஷயத்தை நான் கட்டாயப் படுத்த மாட்டேன். உடம்பை வேண்டுமானால் கட்டாயப் படுத்தலாம். ஆனால் மனத்தை யார் நித்யா கட்டாயப் படுத்த முடியும்? இனி மேல் இந்த விஷயத்தைப் பற்றி நான் பேசவே மாட்டேன். ஸோ—யு கைண்ட்லி ஃபர்கெட் இட்.''

அந்த பதிலில் அடிபட்டவளாக அவனை நிமிர்ந்து பார்த்தாள். ஏதோ பேச நினைத்துப் பேச்சு வராமல் கீழ் உதட்டை இறுக்கக் கடித்துக் கொண்டாள். அதன் பின் அவனும் ஒன்றும் பேசாமற் போகவே உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்தாள்.

''நான் வரட்டுமா?'' என்று தயங்கினாள்.

அவன் 'ம்' என்று நிமிர்ந்து கூடப் பார்க்காமல் பதில் சொன்னதும் சரேலென்று வெளியில் போனாள்.

## 11

நர்ஸிங் ஹோம் அமைதியாக இருந்தது. ஒவ்வொரு அறையிலும் சின்னதாய் இரவு விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது. நைட் ட்யூட்டி நர்ஸையும், அட்டெண்டர் ரங்கசாமியையும் தவிர யாருமில்லை. டாக்டர்கள் கூட ஒருவருமில்லை. வெய்யிலுக்கு பயந்து எல்

லோரும் ஊட்டிக்கும் கொடைக்கானலுக்கும் போயிருந்தார்கள்

''டோண்ட் பாதர். ஐ வில் மானேஜ். ஹேவ் எ நைஸ் டைம்,'' என்று சொல்லி எல்லாரையும் அனுப்பியிருந்தான் ராம்குமார். டாக்டர் சித்ரா வந்து கேட்ட போது மட்டும் கொஞ்சம் தயங்கினான்.

''ஒரே வாரம்தான் டாக்டர். அந்த ஏழு நாளில் டெலிவரிக்கு ட்யூவாக எந்தக் கேஸும் இல்லை. அதற்குப் பின் வரிசையாகக் கேஸ்கள் வரும். லா லெட் மீ கோ கெளு,'' என்றதும் மறுக்க முடியாமல் தலையாட்டினான் அவன்.

நர்ஸிங் ஹோமில் அவனும் நித்யாவும் ஷீலாவும் மட்டும்தான் இருந்தார்கள். ஷீலாகூட அன்று மாலை யாரையோ சந்திக்க வேண்டும் என்று சீக்கிரமே கிளம்பிப் போய் விட்டாள். அதன் பின் நித்யா லெபாரெட்டரியை மூடிக் கொண்டு ராம்குமாரின் அறைக்கு வந்தாள். ''போகலாமா?' என்று கேட்டாள். அவன் பதில் சொல்லாமல் மெடிகல் ஜர்னல் ஒன்றைப் புரட்டிக் கொண்டிருக்கவே பேசாமல் எதிர் மேஜையில் போய் உட்கார்ந்து கொண்டாள்.

அன்று மட்டுமில்லை. ஒரு வாரமாகவே ராம்குமார் அப்படித்தான் இருந்தான். அவளோடு பேசுவதைத் தவிர்த்தான். அவளைப் பார்ப்பதை, வேலை செய்வதை...கூட சாப்பிடுவதை...ஷீலா கூட அன்று காலை அதைக் கவனித்துவிட்டுக் கேட்டாள்.

''உங்களுக்கும் டாக்டருக்கும் ஏதாவது சண்டையா மேடம்?''

''சண்டையா? எங்களுக்கா? சண்டை போட நாங்கள் என்ன சின்னக் குழந்தைகளா ஷீலா...''

''சின்னக் குழந்தைகள் பெரிதாய்ச் சண்டை போடும். பெரியவர்கள் சின்னதாய்ச் சண்டை போட்டுக் கொள்ளலாமே மேடம்?''

''சின்ன சண்டையுமில்லை. பெரிய சண்டையுமில்லை. ஏன் அப்படிக் கேட்கிறாய் ஷீலா...?''

''இல்லை. டாக்டர் உங்களிடம் சரியாகப் பேசாமல் உங்கள் வேலைகளையெல்லாம் என்னைச் செய்யச் சொல்கிறாரே என்று கேட்டேன்...''

அந்த உண்மை மனத்தைத் தாக்கவே பேசாமல் இருந்தாள் நித்யா. அதற்கு மேல் ஷீலாவும் ஒன்றும் கேட்கவில்லை. ஒரு நிமிஷம் மௌனமாய் டைப் அடிக்கத் தொடங்

டிருந்தாள். பின் சட்டென்று நிறுத்திவிட்டு நித்யாவை நிமிர்ந்து பார்த்தாள்.

"நீங்களும் டாக்டரோடு பெங்களூர் போகிறீர்களா மேடம்?"

"டாக்டர் பெங்களூர் போகிறாரா? எப்போது ஷீலா...?"

"யு டோண்ட் நோ?" என்று ஆச்சரியமாய் பார்த்தாள். "ஹி ஈஸ் லீவிங் டுமாரோ..."

"அப்படியா? என்ன விஷயம் ?"

"ஜெனரல் பிஸிஷியன்ஸ் கான்ஃப்ரென்ஸ். இரண்டு நாள் கான்ஃபரென்ஸ். மூன்றாம் நாள் காலையில் ஹி வில் பி பேக் டு மெட்ராஸ்."

அதைக் கூட அவன் தன்னிடம் சொல்லவில்லை என்பது அவளுக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனாலும் ஷீலாவின் முன் எதையும் வெளிக்காட்டாமல் வெறுமையாய் சிரித்து விட்டு வந்தாள். இப்போது அவனிடம் அதைப் பற்றி கேட்டால் என்ன என்று தோன்றவே மெதுவாக—

"டாக்டர்..." என்று கூப்பிட்டாள். அவன் என்ன என்கிறாற்போல் அவளைப் பார்த்தான். ராம் என்பதற்கு பதிலாகத் தான் வெறும் டாக்டரானதை மனசுக்குள்ளேயே குறித்துக் கொண்டான். ஆனாலும் அவளிடம் ஒன்றும் கேட்கவில்லை. வெற்றுப் பார்வையாக அவளைப் பார்த்தான்.

"நாளைக்கு நீங்கள் பெங்களூர் போகிறீர்களா?"

"ஆமாம்."

"அதைக்கூட என்னிடம் சொல்லக் கூடாதா?"

மெலிதாய்ச் சிரித்தான் அவன்.

"நான் என்ன அமெரிக்காவா போகிறேன், எல்லாரிடமும் சொல்லிக் கொள்ள?"

'அப்படியானால் நானும் அந்த எல்லாரிலும் ஒருத்திதானா?' என்று கேட்க நினைத்து சட்டென்று தன்னை அடக்கிக் கொண்டாள். அவன் கேட்ட 'சிநேகிதிதானா?' நினைவுக்கு வந்தது. அப்போது அவனும் இதே மாதிரிதானே கஷ்டப்பட்டுப் போயிருப்பான். இப்படித்தானே மனசுக்குள் ஏமாந்து...

ஐயம் ஸாரி ராம். நான் சொன்ன பதிலுக்காக வருத்தப்படுகிறேன். ராம். சிநேகிதி? இது வெறும் சிநேகிதம். ஏன் அப்படிச் சொன்னேன்? எதற்காக? உன்

களைப் புரிந்து கொண்டும், அந்த பதில் எப்படி வந்தது? ஸாரி ராம். ரியலி வெரி ஸாரி.

அவளிடமிருந்து எந்த பதிலும் வராமற் போகவே அவனே மறுபடியும் கேட்டான்.

"என்ன நித்யா, பதிலே இல்லே?"

"ம்...?"

"எதற்காகக் கேட்டாய் நித்யா?"

"இல்லே. நீங்கள் போவதானால் நானும் கூட வரலாம் என்று கேட்டேன்."

"நிஜமாகவா நித்யா? நீயும் வருகிறாயா!"

"ஆமாம் ராம். நிஜமாகத்தான். இரண்டு நாளைக்கு. ஒரு மாறுதலாக இருக்கும் என்று—"

"முன்பே சொல்வதற்கென்ன. இப்போது ப்ளேன் டிக்கெட் கிடைக்க வேண்டுமே?"

"முன்பே தெரிந்திருந்தால் சொல்லியிருப்பேன்...."

"ஐயம் ஸாரி," என்றான் அவன் நிஜமாகவே வருத்தப்படுகிற குரலில். "சொல்லக் கூடாது என்பதில்லே. மறந்தே போய்விட்டேன்."

'அதை நம்புகிறேன்' என்கிறாற்போல் புன்னகை செய்தாள் அவள். அவன் டெலிபோனில் தன் டிராவல் ஏஜென்ஸியைக் கூப்பிட்டான். மறுநாள் காலே ப்ளைட்டிற்கு பெங்களூருக்கு இன்னொரு டிக்கெட் கிடைக்குமா என்று பார்க்கச் சொன்னான். பத்து நிமிஷங்களில் 'ஸாரி' என்ற பதில் வந்ததும் என்ன செய்யலாம் என்று யோசித்தான்.

"காரிலேயே போய் விடலாமா நித்யா?" என்று கேட்டான்.

"உங்களுக்கு எந்தத் தொந்தரவும் இல்லே என்றால் எனக்கு ஆட்சேபம் இல்லே."

"தொந்தரவா...உன்னே அழைத்துக் கொண்டு போவதா?" என்று கேட்டு வருத்தமாய்ப் பார்த்தான் அவன். அந்தப் பார்வையைத் தாங்க முடியாமல் அவள் தலை குனிந்தபோது அறைக் கதவு தட்டப்பட்டது. அவன் பதிலுக்குக் காத்திராமல் நர்ஸ் பிரேமா கதவைத் தள்ளிக் கொண்டு வந்தாள்.

"எக்ஸ்க்யூஸ் மி டாக்டர். டாக்டர் சித்ராவோட கேஸ் ஒன்று லேபர் பெயினோடு வந்திருக்கு. படுக்க வைத்து விட்டு வந்திருக்கிறேன்," என்றாள் அவசரமான குரலில்.

"என்ன?" என்று எழுந்து கொண்டான் அவன்.

''இந்த ஒரு வாரத்திற்கு ட்யூ கேஸ் எதுவுமில்லை என்று சொன்னார்களே..?''

''இந்தக் கேஸுக்குக் கூட ட்யூ இப்போது இல்லை டாக்டர். அடுத்த மாதம்தான். ஆனால் இப்போது பெயின் வந்திருக்கிறது. ஃபால்ஸ் பெயினாக இருக்கும் என்று பார்த்தால் அதுவும் இல்லை.''

''ஓகேட், இப்போது என்ன பண்ண முடியும். டாக்டர் ஆண்டாளுக்கு போன் பண்ணி உடனே வரச் சொல்,'' என்று ஸ்டெதஸ்கோப்புடன் வெளியில் போனான். நித்யாவும் கூடப் போனாள்.

பரிசோதித்தபோது அதிக நேரம் தாங்காது என்று தோன்றியது. எந்த நிமிடமும் குழந்தை பிறந்து விடலாம். சட்டென்று லேபர் அறைக்கு மாற்றச் சொல்லி விட்டு டாக்டர் ஆண்டாளுக்காகக் காத்திருந்தான். நர்ஸ் திரும்பி வந்து டாக்டர் ஆண்டாள் கிடைக்கவில்லை என்றதும் என்ன செய்வதென்று புரியாமல் அப்படியே நின்றான். பின் நர்ஸின் உதவியோடு தானே டெலிவரி பார்க்க முடிவு செய்தபோது மெதுவாகக் கேட்டாள் நித்யா.

''நான் பார்க்கட்டுமா ராம் இந்த டெலிவரியை...?''

''நீயா...? என்ன சொல்கிறாய் நித்யா?''

''என்னால் முடியும் என்று தோன்றுகிறது. ராம். ஏதோ ஒரு நம்பிக்கை திடமாக இருக்கிறது. ஐ திங்க் ஐ கேன் மானேஜ் வெரி வெல்...''

சட்டென்று டாக்டர் கல்யாணசுந்தரம் சொன்னது நினைவுக்கு வர ஒரு விநாடி தயங்கிப் பின் சரி சொன்னான்.

''ஓ. கே. நித்யா. நான் கூடவே இருக்கிறேன்..'' என்றான். அவள் முகம் பளிச்சிடக் கையை சோப்புப் போட்டு அலம்பிக் கொண்டு நர்ஸோடு உள்ளே போனாள்.

அதற்கு மேல் எனிமா கொடுப்பதற்குக் கூட அவகாசமில்லை என்று தெரிந்து கொண்டு டயல் டேஷனுக்கோ வேறு எதற்குமோ தேவை இல்லை என்பதை புரிந்து கொண்டு வலி தாங்காமல் அலறுகிற அந்தப் பெண்ணை சமாதானப் படுத்தினாள்.

''இதோ ஐந்தே நிமிஷம். இன்னும் நன்றாக அழுத்தி மூச்சு விடுங்கள். பார்க்கலாம்... இன்னும் ஆழமாய்... இன்னும்...இன்னும்...''

பேசிக் கொண்டே வயிற்றை மெல்ல அழுத்தி

ஒரு பெரிய அலறலில் குழந்தை வெளியில் வந்ததும் சட்டென்று பிடித்துக் கொண்டாள். ஆண் குழந்தை, தலை நிறைய முடி. நர்ஸை நேரத்தைக் குறித்துக் கொள்ளச் சொல்லி, தையல் போட்டு—மெத்தர்ஜின் இன்ஜெக்ஷன் கொடுத்தாள். ப்ளீடிங் இன்னும் அதிகமாக இருக்கவே சட்டென்று வெளியில் வந்தாள்.

''ராம். ப்ளீடிங் கொஞ்சம் அதிகமாக இருக்கிறது ராம். ஸிம்போஸினுல் கொடுத்து டெக்ஸ்ட்ரோஸ் ஆட் பண்ணி ட்ரிப் கொடுத்துவிடலாமா...?''

அவன் ஒன்றும் சொல்லாமல் ட்ரிப் கொடுக்க ஏற்பாடு பண்ணினான். குழந்தையின் எடையைத் தெரிந்து கொண்டு வெளியில் ஆவலாகக் காத்துக் கொண்டு நின்ற உறவினர்களிடம் சொல்லிவிட்டு அறைக்கு வந்தான். ஒரு நிமிஷத்திற்கெல்லாம் நித்யாவும் வந்ததும் சட்டென்று அவள் கையைப் பற்றிக் கொண்டான்.

''எனக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை நித்யா. எப்படி எந்த வார்த்தையில்... ஏன் நித்யா...நீ ஒரு டாக்டராக இருந்தாயா?''

''டாக்டரா...நானு...?'' என்று தூரப் பார்வையாகப் பார்த்தாள்.

''தெரியலே ராம்...''

''தெரியணும். கொஞ்சம் யோசி நித்யா. கட்டாயம் தெரியும். டாக்டரா இல்லே... எங்காவது நர்ஸாக இருந்தாயா? தயவு செய்து யோசியேன்.''

ஒரு நிமிஷம் யோசனை பண்ணினாள். பின்—

''தெரியவில்லே'' என்று தலையாட்டினாள்.

தன் ஆர்வம் சட்டென்று அடங்க, ''தெரியும் நித்யா. நிச்சயம் ஒருநாள் நீ யார் என்பது தெரியத்தான் போகிறது...'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். பின் 'எப்போது வரும் அந்த ஒரு நாள்' என்கிறாற்போல் அவளைப் பார்த்தான்.

'வருமா ராம்...?'' என்கிற கேள்வியில் கண் சட்டென்று கலங்க அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள் அவள்.

# 12

கடைசி முயற்சியாக டாக்டர் கல்யாணசுந்தரம் சொன்ன மாதிரி செய்து பார்த்து விடுவது. நாளை பெங்களூரில் ஒரு காக்டெயில் பார்ட்டிக்கு ஏற்பாடு பண்ணி— இவளையும் அழைத்துப் போய், தான் சற்றுத் தள்ளி நின்று. அவள் கண்ணில் படாமல் மறைந்து போய் முடியுமானால் அந்த இடத்திலேயே இல்லை என்ற பாவனையை ஏற்படுத்தி வேறு யாரிடமாவது சொல்லி இவளுக்கு லிக்கரும் சிகரெட்டும் ஆஃபர் பண்ணி... யாரிடம் சொல்வது? நினைவில் ஒவ்வொருவராகத் தேடினபோது ராம்குமாருக்குச் சட்டென்று மகேஷ் பிடிபட்டான்.

மகேஷ்தான் இதற்கெல்லாம் சரி. இந்த மாதிரி எத்தனை பெண்களை அவன் சரிப்படுத்திக் குடிக்க வைத்துப் பின்...

அவன் நித்யாவிடமும் அந்த மாதிரி நடந்து கொண்டால்? அவள் சம்மதித்தால் தானே எதுவும் நடக்க முடியும். அப்படி சம்மதிக்கிறவளாக இருந்தால் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. அதன் பின் அவளை நினைத்துக் கஷ்டப்பட வேண்டியதில்லை. இப்படி உள்ளுக்குள் தவித்து. உருகி, எதையும் வெளிப்படுத்த முடியாமல்...

ஆனால் அவள் சம்மதிக்காத பட்சத்தில்? மகேஷுக்கு மறுப்பு சொல்லிவிடுகிற பட்சத்தில்...அப்போது என்ன செய்ய முடியும்? அதனால் எந்த முடிவிற்கு வர முடியும்? எதுவானாலும் இப்படியே போய்க் கொண்டிருக்க முடியாது. வெறும் இருட்டில் நடக்க முடியாது. ஒன்று வெளிச்சம் வேண்டும். அல்லது நடப்பதை நிறுத்த வேண்டும். தான் நடப்பதை நிறுத்தப் போகிறோமா அல்லது வெளிச்சம் கிடைக்கப் போகிறதா என்பது புரியாமல் அப்படியே தூங்கிப் போனான் அவன்.

மறுநாள் காலை நான்கு மணிக்கெல்லாம் கிளம்புவதாக ஏற்பாடு. நித்யா முதல் நாள் மாலை நர்ஸிங் ஹோமிலிருந்து வந்த உடனே சாரதாவைப் பார்த்து அனுமதி கேட்டாள். ராம்குமார் கான்ஃபரன்ஸுக்குப் போகப் போவதைச் சொன்னாள். அதைக் கேட்ட உடனே—

''ராம்குமாரும் வருகிறானாமா? பின் என்ன பயம் உனக்கு, தாராளமாகப் போய் விட்டுவா. கான்ஃபரன்ஸ் முடிந்த உடனே கிளம்பி விடாமல் இன்னும் நாலு நாள் இருந்து விட்டு வாம்மா. பாவம் அவன் இத்தனை வருஷத்தில் இந்த நர்ஸிங் ஹோமையும் வேலையையும் விட்டு

ஒரு நாள் கூட இருந்ததில்லை. இப்போதாவது நாலு நாள் நிம்மதியாக இருக்கட்டும்.''

''நாலு நாளா? முடியாதம்மா. நர்ஸிங் ஹோமில் டாக்டர்கள் யாருமில்லை. எல்லாரும் ஊட்டி கொடைக் கானல் என்று போயிருக்கிறார்கள்.''

''வருஷா வருஷம் அவர்கள்தான் போகிறார் களே..இந்த வருஷம் இவன் போகட்டுமே!''

''அதற்கு முதலில் இவர் சம்மதிக்கணுமே?'' என்றாள் நித்யா சிரித்துக் கொண்டே.

''அவனைக் கேட்டால் சம்மதிக்க மாட்டான். நீதான் ஏதாவது சொல்லித் தங்கச் செய்யணும்.''

''பார்க்கலாம்மா...'' என்று நம்பிக்கை இல்லா மல் சொன்னாள் அவள். ராம்குமாருக்கு நிச்சயம் ஓய்வு தேவை. உடலுக்குத் தேவை இல்லாது போனாலும் மனத் துக்குத் தேவை. சொன்னால் கேட்பாரா அவர். நான்கு நாட்கள் தங்கச் சம்மதிப்பாரா? எதற்கும் பெங்களூர் போய்க் கேட்டுக் கொள்ளலாமே...

பெங்களூர் போனதும் அஜந்தா ஓட்டலில் அறை எடுத்தான் அவன். ரேஸ் சமயமானதால் எங்கும் அறை கிடைக்கவில்லை. அஜந்தாவில் கூட ஒரு சூட்தான் கிடைத் ததே தவிர தனித்தனி அறை இல்லை. புக் பண்ணுவதற்கு முன் மறுபடியும் காருக்குப் போய் நித்யாவிடம் சொன்னான் அவன். அவள்—

''அதற்கென்ன செய்ய முடியும்? கிடைப்பதை எடுத்துக் கொள்ள வேண்டியதுதான். இன்னும் எத்தனை ஓட்டல்களாக அலைய முடியும். இதிலேயே மானேஜ் பண்ணிக் கொள்ளலாம் ராம். சூட் என்றால் வரவேற்பறை யும் நீளமான சோபா கம் பெட்டும் இருக்குமாமே. அதில் நான் படுத்துக் கொண்டு விடுகிறேன்,'' என்றதும் அவன் அந்த சூட்டையே புக் பண்ணிக் கொண்டு வந்தான்.

குளித்து உடைமாற்றி அறையிலேயே டிபன் வரவழைத்துச் சாப்பிட்டதும் அவன் ரிஸப்ஷனுக்குப் போய் மகேஷிற்கு போன் பண்ணினான். தான் உடனே நேரில் வந்து பார்ப்பதாகச் சொன்னான்.

மகேஷின் வீடு ஜெயநகர் எக்ஸ்டென்ஷனில் இருந் தது. தனியாய் பெரிய பங்களா. அதில் மகேஷ் மட்டும் தான் இருந்தான். கல்யாணமான மூன்றும் மாதம் ஒரு நி விபத்தில் மனைவி இறந்ததும் அவன் வேறு கல்யாணம் பண்

ணிக் கொள்ளவில்லை. கல்யாணம் மட்டும்தான் பண்ணிக் கொள்ளவில்லையே தவிர நிறையப் பெண்கள் வீட்டிற்கு வருவார்கள். இரண்டு மூன்று நாட்கள் தங்கிவிட்டுப் போவார்கள். கேட்டால் அவன் சிரிப்பான்.

"இதெல்லாம் மனசுக்கு இல்லே. அங்கே சுஷ்மாவைத் தவிர யாரும் இருக்க முடியாது. யாருக்கும் அந்தத் தகுதி இல்லே. இதெல்லாம் வெறும் பொழுது போக்கிற்கு அந்தந்த நேரத்திற்கு. அவ்வளவுதான்," என்பான்.

அவனிடம் ரொம்பவும் சுருக்கமாக விஷயத்தைச் சொன்னான் ராம்குமார். மிகவும் ஜாக்கிரதையாக எதைச் சொல்லலாம் என்று யோசித்துப் பேசினான். எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்து விட்டு மகேஷ் சொன்னான்.

"உனக்கு என்ன வேணும்? அவள் குடிப்பாளா மாட்டாளா, சிகரெட், ஆணுக்கு சம்மதிக்கிறவளா மறுக்கிறவளா..இதுதானே தெரியணும். லீவ் த மேட்டர் டு மீ. நாளை சாயந்திரம் அவளை அழைத்துக் கொண்டு வா, ஓ. கே...?" என்றான்.

மறுநாள் மாலை கான்ஃபரன்ஸ் முடிந்ததும் அறைக்கு வந்தான் அவன். மெதுவாக அந்தப் பார்ட்டியைப் பற்றிச் சொன்னான்.

"நீயும் வருகிறாயா நித்யா...?" என்று சாதாரணமாகக் கேட்கிற மாதிரி கேட்டான்.

"நானு...?" என்று தயங்கிப் பின் சொன்னாள்: "நான் எதற்கு ராம். நீங்கள் போய் விட்டு வாருங்களேன். நான் அறையிலேயே இருக்கிறேனே..." என்று அவனைப் பார்த்தாள்.

"அப்படியானால் நானும் போகவில்லை," என்று அவன் சொன்னதும் அவள் மென்மையாய்ச் சிரித்தாள்.

"சரி. வருகிறேன், கிளம்புங்கள்," என்றாள்.

முன்பு அவன் வாங்கிக் கொடுத்த வெள்ளை ஆர்கண்டியை உடுத்துக் கொண்டாள். சின்னச் சின்ன சிவப்பு ரோஜாப் பூக்கள், அதே வெள்ளையில் உயரக் கழுத்தில் ஜாக்கெட். காதில் சின்ன ஒற்றை முத்து. கழுத்திலும், கைகளிலும் எதுவுமில்லாமல் சிரித்துக் கொண்டே, 'போகலாமா...?' என்று அவள் வந்து நின்றபோது அயர்ந்து தான் போனான் அவன்.

இத்தனை நாட்களாகப் பார்க்கிற நித்யா இல்லை இவள் என்று தோன்றியது. புது அழகில், புது நித்யா

வாக, வெள்ளைச் சிரிப்பாய்ச் சிரித்துக் கொண்டு...

"யு லுக் வெரி சார்மிங் டுடே..."

"அப்படியா...?"—அதற்கும் அதே சிரிப்பு.

மகேஷ் வீட்டு வாசலில் காரை நிறுத்தி இறங்கினபோது மகேஷ்கூட அயர்ந்துதான் போனுன். 'இவளா? இவளையா? இந்த அழகையா...?'

அந்த வீட்டை, மொட்டை மாடியை, பஃபே டின்னருக்காக அடுக்கப் பட்டிருந்த உணவு வகைகளை, தட்டில் நீளநீள விஸ்கி பாட்டில்களை வைத்துக் கொண்டு போன பேரர்களை நுரை ததும்ப ஊற்றி ஐஸ் கட்டி போட்டு மெதுவாக நிதானமாக உறிஞ்சிக் கொண்டிருந்த ஆண்களை பெண்களை...

"மீட் மை பிரண்ட் மகேஷ். இவனும் நானும் பி. யு.சி. வரை ஒன்ருகப் படித்திருக்கிறோம். மகேஷ்—திஸ் ஈஸ் நித்யா. எனக்கு உதவியாக நர்ஸிங் ஹோமில் இருக்கிருள்."

"இவ்வளவு அழகாக ஒரு உதவியாளர் கிடைப்பாள் என்ருல் நானும் டாக்டருக்குப் படித்து ஒரு நர்ஸிங் ஹோம் கட்டியிருப்பேன் ராம்..." சொல்லிவிட்டுப் பெரிதாய்ச் சிரித்தான் மகேஷ். நித்யாவைக் கீழ்க் கண்ணுல் பார்த்தான். அவள் அவனைக் கவனிக்காத மாதிரி தூரப் பார்வையாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். அந்த இடத்தையும், மகேஷையும் அவளுக்குப் பிடிக்காமற் போயிற்று. கண்ணுடி டம்ளர்கள் மோதுகிற சத்தமும், நுனிநாக்கு ஆங்கிலமும், கீச்சுக் குரல் சிரிப்புகளும், சிகரெட் புகையும் இதெல்லாம் தனக்குக் கொஞ்சம்கூடப் பழக்கமில்லாத சூழ்நிலை என்று தோன்றியது. எழுந்து அந்த இடத்தை விட்டுப் போய் விட வேண்டும் போல் இருந்தது. தன்னை அங்கே அழைத்துக் கொண்டு வந்த ராம்குமாரின் மீது கோபம் வந்தது.

'ராம்...உங்களுக்கா இந்த நண்பர்கள்...? கண்ணியமாய், கம்பீரமாய், அதிர்ந்து ஒரு வார்த்தை பேசத் தெரியாத உங்களுக்கா...? இது என்ன முரண்பாடு ராம்...?'

அவள் பார்த்துக் கொண்டிருந்த போதே கோடி மேஜையிலிருந்து சர்தார்ஜி ஒருவன் எழுந்து வந்தான்.

"குட் ஈவினிங் யங் லேடி..." என்று முதுகை வளைத்துப் பேசினுன். "உங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்ருல் என்னுடன் டான்ஸ் ஆட வருகிறீர்களா...?"

மிரட்சியாய் அவனைப் பார்த்தாள் நித்யா.

டான்ஸ் ஆடுவதா...?

அந்த மிரளல் சர்தார்ஜிக்குப் புதிதாக இருந்திருக்க வேண்டும். அதை ரசித்துக் கொண்டே, ''வாட் டு யு ஸே யங் லேடி...?'' என்று மறுபடியும் கேட்டான்.

''ஐயம் ஸாரி...'' என்று மறுத்தாள் அவள். ''டான்ஸ் எல்லாம் எனக்கு ஆடத் தெரியாது.''

அந்த பதிலில் சர்தார்ஜியின் பார்வை சட்டென்று மங்கியது. உதட்டின் சிரிப்பு மறைந்தது. மனத்தின் ஏமாற்றம் முகத்தில் தெரிந்தது.

''மை பாட் லக்...'' என்று தோளைக் குலுக்கிக் கொண்டு போனான் அவன். அதுவரை அவளையே பார்த்துக் கொண்டிருந்த மகேஷ்—

''இவ்வளவு அழகான பெண்ணிற்கு டான்ஸ் ஆடத் தெரியாதது எத்தனை பெரிய வருத்தம்..'' என்றான். பின், ''பத்தே நாள். உன்னை எப்படி ஆட வைக்கிறேன் பார். என்னிடம் கற்றுக் கொள்கிறாயா நித்யா...'' என்று ஆர்வமாகக் கேட்டான்.

''நோ. தாங்க்ஸ். இப்போது நம்முடைய எரிகிற பிரசினை இந்த டான்ஸ் இல்லை...''

''நமக்கு இல்லை. ஆனால் அந்த சர்தார்ஜிக்கு அதுதான் பர்னிங் ப்ராப்ளம். நீ மறுத்தது...''

''அவருக்கு அது பர்னிங் ப்ராப்ளமோ இல்லையோ உங்களுக்குத்தான் பர்னிங் ப்ராப்ளமாகத் தெரிகிறது.''

அதைக் கேட்டு மீண்டும் பெரிதாகச் சிரித்தான் அவன்.

''யு ஆர் வெரி லக்கி ராம். உன்னுடைய ஸெகரெட்டரி வெறும் அழகி மட்டுமில்லை. நல்ல புத்திசாலியும் கூட.''

''தாங்க்ஸ் பார் யுவர் காம்ப்ளிமெண்ட்ஸ்.''

''ப்ளெஷர் ஈஸ் மைன். நான்தான் தாங்க்ஸ் சொல்ல வேண்டியவன்...''

அவர்கள் பேச்சை ஒரு புன்முறுவலோடு கவனித்துக் கொண்டிருந்த ராம்குமார் பேரர் ஒருவன் மேஜையின் அருகில் வந்து நின்றதும், ''எஸ்!'' என்று நிமிர்ந்து பார்த்தான்.

''இங்கே யார் சார் ராம்குமார்...?''

''ஏன், நான்தான்.''

''உங்களுக்கு ஒரு போன் வந்திருக்கிறது.''

''எனக்கா? யார் கூப்பிடுவது...?''

''யாரோ டாக்டர் அத்வானி—''

''டாக்டர் அத்வானியா!''—நாற்காலியைத் தள்ளி விட்டு எழுந்தான். ''ஒரு நிமிடம் நித்யா...'' என்று சொல்லி கீழே போனான்.

அவன் போனதும் மகேஷ் அவளை நிமிர்ந்து பார்த்தான். அந்த முகபாவம் மாறிப் போயிருந்தது. சிரிப்பும் அரட்டையும் போய்த் தீவிரமாய் இருந்தது. மெதுவான குரலில், ''நித்யா...'' என்று கூப்பிட்டான்.

என்ன என்கிறாற்போல் நிமிர்ந்து பார்த்தாள் அவள்.

''என்னை உனக்குப் பிடிக்கவில்லை இல்லை...?''

அதற்கு பதில் வரவில்லை அவளிடமிருந்து.

''நான் இப்படிக் குடிப்பதால்—இவர்களுடன் பழகுவதால் நிறையப் பெண்களுடன் சிநேகமாக இருப்பதால் என்னைத் தவறாக நினைக்கிறாய். இல்லை நித்யா?''

''நான் யார் உங்களைத் தவறாக நினைக்க? அப்படியே நினைத்தாலும் அது உங்களை எந்த விதத்தில் பாதிக்கப் போகிறது?''

''பாதிக்காமல் இருக்கலாம். ஆனால் உன் மனத்தில் நான் சரிந்து விழுவது என்னை மிகவும் கஷ்டப் படுத்தும்.''

''உங்களை ஏன் கஷ்டப்படுத்த வேண்டும்?''

''பிகாஸ் ஐ லைக் யு ஃபரம் தி வெரி மோமெண்ட் ஐ ஸா யு...''

அவள் அதிர்ந்து போன மாதிரி அவனைப் பார்த்தாள்.

''என்ன அப்படிப் பார்க்கிறாய்? உன்னை எனக்குப் பிடிக்கிறது என்றால் காதலிக்கிறேன் என்றா அர்த்தம்? ரப்பிஷ். ஏன் எல்லோரும் அதையே நினைத்துக் கொள்கிறீர்கள்? ஒருவனுக்கு ஒருத்தியைப் பிடித்தால் அது காதலாக மட்டும்தான் இருக்க வேண்டுமா? அதுதான் சாத்தியமா? ராம்குமாரைப் பிடிக்கிற மாதிரி உன்னையும் பிடிக்கக் கூடாதா?''

''மகேஷ்...!'' என்று முதல் கடவையாக அவனை வித்தியாசமாகப் பார்த்தாள்.

''எஸ்! ராம்குமார் மாதிரி நீயும் எனக்கு ஒரு நல்ல சிநேகிதி. அந்த நல்ல என்பதை ஏன் இப்படி அழுத்திச் சொல்கிறேன் தெரியுமா? இங்கு வந்ததிலிருந்து நீ எப்படி இருக்கிறாய் என்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். இந்த இடம் உனக்கு எப்படிப் பொருந்தாமல்

இருக்கிறது என்பதைக் கவனித்துக்கொண்டிருக்கிறேன். நீ மட்டுமில்லை. ராம்குமார் கூட இப்படித்தான். இதையெல்லாம் பார்த்தால் அவனும் இதே மாதிரிதான் பொருத்தமில்லாத இடத்திற்கு வந்து விட்ட தவிப்பில் இருப்பான். இன்று மட்டும் உனக்காக இதெல்லாம் சகஜம் என்கிற மாதிரி தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டு உட்கார்ந்திருக்கிறான்..."

"எனக்காகவா...? தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டா? நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை மகேஷ்."

"புரியும்படி சொல்கிறேன். ஆனால் இதற்காக நீ ராம்குமாரைத் தவறாக நினைக்கக் கூடாது. அவனிடம் கோபமோ வருத்தமோ படக் கூடாது..."

"கோபப்பட மாட்டேன். ஆனால் என்னை பாதிக்கக் கூடிய பட்சத்தில் வருத்தப் படமாட்டேன் என்று சொல்வதற்கில்லை...."

அவள் எழுந்தாள். கோபம். வருத்தம். வேதனை.

அவனை நிமிர்ந்து கூடப் பார்க்காமல் சரேலென்று வெளியில் வந்தாள். வேகமாகப் படிகளில் இறங்கி வராந்தாவைத் தாண்டிப் புல் தரையைக் கடந்து கேட்டை விட்டுப் போனபோது ராம்குமார் பின்னாலேயே காரை எடுத்துக் கொண்டு வந்தான். கேட்டிற்கு வெளியில் அவள் பக்கத்தில் நிறுத்தி முன் பக்கக் கதவைத் திறந்து விட்டான்.

"ஏறிக் கொள் நித்யா..."

"வேண்டாம் ராம். நானே போய்க் கொள்கிறேன். நீங்கள் உங்கள் வேலையை கவனியுங்கள்...."

"என்ன நித்யா இது...?"

அந்தக் கேள்வியில் சட்டென்று நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்தாள் அவள்.

"என்ன என்று என்னைக் கேட்கிறீர்களா ராம்?'

"——"

"நான் உங்களுக்கு என்ன தப்புப் பண்ணினேன். எதற்காக இப்படிச் செய்தீர்கள் ராம்? இந்த இடத்தில் இந்த மாதிரி நிலைமையில் ஏன் ராம்...வாட் ஈஸ் தட் யு வாண்ட் டு நோ?"

அதற்கும் அவனிடமிருந்து பதில் இல்லை.

"உங்களுக்கு என்னைப் பற்றி என்ன தெரிய

வேண்டும்? எது உங்கள் மனசை இப்படி உறுத்துகிறது? உங்கள் அண்ணு எழுதின கடிதமா? அதெல்லாம் நிஜமா என்பதா...? நான் குடிக்கிறேனு, ஆண்களுடன் பழகுகிறேனு அதுவும் நெருக்கமாக, தகாத விதத்தில்...? இதுதானே? இதை நீங்களாகவே சோதனை பண்ணிப் பார்த்திருக்கலாம். ஓட்டல் அறைக்கே விஸ்கி வரவழைத்திருக்கலாம். குடிக்கச் சொல்லி வற்புறுத்தி இருக்கலாம். பின் சுலபமாகப் படுக்கைக்குக் கூப்பிட்டிருக்கலாம். நான் வருகிறேனு என்று பார்த்திருக்—''

''வில் யு ப்ளீஸ் ஸ்டாப் இட்!''—அவன் முகம் சிவந்து போயிற்று. உடம்பின் ரத்தம் முழுவதும் தலைக்கு ஏறின மாதிரி தோன்றியது. ஸ்டியரிங்கைப் பிடித்திருந்த கை லேசாக நடுங்கியது.

''கேட்கிற உங்களுக்கே இப்படி இருந்தால் எனக்கு? ஏன் ராம் இதற்கா யாருடைய உதவியையோ நாடினீர்கள்? அதுவும் அந்த மகேஷின் உதவியையா? மை குட்நெஸ். நானு ராம். என்னுடனு? என்னை எப்படி இப்படியெல்லாம் நினைக்கத் தோன்றியது ... ம்...?'' சட்டென்று அவள் அழுகையில் உடைந்ததும் தவித்துப் போனுன் அவன்.

''ப்ளீஸ் நித்யா. தயவு செய்து காரில் ஏறிக் கொள். தெருவில் போகிறவர்கள் எல்லாம் நம்மையே பார்க்கிறுர்கள் பார்...'' என்று கெஞ்சினுன். அவள் முகத்தைத் துடைத்துக் கொண்டு காரில் ஏறி உட்கார்ந்தாள். அவன் காரைக் கிளப்பின போது மெலிசாக விசும்பல் சத்தம் மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது. அது மனத்தை என்னவோ பண்ண அவன் நேராக ஓட்டலுக்குப் போகாமல் கப்பன் பார்க் பக்கம் திரும்பினுன். சிமெண்ட் தரையின் ஓரமாக நிறுத்திவிட்டு அவளைப் பார்க்கிற மாதிரி திரும்பி உட்கார்ந்தான். ஒரு வினுடி விசும்புகிற அந்த முகத்தையே பார்த்தான். குழந்தையின் முகம் மாதிரி என்ன முகம் இவளுக்கு. இவளையா நான் இப்படியெல்லாம்..' மை குட்நெஸ்...எத்தனை பெரிய தப்பாகப் பண்ணியிருக்கிறேன்...எப்படிப் பண்ணினேன். மன்னிப்பாளா இவள். மறந்து போவாளா...? நித்யா, ப்ளீஸ்... தயவு செய்து இதை மன்னித்து விடேன். மறந்து போய் விடேன். இந்த மாதிரி ஒரு நிகழ்ச்சி நடக்கவே இல்லை என்று நினைத்துக் கொள்ளேன். முடியுமா நித்யா? முடியுமா உன்னுல்...?

அதற்கு மேல் தாங்க முடியாதவனுக சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான். ஆழமாய்ப்

புகையை இதயம் முழுவதும் நிரப்பிக் கொண்டபோது மனத்தின் பாரம் சற்று குறைந்த மாதிரி தோன்றியது. அந்தப் படபடப்பும் வேகமும் அடங்கி மெல்ல அவளை நிமிர்ந்து பார்த்தான். அவள் அவனைப் பார்க்காமல் தூரத்து இருட்டை வெறித்துக் கொண்டிருந்தாள். அந்தப் பார்வையில் தெரிந்த வருத்தமும், சோகமும்...

சட்டென்று சிகரெட்டைத் தூக்கிப் போட்டு விட்டு அவள் கையைப் பற்றினான். அவள் அதைத் தடுக்கவில்லை. விடுவித்துக் கொள்ள முயற்சி செய்யவில்லை. முகத்தின் பாவம் மாறாமல் அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

அவனும் ஒரு வினாடி எதுவும் பேசாமல் வெள்ளை வெளேரென்று நீளநீளமாய் இருந்த அந்த விரல்களையே பார்த்துக் கொண்டிருந்தான். மெதுவாய் ஒரு தரம் தடவிக் கொடுத்தான். பின் நிமிர்ந்து அவள் முகத்தைப் பார்த்த போது குரல் கரகரவென்று வந்தது.

"ஐயம் ஸாரி நித்யா. ரியலி வெரி ஸாரி. ஏதோ ஒரு வேகத்தில் உன்னைப் பற்றின உண்மையைத் தெரிந்து கொண்டு விட வேண்டும் என்ற ஆர்வத்தில் நான் அந்த மாதிரி நடந்து கொண்டுவிட்டேன். தயவு செய்து என்னை மன்னித்துவிடு நித்யா. இதை மறந்து விடு..."

"மறப்பதா...? இதையா?" என்று கேட்டு விட்டு வருத்தம் தோயச் சிரித்தாள் அவள். "அது அவ்வளவு சுலபம் என்று நினைக்கிறீர்கள்?"

அவன் பதில் சொல்லாமல் அடிபட்ட பார்வையாக அவளைப் பார்த்தான்.

"என்ன ராம் அப்படிப் பார்க்கிறீர்கள்? ஆனாலும் நான் முயற்சி பண்ணுகிறேன் ராம்..."

"வெறும் முயற்சி மட்டும் போதாது நித்யா. எப்போதும் எந்தச் சந்தர்ப்பத்திலும் இதை நினைப்பதில்லை என்று எனக்குச் சத்தியம் பண்ணிக் கொடு நித்யா..."

"சத்தியம் பண்ணிக் கொடுப்பதா...? வேண்டாம் ராம்...ப்ளீஸ்..."

"ஏன் நித்யா...?"

"நினைவுகள் எப்போதுமே நமக்குள் கட்டுப் படுவதில்லை ராம். நம்மைத்தான் அவைகள் கட்டுப் படுத்தும்."

"அதனால்தான் சொல்கிறேன். இந்த நினைவு எப்போதும் உன்னைக் கட்டுப் படுத்தக் கூடாது என்பதற்காகத் தான் கேட்கிறேன்."

"இதை நானாக நினைவு படுத்திக் கொள்வேன் என்று நினைக்கிறீர்கள்? நோ. நெவர்..."

அழுத்தமாக வந்த அந்த பதிலில் அவன் தலை குனிந்து போயிற்று. குரல் நெகிழ்ந்து, "தாங்க் யு நித்யா.." என்றபோது வார்த்தை வராமல் தடுமாறியது. ஒரு விநாடி அப்படித் தயங்கிப் பின் சரேலென்று அவளை இழுத்துத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான். "நித்யா..நித்யா ஐ லவ் யு..." என்று தழுதழுத்த குரலில் அந்த முகத்தை நிமிர்த்தினபோது சட்டென்று விலகினாள் அவள். தன் தோளில் கிடந்த அவன் கையையும் விலக்கினாள்.

"நோ ராம். ப்ளீஸ் நோ...."

"ஒய் நித்யா... டோண்ட் யு லவ் மீ?"

அவள் பதில் சொல்லாமல் மௌனமாய் இருந்தாள். ஆனால் அவன் விடவில்லை.

"சொல்லு நித்யா. நீ என்னை நேசிக்கவில்லை? நான் உன் மீது வைத்திருக்கிற அதே அளவு பிரியம் உனக்கு என் மீது இல்லை...?"

"ரா...ம்..."

"இனிமேலும் என்னால் இப்படித் தவிக்க முடியாது நித்யா. நெருப்பை விழுங்கின மாதிரி அவஸ்தைப் பட முடியாது. உள்ளுக்குள் பற்றி எரிகிறபோது வெளிப் பார்வைக்கு நிதானமாய் அமைதியாய் நீரோ மன்னன் மாதிரி பிடில் வாசிக்க முடியாது. இனிமேல் அப்படி இருப்பது எனக்கு சாத்தியமில்லை. ஐ லவ் யு நித்யா. லவ் யு ஸோ மச். நீ எனக்கு வேண்டும். இன்றைக்கே இப்போதே வேண்டும்..."

"என்ன ராம் இது?"

"என்ன ராம் என்றால் என்ன சொல்ல முடியும்? இன்னும் எத்தனை நாளைக்கு இதை மறைத்து வைக்க முடியும்? எதற்காக மறைத்து வைக்க வேண்டும்? சொல்லு நித்யா. டோண்ட் யு லவ் மீ ஆஸ் ஐ லவ் யு? டோண்ட் யு நீட் மீ ஆஸ் ஐ நீட் யு...?"

"என் மனசில் இருப்பது எதுவாக இருந்தாலும் ராம்... முதலில் என்னைப் பற்றி நான் யார் என்பது பற்றி உங்களுக்குத் தெரிய வேண்டும் ராம்..."

"வேண்டாம் நித்யா. எதுவும் எனக்குத் தெரிய வேண்டாம். தெரிந்து கொள்ள வேண்டுமென்று இத்தனை நாள் அலைந்த அலைச்சல் போதும். இனிமேலும் என்னால் அலைய முடியாது. இப்போது என் எதிரில் இருக்கிற

இந்த நித்யாவை எனக்குத் தெரிகிற நித்யாவை நான் அப்படியே ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.''

சட்டென்று உதடுகள் லேசாய் நடுங்க அவனை நிமிர்ந்து பார்த்தாள் அவள்.

''நிஜமாகவா ராம் சொல்கிறீர்கள்? நான் கணேஷின் மனைவியாக, நீங்கள் நினைக்கிற மாதிரி. கணேஷ் எழுதியிருந்த மாதிரி இருந்திருந்தாலும் பரவாயில்லை என்று நினைக்கிறீர்களா ராம்...?''

''எஸ் நித்யா. நீ யாராக இருந்தாலும் அது என்னை மாற்றப் போவதில்லை. கணேஷின் மனைவி என்றாலும் கணேஷ் இப்போது உயிரோடு இல்லை. நீ அப்படிப் பட்டவள் தான் என்றாலும், இப்போது அப்படி இல்லை. இந்த நித்யா தான் எனக்கு முக்கியமே தவிர நீயே மறந்து போன அந்தப் பழைய நித்யா இல்லை.''

''வேண்டாம் ராம்...'' என்றபோது அவள் குரல் லேசாக நடுங்கியது. ''தயவு செய்து வேண்டாம். உங்கள் அடி மனசில் ஆழமாய்ப் பதிந்து போயிருக்கிற அந்த உறுத்தல் மறைகிறவரை நான் யார் என்பது தெரிகிற வரை நாம் இப்படியே—இதே மாதிரி நண்பர்களாகவே இருப்போம் ராம்.''

''நண்பர்களாகவா..? இன்னும் நீ என்னை நம்பவில்லையா நித்யா. நடந்ததை மறக்கப் போவதே இல்லையா...?''

''இதற்கு உங்களை நம்பவில்லை என்று அர்த்தமில்லை ராம். நடந்ததை நினைத்துக் கொண்டே இருக்கிறேன் என்பதில்லை. நான் யார் என்று தெரிய வேண்டியது எனக்கே அவசியமாகிறது. என்னைப் பற்றிப் புரிந்து கொள்ள வேண்டியதாகிறது. மனசில் இத்தனை கேள்விகளையும் சந்தேகங்களையும் வைத்துக் கொண்டு எப்படி என்னால் நிம்மதியாக இருக்க முடியும்? சந்தோஷமாக இருக்க முடியும்? உங்களையும் எப்படி சந்தோஷப் படுத்த முடியும்? அதனால் தான் சொல்கிறேன். 'லெட் அஸ் வெயிட் டில் ஐ நோ ஹூ ஐயாம்...' ''

''ஓகே, நித்யா. நீ யாராக இருந்தாலும் அது தெரிய எத்தனை வருஷமானாலும் உனக்காக நான் காத்துக் கொண்டிருப்பேன்...''

அந்த ஒரு வார்த்தையில் வாழ்ந்து முடிந்த திருப்தி ஏற்பட்டது அவளுக்கு.

# 13

டாக்டர் கல்யாணசுந்தரத்தைப் பார்த்துவிட்டுத் திரும்பியபோது நித்யாவுக்கு உடம்பும், மனமும் சோர்ந்து போய்க் கிடந்தன. கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே வந்தபோது புல்தரையின் கூடை நாற்காலியில் பிரகாஷ் உட்கார்ந்து கொண்டிருப்பது தெரிந்தது. அவளைப் பார்த்ததும் கையிலிருந்த புஸ்தகத்தை மூடிவைத்து விட்டு 'ஹலோ' சொன்னன். புன்சிரிப்பாகச் சிரித்துக் கொண்டே, "எங்கே போய் விட்டு வருகிறாய் நித்யா?" என்று கேட்டான்.

"டாக்டர் விஜயகுமார் வீட்டிற்கு."

"என்ன சொன்னார்?"

"புதிதாய் என்ன சொல்கிறார். சொல்ல என்ன இருக்கிறது?"

அந்தக் குரலும் அதின் வேதனையும் அவன் மனத்தைத் தொட்டன. ஒரு விநாடி அந்த முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். அந்த முகம் மிகவும் மாறிப் போய் விட்டதாகத் தோன்றியது. கண்களில் பளபளப்பு குறைந்து கன்னங்களின் செழுமை மங்கி—நிறம் கூட லேசாகக் கறுத்து...எதற்காக இவள் இப்படித் தன்னை வருத்திக் கொள்கிறாள்...?

"உன்னிடம் ஒன்று கேட்கலாமா நித்யா...?"—தயங்கிக் கொண்டே கேட்டான் அவன்.

'என்ன கேட்கப் போகிறான் இவன்' என்ற பயத்தோடு, "கேளுங்கள்," என்றாள்.

"ஏன் இப்படி இளைத்துக் கறுத்துப் போய் விட்டாய்? என்ன கவலை உனக்கு?"

"எனக்கென்ன கவலை பிரகாஷ்?" என்று சிரிக்க முயற்சி பண்ணினாள் அவள்.

"உன் சிரிப்பை விட அழுகையே தேவலாம் போலிருக்கிறது. என்ன கஷ்டம் என்று சொல்லக் கூடாதா நித்யா? என்னை அவ்வளவு அந்நியமாகவா நினைக்கிறாய்?"

அரை விநாடி பேசாமல் இருந்து பின் சொன்னாள்.

"நான் யார் என்பதே தெரியாமல் மறந்து போவதை விடப் பெரிய கஷ்டம் என்ன இருக்க முடியும் சொல்லுங்கள்...?"

அதைக் கேட்டுப் புன்சிரிப்பாகச் சிரித்தான் அவன்.

"அது ஒரு கஷ்டமா நித்யா. என்னைப் பொறுத்த

என்னால் அப்படி மறக்க முடியுமானால் எவ்வளவு நிம்மதியாக இருக்கும்.''

''நிம்மதியா...? அதுவா நிம்மதி...? அப்படி மறந்து போகாது என்கிற திடமான நம்பிக்கையில் நீங்கள் இப்படிப் பேசுகிறீர்கள்...''

''இல்லை நித்யா. நிஜமாகத்தான் சொல்கிறேன். என்னை நானே மறந்து போகிற பட்சத்தில் உன்னையும் என்னால் மறக்க முடியும். இல்லையா?''

''பிரகாஷ்...!''

''என்ன அப்படிப் பார்க்கிறாய்? உன்னை நினைக்கிற தகுதி இல்லாமல் மறக்கவும் முடியாமல் இந்த மாதிரி அவஸ்தைப் பட வேண்டாமே நித்யா...''

''பிரகாஷ்...நீங்கள் இப்படி நினைக்கிற மாதிரி நான் எப்போதாவது நடந்து கொண்டிருக்கிறேனா சொல்லுங்கள்.''

''இல்லை நித்யா. அப்படியெல்லாம் தவறாக உன்னால் நடக்கவே முடியாது. அது புரிந்துதானே இந்த மனசு இப்படியெல்லாம் அலைபாய்கிறது? உன் மனசில் நான் இல்லை, ராம்குமார்தான் இருக்கிறான் என்பது தெரிந்தும்.''

''அது உங்களுக்கு எப்படித் தெரிந்தது பிரகாஷ்?''

''ஏன் நித்யா...இதைத் தெரிந்து கொள்ள தனியாக ஏதாவது திறமை வேண்டுமா என்ன? உன் கண்களையும் முகத்தையும் பார்த்தால் போதாதா?''

அரைவினாடி யோசித்தாள் அவள்.

பின்—

''என் பிரகாஷ். இந்தக் கண்ணிலிருந்தும் முகத்திலிருந்து இன்னும் ஏதாவது தெரிகிறதா?''

''எதற்குக் கேட்கிறாய்?''

''இல்லை...இந்த முகத்தைப் பார்த்தால் குடிக்கிற முகமாக எல்லா ஆண்களையும் கவருகிற முகமாக தெரிகிறதா?''

''என்ன நித்யா இது...?''

''என்ன என்றால்... தெரிகிறதா சொல்லுங்களேன்.''

''யார் அப்படிச் சொன்னது?''

''ராம்குமார்.''

''என்ன?''

''ஆமாம் கணேஷ் எழுதின கடிதங்கள் என்னைப் பற்றி அதைத்தான் சொல்கின்றன!''

“கணேஷின் கடிதங்களா? நிஜமாகவா? நீ படித்தாயா அவைகளை...?”

“இல்லை. ராம்குமார் சொன்னார். அவர் பொய் சொல்ல வேண்டிய அவசியமில்லை...”

“உண்மைதான். ஆனால் கணேஷ் பொய் சொல்லியிருக்கலாமே...”

“கணேஷ் பொய் சொல்லி இருக்கலாமா? எதற்காக...?”

“பணத்திற்காக.”

“பணத்திற்காகவா?”

“ஆமாம் நித்யா. அவனோடு வாழ்ந்த நினைவே இல்லாத உனக்கு அவனுக்குப் பணத்தின் மீது இருந்த ஆசை எங்கே நினைவிருக்கப் போகிறது?”

“பணத்தின் மீது ஆசையா...?”

“ம்...உன்னைப் பற்றித் தப்பாக அந்த மாதிரி நிறைய எழுதி ராம்குமாரின் மனசில் ஒரு பரிதாபத்தை உண்டு பண்ணி உனக்காகப் பணம் கேட்கிற மாதிரி கேட்டு நிறைய வரவழைத்து...”

“அவர் அப்படிப்பட்டவரா...?”

“யு டோண்ட் நோ ஹிம். அவன் ராம்குமார் மாதிரி இல்லை. நல்லவன் இல்லை. பணத்திற்காக எதையும் செய்யக் கூடியவன். அப்படிப்பட்டவனை நீ காதலித்துக் கல்யாணமும் பண்ணிக் கொண்டு..பொருந்தவில்லையே நித்யா! என்னால் நம்ப முடியவில்லையே...”

“என்னாலும்தான் நம்ப முடியவில்லை...”

“எதை?”

“நான் கணேஷ்குமாரின் மனைவி என்பதை...”

“உனக்கும் அவனுக்கும் அடிப்படை குணத்திலேயே எத்தனை வித்தியாசங்கள்! எங்கோ ஏதோ தப்பு நடந்திருக்கிறது. அது எங்கே? என்ன தப்பு? எப்படி நடந்தது...? ம்...?”

“இதைத்தான் நானும் எனக்குள் யோசித்துப் பார்க்கிறேன். தெரியவில்லை. தயவு செய்து எனக்கு இந்த ஒரு உதவியை மட்டும் செய்யுங்களேன். நான் யார் என்பதைக் கண்டுபிடித்துச் சொல்லுங்களேன். ப்ளீஸ்.”

“இதற்காக நீ என்னைக் கெஞ்ச வேண்டுமா நித்யா. இது உன்னை சந்தோஷப் படுத்தும் என்றால் இதற்காக எதையும் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறேன்.”

## 14

அடுத்த நாள் காலை ஒன்பது மணிக்கெல்லாம் ஏர்லைன்ஸ் ஆபீசுக்குப் போனார்கள்.

பிரகாஷ் தனக்குத் தெரிந்த ஆபீஸர் ஒருவரைச் சந்தித்தான். அவர் மிகுந்த அனுதாபத்தோடு கேட்டுக் கொண்டார். இதற்கு முன்னால் இதே விஷயமாய் ராம் குமாரும் தன்னைச் சந்தித்ததைச் சொன்னார்.

“பட், இதற்கு என்னால் என்ன செய்ய முடியும் என்று தெரியவில்லையே பிரகாஷ். அந்த விமான விபத்து பற்றின என்கொயரி எல்லாம் முடிந்து பைலைக் கூட மூடி வைத்தாகி விட்டது. நஷ்டஈடு பணமும் கொடுக்கப்பட்டாகி விட்டது. உங்களுடைய பணம் உங்களுக்குக் கிடைக்கவில்லையா மிஸ்—மிஸஸ் நித்யா...?”

“ஐயம் ஸாரி மிஸ்டர் மல்ஹோத்ரா. எங்களுடைய பிரச்னை அந்தப் பணமில்லை. அதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். எங்களை இன்னும் கொஞ்சம் அனுதாபத்தோடு அணுக வேண்டும். இவளுக்குத் தான் யார் என்பது ஞாபகத்திற்கு வராமற் போனால் எதிர்காலமே வெறுமையாய் வீணாய்ப் போய்விடும்...”

“ஐ நோ. பட் என்ன செய்வது என்று.. ஜஸ்ட் எ மினிட். பாஸஞ்சர்ஸ் லிஸ்ட்டை வெரிஃபை பண்ணினால் தெரியும். கொஞ்சம் இருக்கிறீர்களா...”

“ஓ. எஸ். எவ்வளவு நேரமானாலும் காத்துக் கொண்டிருக்கத் தயார்...”

அந்தத் துடிப்பைப் பார்த்து மனசுக்குள் சிரித்துக் கொண்டார் அவர். டெலிபோனில் தாமஸ் என்பவரைக் கூப்பிட்டுப் பேசினார். அந்த தாமஸ் கிருஷ்ணமூர்த்தி என்பவரை கைகாட்ட மறுபடியும் கிருஷ்ணமூர்த்தியைக் கூப்பிட்டு விக்டர், ராவ், விஸ்வநாதன், நம்பியார் என்று நிறைய பெயர்கள் அடிபட்டு...அடுத்த டெலிபோன் விடாமல் அலறி மல்ஹோத்ரா மூன்றாவது டெலிபோனை எடுக்க முடியாமல் தடுமாறி...

அடுத்த ஒரு மணி நேரத்தில் பயணிகள் பட்டியல் வந்து சேர்ந்தது.

பம்பாயிலிருந்து விமானத்தில் கிளம்பினவர்களின் பெயர்கள் வரிசையாக வாசிக்கப்பட்டு—பதினைந்தாவது

பெயராக மிஸ் நித்யா—

"எஸ். அதுதான்...அந்தப் பெயர்தான்!" என்று உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு சரேலென்று எழுந்தான் பிரகாஷ்...

"ஜஸ்ட் எ மினிட்," என்று தன் அடர்த்தியான புருவங்கள் சுருங்க அவனைப் பார்த்தார் மல்ஹோத்ரா. பின் நிதானமாக தன் நீளமான சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டார்.

"இங்கே மிஸ் நித்யா என்று போட்டிருக்கிறது பார்த்தீர்களா...?" என்று சந்தேகமாகக் கேட்டார்.

"எஸ்..." என்று பிரகாஷின் புருவங்களும் சுருங்கின. சட்டென்று திரும்பி நித்யாவைப் பார்த்தான். மிஸ் நித்யா...இவள் கணேஷின் மனைவி நித்யா இல்லை. மிஸ் நித்யா. இது தெரிந்தால் ராம்குமார் எவ்வளவு சந்தோஷப் படுவான். ராம்...ராம்..நீ சந்தேகப் பட்ட நித்யா இவள் இல்லை. உன் அண்ணுவின் மனைவி இல்லை. ஷி ஈஸ்... ஷி ஈஸ்—

"இதோ பாருங்கள் பிரகாஷ்!" என்று பத்துப் பெயர்கள் தள்ளி இருந்த இன்னொரு பெயரைக் காட்டினார் மல்ஹோத்ரா.

மிஸஸ் நித்யா கணேஷ்குமார்!

சட்டென்று முகம் வாட மடமடவென்று உள்ளுக்குள் கட்டின கற்பனைகள் சரிய—நிஜம்! இதுதான் நிஜம். இதிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது. விலகிப் போய் விட முடியாது. இவள் கணேஷின் மனைவிதான். ஐயம் ஸாரி ராம். ஸாரி நித்யா... என்று உதட்டைக் கடித்துக் கொண்டான். அதைப் பார்த்ததும் நித்யாவின் தலை குனிந்து கண்களில் நீர் கட்டி, பேச்சு வராமல், மனசை பாரமாக அழுத்த—

"ஸோ—இந்த நித்யா நான்தான்?" என்றாள்.

மல்ஹோத்ரா பேசாமல் இருந்தார். ஒரு விநாடிக்குப் பின் பிரகாஷ் கேட்டான்.

"அந்த நித்யா...மிஸ் நித்யா என்ன ஆனார்கள் தெரியுமா சார்..."

"ஐ வில் டெல் யு..." என்று ரிஸீவரை எடுத்தார். பத்து நிமிஷங்களுக்குப் பின் டெலிபோனில் ரிஸீவரை வைத்துக் கொண்டே—

"ஷி ஈஸ் நோ மோர். விபத்தில் இறந்து போனவர்களில் அவர் ஒருவர்."

அதற்கு மேல் கேட்க ஒன்றும் இல்லாமற் போகவே ''தாங்க் யு சார்.'' என்று எழுந்து கொண்டான் பிரகாஷ்.

''வெரி கைண்ட் ஆஃப் யு சார். வேலை நேரத்தில் உங்களுக்கு நிறைய தொந்தரவு கொடுத்துவிட்டோம்.''

''இதில் என்ன தொந்தரவு பிரகாஷ். ஆனால் என்னால்தான் அதிகம் உதவ முடியவில்லை...''

''ஓ...அதற்கு நீங்கள் என்ன செய்ய முடியும்?'' என்று கைகுட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டே, ''வரட்டுமா?'' என்று கேட்டான்.

''ஓ. கே. ஐ விஷ் யு குட் லக் யங் லேடி...' என்று நித்யாவைச் சிரித்துக் கொண்டே பார்த்தார் மல்ஹோத்ரா.

''தாங்க் யு. இன்னும் ஒரே ஒரு உதவி கேட்கலாமா சார்?'' என்று தயங்கினாள் அவள்.

''பை ஆல் மீன்ஸ். எந்த வழியிலாவது உங்களுக்கு உதவ முடியுமானால் நான் காத்துக் கொண்டிருக்கிறேன்.''

''இந்தப் பிரயாணிகளின் பட்டியலில் அட்ரஸ் டெலிபோன் நம்பர் ஏதாவது இருக்கிறதா, பார்க்க முடியுமா?''

மல்ஹோட்ராவின் கண்கள் பளிச்சிட்டன. என்ன கூர்மையான அறிவு இந்தப் பெண்ணிற்கு என்று நினைத்துக் கொண்டார். இதுவரை ராம்குமார். இதோ இந்த பிரகாஷ். நான் எத்தனை பேர் இதற்காக யோசிக்கிறோம். இந்த டெலிபோன் நம்பர் விஷயம் ஏன் நினைவில் தட்டுப்படவில்லை...?

''தட்ஸ் எ குட் க்வெஸ்சன். உட்காருங்கள். இரண்டு நித்யாக்களைப் பற்றி எங்களிடம் இருக்கிற விவரங்களைத் தருகிறேன்.''

பத்து நிமிடங்களில் சுத்தமாக டைப் அடிக்கப்பட்டு விவரங்கள் வந்து சேர்ந்தன.

மிஸ் நித்யா; டிக்கெட் நம்பர் ஏ—15,
பம்பாய் விமான நிலையம்.
போய்ச் சேருகிற இடம்—சென்னை விமான நிலையம்.
டிராவல் ஏஜென்ஸி—மகாலக்ஷ்மி.
லோகல் அட்ரஸ்: 7பி. 'ஏஞ்ஜில்'
5...க்ராஸ் தெரு, மல்பார் ஹில்ஸ்

பம்பாய்.
டெலிபோன்: 299266.
வயது: 26.
மிஸஸ் நித்யா கணேஷ் குமார்: டிக்கெட் சி—42.
பம்பாய் விமான நிலையம்,
போய்ச் சேருகிற இடம் சென்னை.
விமான நிலையம்.
டிராவல் ஏஜென்ஸி—நில்.
லோகல் அட்ரெஸ்:
6612, சிவாஜி நகர், ரத்னகிரி.
மகாராஷ்ட்ரா ஸ்டேட்.
டெலிபோன்: 2127
வயது: 25.

"போதுமா...?"

"ஓ. மோர் தென் இனஃப் தாங்க்யூ மிஸ்டர் மல்ஹோத்ரா. தாங்க் யூ..."

வெளியில் வந்து ஸ்கூட்டரில் ஏறினபோது மனத்தில் கொஞ்சம் பனிச்சிட்டது.

## 15

ராம்குமாரின் நர்ஸிங் ஹோம் வாசலில் ஸ்கூட்டரை நிறுத்தினான் பிரகாஷ்.

"வா நித்யா..." என்று உள்ளே போனான்.

"ஹாய்..." சொன்ன ஷீலாவை கவனிக்காமல் அவசரமாக ராம்குமாரின் அறைக்கதவைத் தள்ளினான்-ஏர்கண்டிஷண்ட் குளிர்ச்சியில் உடம்பு சட்டென்று சில்லிட உள்ளே நுழைந்தான்.

"என்ன பிரகாஷ் அபூர்வமாக நர்ஸிங் ஹோம் பக்கம்—" என்று ஆரம்பித்த ராம்குமார் பின்னால் வந்த நித்யாவைப் பார்த்ததும் சட்டென்று நிறுத்தினான்.

"என்ன நித்யா...எங்கே போய்விட்டு வருகிறீர்கள் இரண்டு பேரும்?"

"சொல்கிறேன். முதலில் உன் காண்டீனிலிருந்து சூடாக இரண்டு கப் காப்பி கொண்டு வரச் சொல்."

ராம்குமார் இண்டர்காமில் ஷீலாவைக் கூப்பிட்டுக் காப்பி அனுப்பச் சொன்னான். பின் பிரகாஷைப் பார்த்து, "சொல்லு..." என்று நாற்காலியில் நன்றாகச் சரிந்து கொண்டான்.

"நாங்கள் இப்போது எங்கிருந்து வருகிறோம் தெரியுமா...?"

"எங்கிருந்து...?"

"ஏர்லைன்ஸ் ஆபீஸிலிருந்து."

"ஏர்லைன்ஸ் ஆபீஸா...? என்ன விஷயம்?..."

"மிஸ்டர் மல்ஹோத்ராவைப் பார்த்து விசாரித்துக் கொண்டு வருகிறோம்."

"நான் ஏற்கெனவே பார்த்தாகி விட்டது பிரகாஷ். ஒரு பலனும் இல்லை..."

"அப்படியா...? இப்போது நான் பார்த்ததில் பலன் இருக்கிறதே..."

"ஈஸிட்!"—கண்கள் பளிச்சிட சரேலென்று நிமிர்ந்தான் ராம்குமார். "சீக்கிரம் சொல்லு பிரகாஷ்..."

"நீ மல்ஹோத்ராவைச் சந்தித்தபோது பயணிகளின் பட்டியலைக் காட்டச் சொல்லிப் பார்த்தாயா?"

"நான் பார்க்கவில்லை. ஆனால் மல்ஹோத்ராவே பார்த்துச் சொன்னார்."

"என்ன சொன்னார்?"

"பட்டியலில் நித்யாவின் பெயர் இருந்ததைச் சொன்னார்."

"எந்த நித்யா...? மிஸ் ஆர் மிஸஸ்?"

"வாட் டு யு மீன்...அவர் ஒரே ஒரு நித்யாதான் என்று—"

"நோ. இரண்டு நித்யாக்கள் அன்று பயணம் செய்திருக்கிறார்கள். ஒன்று கணேஷின் மனைவி. மற்றொன்று மிஸ் நித்யா. இருபத்தியாறு வயசு."

"ஈஸிட்...! வாட் ஹாப்பண்ட் டு தி அதர் நித்யா...?"

"விபத்தில் இறந்து போய் விட்டாள்."

ராம்குமார் அரைவினாடி பேசாமல் இருந்தான். பின்—

"இவள் எந்த நித்யா பிரகாஷ்...?" என்று கேட்டான்.

"மிஸஸ் நித்யா கணேஷ்குமார் என்று அவர்கள்

சொல்கிறார்கள். அவர்களின் ரெகார்டுகள் சொல்கின்றன...''

''நீ என்ன சொல்கிறாய் பிரகாஷ்? என்ன நினைக்கிறாய்...?''

''நாம் நமக்குப் பிடித்த மாதிரி நம் மனசு எதிர்பார்க்கிற மாதிரித்தான் நினைப்போம். சாத்திய அசாத்தியங்களை மறந்து போவோம்.''

''இப்போது எது சாத்தியம்—எது அசாத்தியம் என்று தோன்றுகிறது?''

''எதுவும் சாத்தியமாக இருக்கலாம். அதனால்தான் இரண்டு நித்யாக்களின் அட்ரஸையும் டெலிபோன் நம்பரையும் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன். லெட் அஸ் ட்ரை. கடைசி வரை முயற்சி பண்ணுவோம். முடிவு எப்படி இருந்தாலும் அமைதியாய் நிதானமாய் ஏற்றுக் கொள்வோம். என்ன?''

ராம்குமார் பதில் சொல்லாமல் விலாசம் எழுதப் பட்டிருந்த அந்தக் காகிதத்தை வாங்கிப் பார்த்தான். பின் ஷீலாவை உள்ளே கூப்பிட்டான்.

''உடனே ரத்னகிரிக்கு ஒரு கால் புக் பண்ணு ஷீலா. வெயிட்டிங் காலாக இருந்தாலும் பரவாயில்லை. புக்பண்ணிவிட்டு பம்பாய் எஸ். டி. டிக்கு இந்த நம்பருக்கு ட்ரை பண்ணு. எந்த லைன் கிடைத்தாலும் உடனடியாக என்னைக் கூப்பிடு.''

அடுத்த அரைமணி நேரம் அவர்கள் மனசுக்குள் பரபரத்து வெளிப்பார்வைக்கு அமைதியாக இருந்தார்கள். வெறும் உதட்டுப் பேச்சாகப் பேசினார்கள். ருசி தெரியாமல் காப்பி குடித்தார்கள். நிறைய நேரத்தை மௌனமாகப் போக்கினார்கள். கடைசியில் ஷீலா கூப்பிட்டதும்—ரத்னகிரி காலை கனெக்ஷன் கொடுத்ததும் ராம்குமாரின் இதயம் கால் வினாடி துடிப்பதை நிறுத்திப் பின் தொடர்ந்தது.

மறு பக்கம் இந்தியில் பேசினார்கள். ரிஸீவரை சட்டென்று மூடிக் கொண்டு, ''உனக்கு இந்தி தெரியுமா?'' என்று நித்யாவைக் கேட்டான். தெரியும் என்று தலையாட்டினதும், ''நீயே கேள்,'' என்று ரிஸீவரைக் கொடுத்தான். பின் அவளையே பார்த்தபடி பேசுவதைப் புரிந்து கொள்ள முயற்சி செய்தபடி உட்கார்ந்திருந்தான்.

''கோன் பாத் கர்தா ஹை...?

''—''

''அச்சா, மிஸஸ் சித்தார்த்ஜி... அங்கே நித்யா கணேஷ்குமார் இருக்கிறார்களா...?''

"——"

"இல்லையா, அந்தப் பெயரில் யாருமே இல்லையா?"

"——"

"அது 6612 சிவாஜிநகர், ரத்னகிரிதானே?"

"——"

"அதுதான். அதே அட்ரஸ்தான். அங்கே மிஸஸ் நித்யா கணேஷ்குமார் என்று ஒரு டமிலியன்..."

"——"

"அப்படியா? நீங்கள் புதிதாகக் குடி வந்திருக்கிறீர்களா உங்களுக்கு ஒன்றும் தெரியாதா? ஓ. கே. தேங்க்யு, மிஸஸ் சித்தார்த். தேங்க்யு வெரி மச். எஸ். நான் மிஸஸ் கணேஷ்குமாரின் உறவுதான். தூரத்து உறவு. ஓ. கே. பை. பை..."

ரிஸீவரை வைத்து விட்டு ராம்குமாரைப் பார்த்த போது சொல்ல முடியாத ஒரு வருத்தம் தெரிந்தது. "அவர்கள் அந்த வீட்டிற்குப் புதிதாகக் குடி வந்திருக்கிறார்களாம்.."

"அதனால் என்ன? இந்த பாம்பே கால் கிடைக்கட்டும். பேசிப் பார்க்கலாமே... அதற்குள் உன் முகம் ஏன் இப்படி வாடிப் போகணும்? என்ன ராம் இது... அவளை உற்சாகப் படுத்துவதை விட்டு விட்டு நீயே இப்படி சோர்ந்து போனால் எப்படி? ம்..." என்று பிரகாஷ் கோபித்துக் கொண்டதும் ராம்குமார் புன்னகையை வரவழைத்துக் கொண்டான்.

"சிறிது நேரம் வேறு ஏதாவது பேசலாமே... இப்படி ஏன் மௌனமாய் உட்கார்ந்திருக்கணும்," என்றான்.

"தட்ஸ் குட். ஏதாவது பேசு நித்யா..." என்று அவளைப் பார்த்தான் பிரகாஷ்.

"பேசுவதா... இப்போதா...? என்ன பேச முடியும்?"

"என்ன பேச முடியாது சொல்லு? ம்... எப்போதும் எந்தச் சந்தர்ப்பத்திலும் நமக்குச் சிரிக்கத் தெரியணும். பேச வரணும். மனசில் இருக்கிற கஷ்டம் முகத்திற்கு வராமல் யாருக்கும் தெரியாமல்—என்னைப் பார் நித்யா...? என் முகத்தில் எந்தக் கஷ்டமாவது தெரிகிறதா? எந்த வருத்தமாவது புரிகிறதா—"

"உனக்கென்ன கஷ்டம் பிரகாஷ் முகத்தில் தெரிய? மனசில் இருந்தால்தானே தெரிய முடியும்...?"

"அது சரி. பகல் நேரத்தில் நட்சத்திரம் தெரிய

வில்லை என்பதற்காக வானத்தில் நட்சத்திரங்களே இல்லை என்று சொல்லி விட முடியுமா என்ன?''

''முடியாதுதான்...'' என்று ஒரு விநாடி யோசித்துப் பின் கனிவாகக் கேட்டான் ராம்குமார்.

''உனக்கென்ன கஷ்டம் பிரகாஷ். என்னிடம் சொல்லக் கூடாதா...? நான் பகிர்ந்து கொள்ளக் கூடாதா? இப்போது எங்களுடைய கஷ்டத்தை நீ பகிர்ந்து கொள்ள வில்லையா...?''

பிரகாஷ் ஏதோ சொல்ல வாயெடுத்தபோது டெலிபோன் அடித்தது. சட்டென்று ரிஸீவரை எடுத்தான்.

''எஸ். ப்ளீஸ்...?''

''பாம்பே கால் டாக்டர். ஸ்பீக் ஆன்.'' ஆப்பரேட்டரின் குரலுக்கப்புறம் கனமாய் ஒரு ஆண்குரல் கேட்டது.

''எஸ், டாக்டர் பாஸ்கரன் ஹியர்...''

டாக்டர் பாஸ்கரன்! எந்த பாஸ்கரன்? பம்பாயில் எத்தனை டாக்டர்கள் எத்தனை பாஸ்கரன்கள். அதில் இவர் எந்த பாஸ்கரன்? தன் நினைவில் அவர் பெயரைத் தேடினான் ராம்குமார். சட்டென்று எதுவும் ஞாபகத்திற்கு வராமல்—

''ஐயம் டாக்டர் ராம்குமார். சென்னையிலிருந்து பேசுகிறேன்,'' என்றான்.

''சென்னையிலிருந்தா? விச் ராம்குமார் ப்ளீஸ்?''

அவன் தன் நர்ஸிங் ஹோம் பெயரை சொன்னதும்—

''ஹலோ...அந்த ராம்குமாரா? உங்களைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். போன இஷ்யு மெடிக்கல் ஜர்னலில் கூட கான்ஸர் ஆபரேஷன் பற்றி ஒரு கட்டுரை எழுதி இருந்தீர்கள்.''

''எஸ். அதே ராம்குமார்தான். நினைவு வைத்துக் கொண்டிருக்கிறீர்களே—''

''என்னிடம் வருகிற கட்டுரை ஆசிரியர்களின் பெயர் கூட மறந்து போனால் எப்படி?''

''மை குட்நெஸ். யு ஆர் தட் டாக்டர் பாஸ்கரன். ஐயம் சாரி டாக்டர். அது தெரியாமல் பேசிக் கொண்டிருக்கிறேன்.''

''தெரியாமல் பேசிக் கொண்டிருக்கிறீர்களா? என்ன சொல்கிறீர்கள். எனக்குப் புரியவில்லை...''

''எஸ் டாக்டர். நான் நீங்கள் யார் என்பது தெரியாமல் கிடைத்த டெலிபோன் நம்பரை மட்டும்

வைத்துக் கொண்டு முயற்சி பண்ணிக் கொண்டிருந்தேன். உங்களிடம் ஒரு உதவிக்காக—''

''உதவியா? என்ன வேண்டும் சொல்லுங்கள்.''

''ஒரு சின்ன இன்ஃபர்மேஷன் டாக்டர். யு நோ மிஸ் நித்யா...?''

அந்தக் கேள்வியில் அடிபட்டவராக அவர் அரை விநாடி பேசாமல் இருந்து பின் ஒரு ஆழமான பெருமூச்சோடு சொன்னார்.

''ஷி ஈஸ் நோ மோர்.''

''அது தெரியும் டாக்டர். விமான விபத்தில் அவர்கள் இறந்து போனது தெரியும். ஆனால் அவர்களைப் பற்றின விவரங்கள்—''

''உயிரோடு இல்லாத ஒருத்தியைப் பற்றின விவரங்கள் எதற்கு?''

''ஐயம் ஸாரி டாக்டர். உயிரோடு இருக்கிற ஒருவருக்கு அவை உதவக் கூடும்.''

''புரியவில்லை.''

''புரியும்படி நேரில்தான் டாக்டர் சொல்ல முடியும். நீங்கள் அந்த நித்யா யார் என்று சொன்னால் நான் நேரில் வரவும் தயாராக இருக்கிறேன்.''

''அவள் என்னுடைய டாட்டர்...''

''வாட்?''

''எஸ். நித்யா என் பெண்தான்.''

ராம்குமாரால் சிறிது நேரம் எதுவும் பேச முடியாமல் போயிற்று. பின் தன்னைச் சமாளித்துக் கொண்டு—

''மறுபடியும் ஞாபகப் படுத்தினதற்கு நான் மிகவும் வருத்தப்படுகிறேன் டாக்டர். ஆனால்...ஆனால்... எனக்கும் வேறு வழி இல்லை டாக்டர். உங்களை ஒரு தரம் நேரில் பார்க்கலாமா டாக்டர். ப்ளீஸ்...''

''என்ன விஷயத்திற்காக என்பதை நான் தெரிந்து கொள்ளலாமா ராம்குமார்...?''

அவன் சற்றுத் தயங்கி, ''நித்யா விஷயமாகத் தான்,'' என்றான்.

''நித்யா விஷயமா?''

''ப்ளீஸ் டாக்டர். வேண்டாம் என்று சொல்லி விடாதீர்கள். இந்தச் சந்திப்பு ஒரு பெண்ணின் வாழ்க்கைக்கு உதவி செய்யக் கூடும்...''

# 10

மறுநாள் மாலை பம்பாய் விமான நிலையத்தில் இறங்கிய போது நல்ல மழை பெய்து கொண்டிருந்தது. அங்கேயே செந்தூர் ஓட்டலில் ஒரு அறை எடுத்துக் கொண்டான் ராம்குமார். அங்கிருந்தே டாக்டர் பாஸ்கரனுக்கு போன் பண்ணினான். அவர் அதே கனமான குரலில் நிதானமாகப் பேசினார்.

''எங்கே தங்கியிருக்கிறீர்கள்?''

சொன்னான்.

''எப்போது வருகிறீர்கள்?''

''இன்னும் அரை மணி நேரத்தில் உங்களுக்கு சௌகரியப் படுமா டாக்டர்...?''

''ஓ. எஸ். வாருங்கள்...'' என்று தயங்கிப் பின், ''அந்தப் பெண்ணோடுதான் வருகிறீர்களா?'' என்று கேட்டார்.

''நோ. முதலில் நான் மட்டும் தனியாகத்தான் வருகிறேன்.''

ரிஸீவரை வைத்து விட்டு நித்யாவிடம் சொல்லிக் கொண்டு டாக்ஸி பிடித்து அவன் போனபோது வீடு அமைதியாக இருந்தது. பெரிய பெரிய மரங்களும் புல் தரையுமாக விசாலமாகத் தெரிந்தது. வாசல் சுவரின் பெயர் பலகையில் 'ஏஞ்சல்' என்று மங்கல் விளக்கில் எரிந்து கொண்டிருந்தது. அவன் வாசல் கூர்க்காவிடம் சொல்லி யனுப்பிவிட்டுக் காத்திருந்தான். வரச் சொல்லி பதில் வந்ததும் உள்ளே போனான்.

வாசல் புல்தரையின் குடை நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தார் பாஸ்கரன். உயரமும் பருமனும், தடித்த கருப்பு பிரேம்போட்ட கண்ணாடியும் புகைகிற பைப்புமாய் முஜிபூர் ரஹ்மானை ஞாபகப் படுத்தினார்.

அவன் அருகில் போய் 'குட் ஈவனிங்' சொன்னதும் அவர் எழுந்து கைகுலுக்கினார். பின் ''இஃப் யு டோண்ட் மைண்ட். இங்கேயே உட்காரலாமா?'' என்று கேட்டார்.

"ஓ. எஸ்" என்று தலையாட்டிக் கொண்டே எதிரில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்தான் அவன். டீபாய் மீதிருந்த விஸ்கி சோடா பாட்டில்களையும், டம்ளரையும், ஐஸ் பெயிலையும் பார்த்தான். அந்தப் பார்வையை கவனித்ததும் "டூ யு ட்ரிங்?" என்று கேட்டார்.

"நோ. தாங்க்ஸ்."

"வேறு என்ன சாப்பிடுகிறீர்கள்?"

"ஒன்றும் வேண்டாம். ப்ளீஸ்..."

"ஓ. கே. சொல்லுங்கள்" என்று நேராக விஷயத்திற்கு வந்தார். "என்ன கேட்க வேண்டும் என்னிடம்..?"

"உங்கள் பெண் நித்யாவைப் பற்றி..."

"அதுதான் போனில் சொன்னீர்களே..." என்று சற்று நிறுத்தி பின்— "என்ன தெரிய வேண்டும் அவளைப் பற்றி...?" என்றார்.

"டாக்டர், உங்களை நான் கஷ்டப் படுத்துவதாக, மறந்து போக நினைப்பதை நினைவு படுத்துவதாக நினைக்காமல்—"

"மறப்பதா? என் நித்யாவையா...? ஹௌ கேன் ஐ? முடியுமா என்றால்? முடியும் என்றால் இதெல்லாம் எதற்கு?" என்று அந்த பாட்டில்களைக் காட்டினார் அவர். பின் மடமடவென்று பேசிக் கொண்டு போனார்.

"இந்த வீட்டின் பெயர் என்ன தெரியுமா டாக்டர் ராம்குமார். ஏஞ்சல். அவள் வைத்த பெயர். அவளே ஒரு ஏஞ்சல்தான். மனசால்—உடம்பால்—அழகால்... அவளை இழந்தது எத்தனை பெரிய துர்ப்பாக்கியம் ராம்குமார்..."

அவன் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தான். அவராகச் சொல்லட்டும் என்று மௌனமாக இருந்தான்.

"நீங்கள் அவளைப் பார்த்திருக்க வேண்டும். என் தோளுக்கு வருவாள். என்னைவிட நிறமாக—புத்திசாலியாக — உயிரோடு இருந்திருந்தால் என்னைவிடப் பெரிய டாக்டராகக் கூட வந்திருப்பாள். என்னுடைய நர்ஸிங் ஹோமும்கூட அவளுக்காகக் கட்டினதுதான். அவளுடைய அம்மா பெயரில் அவள் நினைவாக— ஆனால் ஒரு மாதம் கூட அவள் அதில் ப்ராக்டீஸ் பண்ணவில்லையே ராம்குமார்."

அவனுடைய இதயத் துடிப்பு சட்டென்று நின்று மீண்டும் தொடர்ந்தது. டாக்டர்! இவருடைய பெண் நித்யா ஒரு டாக்டர்...

சட்டென்று ஒவ்வொன்றாக நினைவுக்கு வர— நித்யா...நித்யா! நீ கணேஷின் மனைவி நித்யா

இல்லே. அவன் எழுதின நித்யா இல்லே. நீ—

டாக்டர் நித்யா... டாக்டர் பாஸ்கரனின் பெண் நித்யா—அந்த சந்தோஷத்தை வெளிக்காட்டாமல் கேட்டான் அவன்.

''ஒரு நிமிஷம் டாக்டர். விமான விபத்தில் இறந்து போன உங்கள் மகளின் உடம்பை நீங்கள் பார்த்தீர்களா?''

''ஓ. எஸ். பார்த்தேன்.''

''எப்படி அடையாளம் கண்டு பிடித்தீர்கள்?''

''அடையாளம் கண்டு பிடிப்பதா? கருகிப் போன அந்த உடம்பையா... மை குட்நெஸ். எப்படி முடியும் என்னல்? வெள்ளே வெளேரென்று மினுமினுவென்ற என் நித்யாவின் நிறம்—அந்தப் பளபளப்பு—அவர்கள் காட்டின போது கருகி—எரிந்து—பார்க்கவே பயப்படுகிற மாதிரி—''

''ஜஸ்ட் எ மினிட். அதுதான் உங்கள் பெண் நித்யா என்று பின் எப்படித் தெரிந்தது?''

''அவர்கள் சொன்னர்கள்.''

''எவர்கள்?''

''ஏர்லைன்ஸ் அதிகாரிகள்.''

''உங்களுக்கு பி.பி. உண்டா டாக்டர்?''

''நோ..''

''ஹௌ எபௌட் யுவர் ஈ. ஸி. ஜி. அண்ட் கார்டியோகிராஃபி...?''

''ஓய்...ஐயம் நாட் என் ஹார்ட் பேஷண்ட்.''

''வெரிகுட். நீங்கள் இதய பலவீனமானவரா என்பதைத் தெரிந்து கொள்ளத்தான் கேட்டேன்.''

''எதற்கு...?''

''சொல்லுகிறேன். முதலில் என்னுடன் கிளம்பி வாருங்கள்.''

''எங்கே.''

''ஓட்டலுக்கு—என் அறைக்கு...''

''எதற்காக அங்கே கூப்பிடுகிறீர்கள்?''

''உங்கள் நித்யாவை நீங்கள் பார்க்க வேண்டாமா?''

''என்ன!''—சட்டென்று நாற்காலியை விட்டு எழுந்தார். கைத்தடியை அழுத்தமாகப் பற்றிப் புல் தரையில் ஊன்றினர்.

''என்ன சொல்கிறீர்கள் நீங்கள்?''

"வாருங்கள். போய்க் கொண்டே பேசலாம். எங்கே இருக்கிறது உங்கள் கார்?"

நடுங்குகிற கையால் ஷெட்டைக் காட்டினார். ராம்குமார் ஷெட்டிலிருந்து அந்தப் பெரிய வெளிநாட்டுக் காரை எடுத்துக் கொண்டு வந்தான். அவர் ஏறினதும் சத்தப்படுத்தாமல் கிளப்பினான்.

வழியில் ஒவ்வொன்றாகச் சொல்லிக் கொண்டு வந்தான். நித்யாவைச் சந்தித்தது—தன் நர்ஸிங் ஹோமிற்குக் கொண்டு வந்தது—தலையில் பட்ட காயத்திற்குத் தையல் போட்டு—ரத்தம் ஏற்றி—பின் அவளை வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போனது—கணேஷின் மனைவி என்று நினைத்தது—அவள் நர்ஸிங் ஹோமிற்கு வந்தது—டெலிவரி பார்த்தது—கடைசியில் மல்ஹோத்ராவைச் சந்தித்தது—விலாசம் கண்டு பிடித்து டெலிபோன் பண்ணினது—

ஒரு வார்த்தை பேசாமல் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டார் பாஸ்கரன். கடைசியில்—

'மைகாட்...மைகாட்' என்று அரற்றினார். பின் சட்டென்று நினைவிற்கு வந்தவராக? "அவள் ஏன் இத்தனை நாள் பேசாமல் இருந்தாள். தன்னைப் பற்றின விவரங்களைச் சொல்லாமல் இருந்தாள்?" என்று கேட்டார்.

"அதற்கும் காரணம் இருக்கிறது டாக்டர். தலையில் அடிபட்டதாலோ இல்லை விமான விபத்தின் அதிர்ச்சியினாலோ அவளுக்கு எல்லாம் மறந்து போய் விட்டது. எதுவும் நினைவில்லை. உங்கள் பெயர்கூட அவளுக்குள் எந்தச் சலனத்தையும் ஏற்படுத்தவில்லை..."

"ஈஸ் இட்...யு மீன் இட் ஈஸ் அம்னீஷியா?"

"எஸ். டாக்டர் கல்யாணசுந்தரமும், டாக்டர் விஜயகுமாரும் கூட அதுதான் சொல்கிறார்கள்."

"எந்தக் கல்யாணசுந்தரம், எந்த விஜயகுமார். நியூரோஸர்ஜன் கல்யாணசுந்தரமும் ஸைக்கியாட்ரிஸ்ட் விஜயகுமாருமா...?"

"எஸ். இப்போதும் உங்களைப் பார்த்தால் அவள் புரிந்து கொள்வாளோ என்னவோ...?"

அதே மாதிரி நித்யா அவரைப் புரிந்து கொள்ளவில்லை. அவரை வெறும் டாக்டர் பாஸ்கரன் என்று ராம்குமார் அறிமுகப்படுத்தினதும் கைகுவித்தாள். அந்தக் கை குவிப்பு—முகத்தின் பாவமற்ற தன்மை—வெறுமையாய்ப் பார்த்த பார்வை...

அதற்கு மேல் தாங்க முடியாதவராக அவள் அரு

கில் போனார். மெதுவாய் அவளை கைகளைப் பற்றினார் அவள் எதிரில் நிற்பது நிஜம்தான் பொய்யில்லை என்று தீர் மானப்படுத்திக் கொள்கிற மாதிரி தொட்டுப் பார்த்தார். பார்க்கும்போதே பார்வையைக் கண்ணீர் மறைத்தது. குரல் கரகரத்தது.

"நித்யா...என்னை உனக்குத் தெரியலை?"

இல்லை என்று தலையாட்டினாள்.

"நான் யார் என்பது நினைவில்லை?"

மறுபடியும் அதே தலையாட்டல்.

"நினைவே இல்லையா நித்யா உனக்கு!"

"இல்லை."

"நான் பாஸ்கரன்மா. உன் அப்பாமா.."

"அப்பாவா...? நீங்களா...?"

"நான்தான்மா...யோசித்துப் பாரும்மா. கொஞ் சம் நிதானமாய் மெதுவாய் ஒவ்வொன்றாக..."

அவள் யோசிக்கிற பாவனையில் அவரைப் பார்த் தாள். பின்—

"இல்லை, எதுவும் நினைவுக்கு வரவில்லை," என் றாள்.

"பரவாயில்லை. எதுவும் நினைவிற்கு வராமற் போனாலும் பரவாயில்லை. ஆனால் நான் உன்னுடைய அப்பா என்பதை நீ நம்புகிறாயா நித்யா. மனசு பூர்த்தியாய் ஏற் றுக் கொள்கிறாயா?"

அவரை—அவர் முகத்தை—கண்களைக் கூர்மை யாகப் பார்த்தாள் நித்யா. அதில் பொய்யில்லை. ஏமாற்ற மில்லை. வஞ்சனையில்லை. அன்பாய்—மிகவும் பிரியமாய்— உலகத்திலேயே தான் அதிகம் நேசிக்கிற ஒரு உயிரைப் பார்க்கிற பாவமாய்...

இவர் அப்பாவாக இருக்க நிச்சயம் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டு லேசான புன்சிரிப்போடு அவரைப் பார்த்தாள்.

அந்தப் புன்னகையில் குளிர்ந்து போனார் அவர்.

அடுத்த பத்து நிமிஷத்தில் அறையைக் காலி பண்ணி விட்டு அவருடைய வீட்டிற்குப் போனார்கள். அவர் ஒரு குழந்தைக்குக் காட்டுகிற மாதிரி ஒவ்வொரு அறையாக அழைத்துக் கொண்டு போய்க் காட்டினார். ஹாலில் மாட்டி யிருந்த அவளுடைய படத்தை—அவள் அம்மாவின் படத்தை—அவள் உபயோகித்த அறையை அந்த மேஜை— பீரோ—கட்டில்—புத்தகங்கள்—ஒவ்வொன்றையும் காட்டும்

போதும்—

இது நினைவில்லையா?

இது நினைவிருக்கிறதா பார்...

இந்த ஆல்பம் நினைவிருக்குமே...

இதோ இந்த அசோக மரம் ஞாபகத்திற்கு வருகிறதா?

போகட்டும், டைனியை ஞாபகமிருக்கிறதா பார் நித்யா—

அந்த வெள்ளை பாமொரேனியன் அவள் மடியில் விழுந்து புரண்டது. உடம்போடு ஒட்டிக் கொண்டது. கைகளை நக்கிக் கொடுத்தது. ஒவ்வொரு செய்கையிலும்—

'நீ நித்யாதானே...நீ நித்யாவேதான்' என்று சொல்கிற பரிவோடு—

'இதைக் கூட நினைவில்லையா நித்யா...' என்று உடைந்து போன குரலில் பாஸ்கரன் கண்கலங்கினதும்—

"என்ன டாக்டர் இது?" என்று அவர் கையை ஆதரவாகப் பற்றிக் கொண்டான் ராம்குமார்.

"குழந்தை மாதிரி கேட்கிறீர்களே டாக்டர். உங்கள் மனசு எனக்குப் புரிந்தாலும் அதன் ஆதங்கம் புரிந்தாலும் அவளுக்குத் தானாக எல்லாம் நினைவிற்கு வருகிற வரை இப்படியே—இதே நித்யாவாக ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை டாக்டர்..."

"நான் அப்படி ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன் ராம். ஒருவேளை அவளுக்குத் தன் கடந்த கால நினைவுகளே வராமற் போய் விட்டால்?"

"போய் விட்டால்தான் என்ன டாக்டர்?"

"நீங்கள் சொல்கிறீர்கள். ஆனால் இதனால் அவள் எதிர்காலம் பாதிக்கப்படுமானால்...அவள் வாழ்க்கை வெறுமையாய் போகுமானால்... நீங்களே டெலிபோனில் சொல்ல வில்லையா ராம். அதற்காகத்தான இங்கே வருவதாகக் கேட்க வில்லையா?"

"—கேட்டேன். இப்போது இதையும் நான்தானே கேட்கிறேன்."

"நீங்கள் அவளைச் சரியாய்ப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். நன்றாய்த் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள். வேறு யார் இப்படித் தெரிந்து கொள்ளப் போகிறார்கள்?"

"வேறு யார் தெரிந்து கொள்ள வேண்டும்?"

அந்தக் கேள்வியில் பளிச்சென்று ஏதோ புரிய அவர் அவன் கைகளைப் பற்றிக் கொண்டார்.

"—ஷி ஈஸ் வெரி லக்கி ராம்..."

"அவள் மட்டுமில்லை. நான் கூடத்தான்," என்றான் ராம்குமார்.

விமானம் சென்னைக்குப் போய்க் கொண்டிருந்தது. மீனம்பாக்கத்தில் இறங்க இன்னும் நாற்பத்தைந்து நிமிஷங்கள் இருந்தன. ராம்குமார் மெதுவாகக் குனிந்து நித்யாவின் காதருகில் போய்ச் சொன்னான்.

"இந்த விமானம் இப்போது விபத்துக்குள்ளானால் எப்படி இருக்கும் நித்யா?"

சட்டென்று விமானம் ஒரு குலுங்கல் குலுங்கியது. பணிப்பெண் ஸீட் பெல்ட்டைப் போட்டுக் கொள்ளும் அறிவிப்பைச் சொன்னாள். "நான் உங்கள் காப்டன் பேசுகிறேன். எதிர்பாராத விதமாக உங்களின் இந்த விமானத்தின் என்ஜின் பழுதாகி மேற்கொண்டு இயங்க முடியாமல் போய் எமர்ஜென்ஸி லாண்டிங்கில் கீழே இறங்க முயற்சி பண்ணப்படுகிறது. நீங்கள் யாரும் பயப்படாமல், சத்தம் போடாமல் அமைதியாய் தைரியமாய் எங்களோடு ஒத்துழைப்பீர்கள் என்று நம்புகிறேன்."

அறிவிப்பு நின்று எல்லோரும் ஸீட் பெல்ட்டைப் போட்டுக் கொண்டு பயந்த முகங்களாய் பக்கத்தில் இருப்பவர்களின் கையை இறுகப் பற்றிக் கொண்டு ஆபதாம அவதாரம் சொல்லி, கந்த சஷ்டி கவசம் முணுமுணுத்து, பரமண்டலத்தில் இருக்கிற எங்கள் பிதாவே சொல்லி—

இந்த அத்தனை கடவுள்களையும் ஏமாற்றி எப்போதோ தீர்மானிக்கப்பட்ட விதியின்படி கீழே இறங்கும் போது காத்துக் கொண்டு நின்ற அத்தனை தீயணைக்கும் என்ஜின்களுக்கும் ஆம்புலென்ஸிற்கும் அதிகாரிகளுக்கும் வேலை இல்லாமற் போய் விடக் கூடாதே என்று பெரிதாய் ஒரு வெடி சத்தத்தில் தீப் பிடித்து எரிந்து... கத்தல்களும் அலறல்களுமாக...

"ராம்..."என்ற நித்யாவின் குரல் கேட்டு...

"நித்யா..." என்ற கடைசி வார்த்தையோடு நினைவிழக்கிறான் ராம்குமார்.

ஆஸ்பத்திரியில் தனி அறையில் கண் விழித்த போது கையில் ஸ்டெதஸ்கோப்புடன் நித்யாவும், பாஸ்கரனும், பிரகாஷும், ஷீலாவும் அம்மாவும்...

"உங்களுக்கு நினைவில்லை...?"—இப்போது நித்யா கேட்கிறாள்.

''இருக்கிறது.''

''நீங்கள் யார்?''

''டாக்டர் ராம்குமார்.''

''நான் யார்?''

''நித்யா...''

''வெறும் நித்யா இல்லை. டாக்டர் நித்யா.''

''அப்புறம்?''

''டாக்டர் பாஸ்கரனின் பெண் நித்யா...''

''அதற்கும் அப்புறம்?''

''யு நோ.. டாக்டர் ராம்குமார்—அதான் அந்த சிடுமூஞ்சிக் கிழ டாக்டர்...''

''எஸ் ஐ நோ...எதற்கும் யாரையும் சந்தேகப் பட்டுக் கொண்டு சள்சள்ளென்று விழுந்து கொண்டு..''

''எக்ஸ்ஸாட்லி. அதற்கு இன்னும் ஒரு வாரத்தில் மனைவியாகப் போகிற நித்யா...''

எல்லாரும் சிரிக்கிறார்கள். அவன் தலைக்கட்டை யும் போர்வையையும் உதறிப் போட்டுவிட்டு எழுந்து உட் காருகிறான்.

''யுவர் அட்டென்ஷன் ப்ளீஸ். பாஸென்ஜர்ஸ் ஆர் ரிக்வெஸ்டட்டு பாஸன் தேர் ஸீட் பெல்ட்ஸ்...''

விமானப் பணிப் பெண்ணின் குரலில் சட்டென்று கலைந்து நிமிர்ந்து பார்த்தபோது—

சிரிக்கிற முகங்கள்.

சந்தோஷமாய்—

உற்சாகமாய்—

பரபரப்பாய்—

'மை குட்நெஸ்! என்ன கற்பனை இது. இந்த அளவிற்கா இந்த விமான விபத்து நம் அடி மனசில் இறங்கிப் போயிருக்கிறது?' என்று நினைத்துக் கொண்டான்.

அடிமனசில் இறங்கிப் போயிருப்பது விபத்தா? இல்லை நித்யாவா? என்று தோன்றினதும் அவளைத் திரும்பிப் பார்த்து மென்மையாய் சிரித்தான்.

''என்ன சிரிக்கிறீர்கள்...?''—நித்யா கேட்டதும்

''ஒன்றுமில்லை'' என்று மீண்டும் சிரித்தான்.

விமானம் மெதுவாய்த் தழைந்து தரையில் இறங்கி ரன்வேயில் ஓடி மூச்சுஇரைக்க நின்றதும் ஒவ்வொருவராகக் கீழே இறங்க ஆரம்பித்தார்கள்.

(முற்றும்)